படைப்பு
சமூகத்தின் இணைப்பு

ஊற்று-8 | நதி-2 | ஜூன் 2025 | திங்களிதழ்
ISSN: 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



"இலக்கிய உலகில் இதுவரை யாரும் எழுதாத ஒரு வரியையாவது நான் எழுத வேண்டும்.."

– கவிஞர் பிருந்தா சாரதியுடனான நேர்காணல்

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-8 | நதி-2 | ஜூன் 2025

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**
•
ஆசிரியர்:
**ஆசியாதாரா**
•
நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**
•
தலைமை நிருபர்:
**க.சோ.திருமாவளவன்**
•
நிருபர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**
•
வடிவமைப்பு:
**தேவம் ஆரோன்**
•
ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**
•
படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com
•
அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
**admin@padaippu.com**
***73388 97788 / 73388 47788***

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

• தலையங்கம் ................................ ப. 4

• “இலக்கிய உலகில் இதுவரை யாரும் எழுதாத ஒரு வரியையாவது நான் எழுத வேண்டும்..”
– கவிஞர் பிருந்தா சாரதியுடனான நேர்காணல் ............ ப.5

• கவிதைக்குள் கலந்திருக்கும் கதை
– மு.முருகேஷ் ................................ ப. 24

• வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும் - மேற்கத்தியக் கருதுகோள்
– ஆதிரன் ................................ ப. 36

• ஊழிக்கூத்து – உணர்ந்தார்க்குப் பேரனுபவம்!
– கவிதா லட்சுமி ................................ ப. 45

• கூமாபட்டியும்... புத்தகத் திருவிழாவும்
– ஆண்டன் பெனி ................................ ப. 56

• அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..
– கடிதங்கள் ................................ ப. 61

## சிறுகதைகள்


- விமோசனம்
  - அன்பழகன்.ஜி ................................ ப. 17
- பொன்னுத்தாயி
  - தி.வள்ளி ................................ ப. 31
- கண்ணாடி பிம்பத்தில் கடவுள்
  - ப. ராஜ்குமார் சிவன் ................................ ப. 41
- பழி
  - என்.பாலாஜி ................................ ப. 48
- வண்டுவாஞ்சேரி வாணராயன்
  - லக்ஷ்மி ஜயராமன் ................................ ப. 58


## கவிதைகள்


- மு. ரகுபதி ................................ ப. 63
- ச.ஜெய் ................................ ப. 63





## Facilities

- Capacity 90 - 100 (Persons)
- AC Hall with Audio system
- POP with Profile lights
- Tea / Coffee snacks place
- Projector

படைப்பு அரங்கம்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024
+917338897788

# தலையங்கம்

வணக்கம். படைப்பு 'தகவு' எண்பத்தாறாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

இவ்இதழில் கவிஞர் பிருந்தா சாரதியுடனான நேர்காணல் இடம்பெற்றுள்ளது. பாடலாசிரியர், திரைப்பட இயக்குநர், உரையாடல் ஆசிரியர் என்று எழுத்து சார்ந்த துறைகளில் தனது முத்திரையினைப் பதித்தவர். இலக்கியப் பயணம் குறித்த அவரது விரிவான உரையாடல் இதழில் இடம்பெற்றுள்ளது. அடுத்த இதழிலும் தொடர்ந்து இடம்பெறும்.

கவிஞர் மு.முருகேஷ் சமகாலத் தமிழ்க் கவிஞர்கள் குறித்துப் பரவலான அறிமுகம் செய்து எழுதிய 'கவிதைக்குள் கலந்திருக்கும் கதை' தொடர் இந்த இதழுடன் நிறைவு பெறுகிறது. கவிஞர்களின் கவிதைகளில் இடம்பெற்றிருக்கும் கதைக் குறிப்புடைய கவிதைகளை எடுத்துக்காட்டுவதாகக் கட்டுரைகள் அமைக்கப்பட்டிருந்தன. கவிஞர்களின் கவிதைகளோடு தனக்கு ஏற்பட்ட அறிமுகத்தைக் கூறிக் கட்டுரையைத் தொடங்கும் மு.முருகேஷ் கவிஞர்களின் கவிதைப் பங்களிப்பை முழுவதுமாகப் பேசியிருப்பார். சிறந்த கவிதை வரிகளை எடுத்துக்காட்டி, கவிதைகள் சுமந்திருக்கும் கதைக்குறிப்பையும் சுட்டிக்காட்டுவார். பரவலான அறிமுகம் பெற்ற கவிஞர்கள், சில கவிதைகளாலேயே அறியப்பட்ட கவிஞர்கள், பெண் கவிஞர்கள், பாடலாசிரியர்கள் என அனைத்துத் தரப்பு தமிழ்க் கவிஞர்கள் குறித்தும் எழுதியிருந்தார். தமிழ்க் கவிதையுலகம் குறித்த ஆவணமாய் அக்கட்டுரைகள் அமைந்திருந்தன. இக்கட்டுரைகள் நூல் வடிவம் பெறும் நிலையில் நல்லதொரு கவனத்தைப் பெறும்.

கவிஞர் விக்ரமாதித்யனுக்குச் சிற்றிதழாசிரியர் குன்றம் மு.இராமரத்நம் எழுதியுள்ள கடிதங்கள் இவ்இதழில் வெளியாகியுள்ளன. தொண்ணூற்றாறாம் ஆண்டு எழுதப்பட்ட கடிதங்கள் கவிதைப் பிரசுரிப்பு குறித்தும் கவிதைப் போக்கு குறித்தும் குறிப்பிட்டுள்ளன. வெற்றி குறித்த மேற்கத்தியக் கருதுகோள்களை வானவில் வண்ண மின்னல் பகுதி அலசியுள்ளது. புத்தகத் திருவிழா குறித்த எள்ளல் கட்டுரையை ஆண்டன் பெனி எழுதியுள்ளார். புத்தகங்களை வாசிப்பதைத் தூண்டுவது என்ற நிலையைத் தாண்டி ஊரில் ஒரு திருவிழா என்ற அளவில் மக்களைச் சென்று அடைந்திருக்கும் போக்கைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். வாசகர்கள், எழுத்தாளர்கள் என்னும் இரு வகையினரிடத்தும் புத்தகத் திருவிழா எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைச் சுவைபடச் சொல்லியிருக்கிறார். பாரதியின் ஊழிக்கூத்து கவிதை குறித்துக் கவிதா லட்சுமி எழுதியுள்ள கட்டுரை வெளியாகியுள்ளது.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

– ஆசிரியர்



# "இலக்கிய உலகில் இதுவரை யாரும் எழுதாத ஒரு வரியையாவது நான் எழுத வேண்டும்.."


## – கவிஞர் பிருந்தா சாரதியுடனான நேர்காணல்

'கற்றுக்கொள்ளும் மனம் இருந்தால் கடிகார முட்களிடம் இருந்தும் வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம்; நாமோ மணி பார்க்கும்போது மட்டுமே கடிகாரத்தைக் கவனிக்கிறோம்' என்று தனது கவிதைகளால் அதிர வைத்தவர் கவிஞர் பிருந்தா சாரதி. பல்வேறு வெற்றிப் படங்களுக்கு உதவி மற்றும் இணை இயக்குநராகவும், இயக்குநராகவும், உரையாடல் ஆசிரியராகவும் பணியாற்றித் திரைப்படத் துறையில் தடம் பதித்தவர் பிருந்தா சாரதி. அவருடனான ஒரு பொன்மாலைப்பொழுதின் நேர்காணல்...

**கவிதைகளிலும் சரி, ஹைக்கூவிலும் சரி, உங்களுடைய உயரம் என்பது கூடிக்கொண்டேதான் போய்க்கொண்டிருக்கிறது. அதற்காக தகவின் அன்பான வாழ்த்துக்களும் வணக்கமும். உங்களுடைய வாழ்க்கையும் இலக்கியமும் எங்கு எப்போது தொடங்கின?**

மதுரை மாவட்டம் மேலூர் பக்கத்தில் இருக்கிற சண்முகநாதபுரம் எங்க ஊர். அங்கிருந்து பிழைப்புக்காக நான் பிறப்பதற்கு முன்னாடியே எல்லோரும் கும்பகோணத்துக்கு வந்துவிட்டார்கள். ஐம்பதுகளில் தென் மாவட்டங்களில் மழை இல்லாததால் வறட்சி.. வானம் பார்த்த பூமி. பிழைப்பு தேடி ராமநாதபுரத்தில் இருந்து, மதுரையிலிருந்து, தென் மாவட்டங்களிலிருந்து எல்லோரும் தஞ்சாவூர் நோக்கித்தான் வந்தார்கள். அப்போது அப்பா கிளம்பி வந்து அவருடைய மாமாவின் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். கும்பகோணம் வந்த பிற்பாடு இரண்டு மூன்று வருடங்கள் கழித்துத்தான் நான் பிறந்தேன். எனக்கு முன்பு இரண்டு அக்காக்கள். எங்கள் வீட்டில் முதல் ஆண் குழந்தை நான்தான்.

என்னுடைய ஆரம்ப காலப் படிப்பு, கல்லூரிப் படிப்பு எல்லாமே கும்பகோணத்தில்தான். எங்கள் வீட்டைப் பொறுத்தவரைக்கும் பையன் பிறந்துவிட்டான், அவன் கலெக்டரோ டாக்டரோ ஆவான், பெரிய வேலைக்குப் போவான், நம்ம



குடும்பம் வேற மாதிரி மாறிப்போகும் என்று அவர்கள் நினைப்பு இருந்தது. ஆனால், எனக்கு ஏனோ கலை இலக்கியப் படைப்புகள் மேல் நாட்டம் அதிகமானது. நான் ஒரு ஆசிரியராக ஆவேன் என்று எதிர்பார்த்தார்கள். அவர்கள் நினைத்த அதுவும் நடக்கவில்லை.

எனக்கு எதன் மீதும் ஈடுபாடு இல்லை என்பதை எனது அப்பா புரிந்துகொண்டார். உன் பாதையில் நீ போ என்று சொன்னாலும் மனசு கேட்காமல் ஒரு கடை வைத்துத் தருவதாகக் கூடச் சொன்னார். 'எனக்குப் பிறகு கடையைப் பார்த்துக்கோ, எனக்கு எதுவும் செய்ய வேண்டாம், ஆனால் உனக்காகச் செய். ஏனென்றால், பிற்காலத்தில் உனக்குப் பெரிய வருமானமில்லாமல் ஆபத்தாக முடிந்துவிடும்' என்று சொல்லி எப்படியோ சம்மதிப்பேன் என்று பார்த்தார் எனது அப்பா.

நான் தேர்ந்தெடுத்த இந்தப் பாதையிலிருந்து பின்னோக்கித் திரும்பிப் போகணும்னு என்றைக்கும் நினைத்ததில்லை. சினிமா மீது அவ்வளவு ஆர்வம். திரைத்துறையில் இப்போது, நான் உதவி இயக்குநராக, இணை இயக்குநராக, வசனகர்த்தாவாக வேலை செய்துகொண்டு இருக்கிறேன்.

பிளஸ் டூ முடித்துவிட்டு வீட்டில் இருந்தபோது கலைஞரோட பேச்சு, கண்ணதாசனோட பாடல்கள் இவற்றையெல்லாம் கேட்டுக் கேட்டுத் தமிழ் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் வந்தது. அதைப் பள்ளிக்கூடத்தில் என் தமிழ் ஆசிரியர்கள் இன்னும் பெரிதாக உருவாக்கிவிட்டார்கள். பேச்சுப் போட்டிக்குச் செல்வேன், கவிதைப் போட்டிக்குச் செல்வேன். அதில் பரிசுகள் கிடைத்தன. பாரதியார் நூற்றாண்டு விழாவுக்குத்தான் முதன்முதலில் பேச்சுப் போட்டியில் பேசுவதற்காகச் சென்றேன். அந்தப் போட்டியில் நான் எந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்தேனோ அதே புத்தகத்தை எனக்குப் பரிசாகக்

கொடுத்தார்கள். அங்கு நான் பெற்ற பரிசு பாரதியார் கவிதை நூல்.

கல்லூரிக்கு வந்த பிறகும் கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி என்று ஆரம்பித்து மாநில அளவிலெல்லாம் பரிசு கிடைக்க ஆரம்பித்தது. அனைத்துக் கல்லூரி சார்பாக கவிதைப் போட்டி எங்கு நடந்தாலும் எங்களது கல்லூரி சார்பாக நான்தான் செல்வேன். அப்படி செல்லும்போது கம்பன் கழகம் போன்ற பெரிய அமைப்புகள் நடத்திய கல்லூரிகளுக்கிடையேயான போட்டியில், நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகளிலிருந்து கலந்துகொள்ள வந்த மாணவர்களில் முதல் பரிசு எனக்குக் கிடைத்தது.

அதற்குப்பின் கல்கி பத்திரிகை பொன்விழாவையொட்டிக் கவிதைப் போட்டி நடந்தது. அசோகமித்திரன் போன்றவர்கள் நடுவர்களாக இருந்தார்கள். அதில் எனக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது. இப்படி கலந்துகொள்கின்ற போட்டிகள் எல்லாவற்றிலும் பரிசு வாங்கும்போது எனக்கு ஒரு நம்பிக்கை வந்தது. நம்மிடம் இருக்கிற ஏதோ ஒன்று மக்களைக் கவரும் என்று நினைத்தேன்.

ஒரு பிரபலமான ஊடகத்தில் போய் வேலை செய்தால் வெற்றி பெற்றுவிடலாமென்று நினைத்தேன். அதனால் சினிமாவுக்கு வந்தேன். நடிகர் நாசரிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்து அவதாரம், தேவதை போன்ற படங்களில் வேலை செய்தேன். அதைத் தொடர்ந்து நண்பர் லிங்குசாமி என் அறைத் தோழராக வந்து சேர்ந்தார். அவரின் 'ஆனந்தம்' என்கிற முதல் படத்திற்கு வசனம் எழுதினேன். அதற்குப்பின் 'தித்திக்குதே' என்கிற படம். எனக்குப் படம் இயக்குவதற்கான வாய்ப்பு கொடுத்தது சூப்பர் குட் பிலிம்ஸ் ஆர்.பி. சௌத்ரி சார். அவரது மகன் ஜீவாவைக் கதாநாயகனாகப் போட்டு ஒரு படம் இயக்கினேன்.

தொடர்ந்து சினிமாவில் பணியாற்றினாலும் என்னுடைய ஆழ் மனதில் இருந்த கவிதையை விட்டுவிட முடியவில்லை. தொடர்ந்து எழுதிவருகிறேன். அவை இதுவரை ஒன்பது நூல்களாக வந்துள்ளன.

இப்படி சினிமாவிலும் கவிதையிலும் தொடர்ந்து பயணம் செய்துவருகிறேன். ஆனால் வாழ்க்கையும் இலக்கியமும் தொடங்கிவிட்டதா என்பதை இன்னும் முற்றிலுமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

**மிகப்பெரிய இலக்கிய ஆளுமைகளான கரிச்சான் குஞ்சு, எம் வி. வெங்கட்ராம், தேனுகா போன்றவர்களுடன் பழகிய அழகிய பொன்னான தருணங்களைப் பற்றி...**

கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியில் பிஎஸ்சி படித்துக்கொண்டிருக்கும்போது கவிதை எழுத ஆரம்பித்தேன். என்னுடைய நண்பர் தென்னிலவன் அவரின் நண்பர்களோடு சேர்ந்து "வைகறை வீதி" என்கிற இலக்கிய அமைப்பைத் தொடங்கி நடத்தினார். நானும் அதில் கலந்துகொண்டேன்.

அந்த இலக்கிய அமைப்பு நடத்தும் நிகழ்ச்சிக்கு அழைப்பதற்காகக் கும்பகோணத்தில் உள்ள எழுத்தாளர்களையெல்லாம் போய்ச் சந்திப்போம். அப்படிச் சந்தித்த எழுத்தாளர்கள்தான் கரிச்சான் குஞ்சு, எம்.வி.வெங்கட்ராம் ஆகியோர். அவர்கள் மாபெரும் மேதைகள் என்று உணராத அந்தக் காலகட்டத்திலேயே எங்கள் இலக்கிய அமைப்பு நடத்தும் நிகழ்ச்சிக்கு வாருங்கள் என்று அழைப்பு விடுப்போம்.

கரிச்சான் குஞ்சு 'பசித்த மானுடம்' என்ற மிகப்பெரிய ஒரு நாவலையும் எம்.வி.வெங்கட்ராம் 'நித்தியகன்னி', 'வேள்வித்தீ' போன்ற நாவல்களையும் எழுதிப் புகழ் பெற்றிருந்தனர். அவர்களுடன் நான் பழக ஆரம்பித்தேன். அவர்களைச் சந்திக்கும்போதெல்லாம் நான் கூறும் எனது எளிய சாதாரணக் கவிதைகளைப் பெருந்தன்மையோடு அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள்.




தேனுகா ஸ்டேட் பேங்க்கில் வேலை பார்த்தார். அவரும் அப்போதுதான் எழுத ஆரம்பித்த காலகட்டம். எம்.வி.வெங்கட்ராம், கரிச்சான் குஞ்சு இவர்களையெல்லாம் சந்திக்கும்போது அவரும் எங்களோடு சந்திக்க வருவார். அப்போது அவர் கலை இலக்கிய விமர்சனங்கள் எழுத ஆரம்பித்திருந்தார். கவிதை, ஓவியம் மற்றும் கலைகள் பற்றி நிறைய விமர்சனங்கள் எழுதுவார். அப்படி தேனுகா அவர்கள் எழுதிய முதல் கட்டுரையைக் கையெழுத்துப் பிரதியாகவே நான் படித்திருக்கிறேன்.

அதே போன்று எம்.வி.வெங்கட்ராம் அவர்களின் 'காதுகள்' என்கிற நாவல் சாகித்ய அகாதமி விருது பெற்றது. அந்த நாவல் அச்சாகி வெளிவரும் முன் கையெழுத்துப் பிரதியாகவே என்னிடம் கொடுத்து 'நீ படிச்சிட்டு உன்னோட அபிப்பிராயத்தைச் சொல்லு', என்றார். நான் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய்ப் படிக்க ஆரம்பித்தேன். அந்தக் கதையில் இருக்கிற கதாநாயகனுக்கு ஒரு உளவியல்ரீதியான பிரச்சனை. அதுதான் அந்த நாவலின் முக்கியமான கரு. அதில் வரும் கதாநாயகனின் காதில் வேறு வேறு கதாபாத்திரங்கள் வந்து பேசும், கத்தும், கூச்சல் போடும். அவனைக் கொடுமைப்படுத்துகிற மாதிரி அவன் காதில் கெட்ட வார்த்தைகளில் திட்டும்.

அதாவது மனரீதியாக உளவியல்ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள், மனப்பிறழ்வுக்கு ஆட்பட்டவர்கள், அதில் உச்சகட்டத்துக்குப் போகும்போது இது மாதிரி எல்லாம் கேட்கும். நாம் சாதாரணமாக அவர்களைப் பைத்தியம் என்று சொல்லிவிட்டுக் கடந்து போய்விடுகிறோம். ரோட்டில் போய்க்கொண்டு இருப்பவர்களைப் பார்த்துத் திடீரென்று 'போடா அவனே... இவனே...' னு திட்டுவார்கள். எதனால் அப்படி திட்டுகிறார்கள் என்றால் அவர்கள் காதுக்குள் அப்படி யாரோ அவர்களைத் திட்டுகிற மாதிரி ஒரு சப்தம் கேட்பதால். அதற்குத்தான் அவர்கள் எதிர்வினையாற்றுகிறார்கள் என்பது அப்பொழுதுதான் எனக்குப்

புரிகிறது.

அந்தக் 'காதுகள்' கதையை என்னிடம் கொடுத்தார். அதை நான் வீட்டில் போய்ப் படித்தேன். ஒரு அத்தியாயம் படித்தேன். அடுத்த இரண்டு நாள்களில் நான்கு அத்தியாயங்களைப் படித்து முடித்திருந்தேன். இரவு நான்காவது அத்தியாயத்தைப் படித்துவிட்டுப் படுத்தேன். இப்போது என் காதுக்குள் அந்தக் கதாநாயகனுக்கு நடந்த சப்தம் மற்றும் உரையாடல்கள் எல்லாம் கேட்க ஆரம்பித்தன. நாம் இதைப் படித்தோம் என்றால் இது நமக்குப் பிரச்சனை ஆகிவிடுமென்று அப்படியே வைத்துவிட்டேன். அவரிடம் எதுவும் நான் சொல்லாமல் விட்டுவிட்டேன்.

அவரை வாராவாரம் சனி ஞாயிறு போய்ப் பார்ப்பேன். அவர் புத்தகம் கொடுத்ததற்குப் பின் அடுத்த சனி ஞாயிறு நான் அவரைப் போய்ப் பார்க்கவில்லை. அவர் நான் வருவேன் என்று என்னை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு இருந்திருக்கிறார். கையெழுத்துப் பிரதி வேறு.

இப்பொதெல்லாம் கம்ப்யூட்டர்ல டைப் செய்து நாம் எங்கு வேண்டுமென்றாலும் சேமித்து வைத்துக்கொள்ளலாம். எப்போது வேண்டுமென்றாலும் எவ்வளவு பிரதிகள் வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அப்போது அப்படி கிடையாது. அந்த ஒரே ஒரு மூலப் பிரதிதான் அவர் கையில் இருந்தது. அதை என்னிடம் கொடுத்துவிட்டார். அவரிடம் எந்தப் பிரதியும் கிடையாது. என் மேல் மிகுந்த அன்பும் ப்ரியமும் கொண்டவர். அதனால் நான் வருவேனென்று எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு இருந்திருக்கிறார். நான் வரவில்லையென்றதும், தேனுகாவிடமும், ரவி சுப்பிரமணியம் அவர்களிடமும் 'பிருந்தா சாரதியிடம் ஒரு புத்தகம் கொடுத்தேன், படித்துவிட்டானா? இல்லையா? என்ன ஆச்சு? இங்கே வரவும் இல்லை. என்னவென்று தெரியவில்லையே' என்று கேட்டு இருக்கிறார்.

இவர்களிடம் கேட்ட அதற்கடுத்த வாரம் நான் எம்.வி.வெங்கட்ராம் அவர்களைப் போய்ப் பார்த்தேன். என்ன ஆச்சு என்று கேட்டார். "படிக்க ஆரம்பித்தேன், முழுதாகப் படித்துவிட்டு வரலாமென்று நினைத்திருந்தேன்," என்று சொன்னேன். "சரி இப்போது படித்துவிட்டாயா?" என்று கேட்டார். 'இல்லை' என்று சொன்னேன். அப்போதுதான் "என் காதிற்குள்ளும் அந்தக் கதாநாயகனுக்கு வருகிற மாதிரியே சப்தம் காதில் கேட்க ஆரம்பித்தது. இதை முழுதாகப் படித்துவிட்டால் எனக்கும் அந்தப் பாதிப்பு தொற்றிவிடுமோ என்று பயந்து நான் படிக்காமல் அப்படியே விட்டுவிட்டேன்" என்று சொன்னேன். உடனே அவர் "நாவல் வெற்றியடைந்துவிட்டது. நீ படிக்கவே வேண்டாம், அதை அப்படியே கொடுத்துவிடு," என்று சொல்லி வாங்கி வைத்துக்கொண்டார். பிறகு, நான் படிக்கவில்லை. அப்படியே அவரிடம் கொடுத்துவிட்டேன்.

அதே போன்று, கரிச்சான் அவர்களும் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா என்கிற இடதுசாரி முற்போக்குப் பார்வை கொண்ட வங்காள எழுத்தாளர் எழுதிய “இந்தியத் தத்துவ இயலில் நிலைத்திருப்பனவும் அழிந்தனவும்” என்ற புத்தகத்தை மொழிபெயர்த்துக்கொண்டு இருந்தார். அந்த ஒரிஜினல் புத்தகத்தைப் படித்துத் தமிழில் சொல்லுவார். அவர் சொல்லச் சொல்ல அதை நான் எழுதுவேன். என்னோடு வேறு சிலரும் அந்த வேலையைச் செய்தார்கள். அதே மாதிரி கரிச்சான் குஞ்சுவைப் பார்க்க வந்த தஞ்சை பிரகாஷையும் அப்போது சந்தித்திருக்கிறேன். அவர் கூட பழகுகிற வாய்ப்பையும் அவர்களால்தான் நான் பெற்றேன். எழுத்துத்துறையில் ஓரளவு எழுதுவதற்கும் செயல்படுவதற்கும் அவர்களுடைய பழக்க வழக்கங்கள்தான் எனக்கு ஒரு உந்துசக்தியாக இருந்து வருகிறது.



**"தெளிந்த மொழி குளிர்ந்த சொற்கள் செறிந்த சிந்தனை வாசகனைக் குழப்பாத துல்லியம் எல்லாம் கூடி பிருந்தா சாரதியின் கவிதைகளை நேசிக்க வைக்கின்றன. யார் இந்த பிருந்தாசாரதி? என்று யோசிக்க வைக்கின்றன," என்று கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் உங்களைப் பாராட்டிச் சிலாகித்ததை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

நான் முதன்முதலாகப் படித்த புதுக்கவிதைப் புத்தகம் 'திருத்தி எழுதிய தீர்ப்புகள்'. அதற்கு முன்பு கலைஞருடைய கதை வசனப் புத்தகமும், கண்ணதாசனுடைய பாடல் புத்தகமும்தான் பாடப் புத்தகம் தாண்டிய என் இலக்கிய வாசிப்பு. ஒருநாள் கும்பகோணத்தில் இருக்கிற மார்க்கண்டேயா புத்தகக் கடையில் தொங்கிக்கொண்டிருந்த புத்தகங்களில் இரண்டு அட்டைப் படங்கள் என்னைக் கவர்ந்தன. அவை திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம் ஆகியவை. எங்களின் கடைக்கு அருகிலே அந்தப் புத்தக நிலையம் இருந்தது. அது எனக்கு உதவிகரமாக இருந்தது. அதில் திருத்தி எழுதிய தீர்ப்புகளை நான் படிக்க ஆரம்பித்த உடனே என்னை அப்படியே ஆக்கிரமிப்பு செய்தது.

அதற்கு முன் கண்ணதாசனின் மரபுக் கவிதைகளையும் அந்தப் புத்தகக் கடையிலேயே நான் படித்திருக்கிறேன். கண்ணதாசன் எழுத்து மிகவும் எளிமையாகத்தான் இருக்கும். செய்யுள் போல இருந்தாலும் எளிமையான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருப்பார். வைரமுத்துவோட புதுக்கவிதைப் புத்தகம் படிச்ச உடனே வியப்பாகவும் கவர்ச்சியாகவும் இருந்தது. இன்னொரு தேசிய கீதமும் படித்தேன். மு.மேத்தாவோட கண்ணீர்ப் பூக்கள், திருவிழாவில் ஒரு தெருப்பாடகன் என வைரமுத்து மேத்தாவினுடைய புத்தகங்களைப் படித்துப் படித்துத்தான் நான் என்னுடைய கவிதைகளை எழுதத் தொடங்கினேன். ஆனால் பிற்காலத்தில் நான் கவிப்பேரசு வைரமுத்து அவர்களிடம் ஒரு தொலைக்காட்சித் தொடரில் இணை இயக்குநராகப் பணியாற்றுவேன் என்று கனவிலும் நினைக்கவில்லை.

'ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம்' எனும் என்னுடைய நூலிற்காக அவரிடம் அணிந்துரை கேட்டிருந்தேன். அதில்தான் நீங்கள் கேட்டவாறு எழுதியிருந்தார். என்னவொரு அற்புதமான அறிமுகம்.

நான் முன்னாடியே கூறியிருந்தது போல, வீட்டில் உள்ளவர்களுக்கும் நம்முடைய எழுத்து புரியவேண்டுமென்று 'ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம்' கவிதையில் ஒரு பள்ளிக்கூடம் விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் எப்படி இருக்குமென்று எழுதியிருந்தேன். அதைப் படிக்கின்ற ஒவ்வொருத்தரும் தங்களின் பள்ளிக்கூடமாக நினைப்பார்களேயொழிய பள்ளிக்கூடமா? கல்யாண மண்டபமா?

விளையாட்டு மைதானமா? என எந்தக் குழப்பமும் வராது. அழகான ஒரு காட்சியைத் தங்கள் கற்பனையில் பார்ப்பார்கள். ரம்மியமாக இருக்குமென்று கூறுவார்கள்.

கவிஞர் வைரமுத்து அவர்களிடமிருந்து இந்த வாசகங்களைக் கேட்பது மிகப் பெருமையாக இருந்தது. இந்த இயல்பை என்னுடைய கவிதைகளில் பின்பற்றிவருகிறேன்.

புதுக்கவிதைப் புத்தகங்கள் விற்பனையாகவில்லை என்று ஒரு பெரிய குற்றச்சாட்டு இன்றும் இருக்கிறது, ஆனால் பிருந்தா சாரதியின் கவிதைப் புத்தகங்கள் அதிகமாக விற்பனை ஆகின்றன என்று டிஸ்கவரி புக் பேலஸ் வேடியப்பன் தன் பதிப்புரையில் என்னுடைய ஒரு நூலில் எழுதினார். அதற்குக் காரணம் வாசகன் படிப்பதற்கு மிக எளிமையாக அவனைத் தொட்டுச் செல்வதாக இருப்பதுதான். வாசகனைக் குழப்பாமல் இருக்கிறது. தெளிந்த சொற்களாக இருக்கின்றன.

அதற்குப் பிறகு கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. காரணம், அப்பொழுது ஜூனியர் விகடனில் எழுதிய கட்டுரைத் தொடர் என்னை வெகுவாக ஈர்த்தது. அதில் உலக இலக்கியங்கள், அமெரிக்கக் கவிதை, ஆப்பிரிக்கக் கவிதை என்று உலகக் கவிதைகளையும், உலகக் கவிஞர்களையும் அறிமுகப்படுத்தினார். அப்படி அவர் ஆய்ந்து எழுதுகிற விதம் என்னை ஈர்த்தது. உலக இலக்கியங்கள் இவ்வளவு இருக்கிறதா? என்று என்னை மேலும் சிந்திக்க வைத்தது. நிறைய வாசிக்கத் தொடங்கினேன்.

யாரும் இதுவரை சொல்லாத ஒரு சொல்லையாவது எனது எழுத்தில் சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பும் கனவும் எனக்குள்ளே இருந்து வருகிறது. இலக்கிய உலகில் இதுவரை யாரும் எழுதாத ஒரு வரியையாவது நான் எழுத வேண்டும் என்கிற ஆவல் எனக்கு எப்போதும் உண்டு. உலகத்தில் இதுவரை எவ்வளவோ கவிஞர்கள் பிறந்துவிட்டார்கள். யாரும் இதுவரை பாடாத ஒரு பாடுபொருளையாவது நான் பாடிவிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

தமிழ் இலக்கிய உலகில் 2000 ஆண்டுகளாகக் கவிதை எழுதப்பட்டுக்கொண்டிருக்கிறது. நானும் கவிதை உலகில் ஒரு தொடர் சங்கிலியாக வந்துவிட்டதினால் ஒரு புதிய பாடுபொருளை, புதிய கோணத்தில் சொல்ல வேண்டுமென்று ஆசை இருக்கிறது. தொடர்ந்து எழுதிக்கொண்டும், வாசித்துக்கொண்டும் இருக்கிற வாசிப்பாளன் அதைக் கண்டுபிடிப்பான். அந்த உத்வேகத்தை இது போன்ற பாராட்டுக்கள் நமக்கு அளிக்கின்றன.

**எண்களைத் தலைப்பாகக் கொண்டு எண்களுக்குப் பின் மறைந்திருக்கும் தத்துவத்தையும், புதிர்களையும், தர்க்கத்தையும், அன்றாட வாழ்வையும் கவிதைகளாக்கும் 'எண்ணும் எழுத்தும்' எழுதும் எண்ணம் எப்படித் தோன்றியது?**

ஒரு சமயம் இயக்குநர் லிங்குசாமியோட ஒரு கதை விவாதத்திற்காக மதுரைக்குப் போயிருந்தேன். மதுரையில் ஒரு நல்ல ரிசார்ட் அது.... விசாலமான நட்சத்திர விடுதி. அங்குதான் தங்கி இருந்தோம். அங்கு தங்கிக் கதை விவாதம் செய்துவிட்டு, நானும் இயக்குநர் லிங்குசாமியும் வெளியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் அறைக்கு அருகில் எண் கணித ஜோதிடர் ஒருவர் இருந்தார். அவரைப் பெரிய பெரிய மனிதர்கள் எல்லோரும் வந்து பார்த்துவிட்டுப் போய்க்கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய பெயரை மாற்றினால் உலகத்தில் ஜெயிக்கலாம் என்ற நம்பிக்கையோடு அந்த எண்கணித ஜோதிடரை வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். அந்த அளவிற்கு மிகப் பிரபலமான ஜோதிடர் போல. அவர் வெளியே வந்ததும் எங்களைப் பார்த்தார். அப்போது அவரைப் பற்றிக் கேட்டோம். அதற்கு அவர் 'உங்கள் பிறந்தநாள் மற்றும் பெயரைச் சொன்னால் உங்கள் வாழ்விற்கு இந்தப் பெயர் சரியாக இருக்குமா இல்லையா? என்று சொல்ல முடியும். அதே மாதிரி

பெயரைச் சரியாக மாற்றி வைத்துவிட்டால் உங்களுக்கு இருக்கிற கஷ்டமெல்லாம் குறைந்துவிடும். உங்களுடைய தொழிலில் இருக்கிற இடர்ப்பாடுகள் எல்லாம் நீங்கிவிடும்' என்று கூறினார். நம்புகிறவர்கள் அவரிடம் வந்து பார்ப்பார்கள்.

அப்போது பார்த்த அந்த நிகழ்ச்சிதான் 'எண்ணும் எழுத்தும்' நூலுக்கு ஆதாரமாக அமைந்தது. ஒரு ஆள் எண்களை வைத்து ஜோதிடம் சொல்கிறார். எண்களை வைத்து மனித வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்று நினைக்கிறார், அதைப் பலரும் நம்புகிறார்கள்.


இப்படி நடக்கிறபோது, அந்த எண்களை வைத்து நாம் ஏன் கவிதை எழுதக் கூடாது என்று எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. இதைப்பற்றிக் கவிதை எழுதலாம் என்று நினைத்தபோதே, கூடவே ஒரு வரியும் தோன்றியது.

"ஒன்றை இரண்டாக்கியதே இரண்டும் ஒன்றாவதற்குத்தான்" என்று ஒரு வரி. பிறகு அந்த எண் ஒன்றைப் பற்றி நான் மிகத் தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்தேன். ஒன்றைப் பற்றி நிறைய சிந்தனைகள் கடகடவென ஆரம்பித்து வந்துகொண்டே இருந்தன. எதை எழுதுவது எதை விடுவது என்று எனக்குத் தெரியவில்லை. அப்படி ஆரம்பிக்கும்போது அந்த ஒன்று என்ற எண்ணுக்காக எழுதிய பத்து பன்னிரண்டு கவிதைகளை நான் முகநூலில் பதிவு செய்தேன். அனைவரும் படித்துப் பார்த்துவிட்டுச் சிலாகித்துப் பாராட்டினார்கள்.

அடுத்த நாள் இரண்டு என்ற எண்ணை மையமாக வைத்துக் கவிதை எழுதினேன். உலகத்தில் எல்லாமே இரண்டு இரண்டாக மேடு பள்ளம், இரவு பகல், இன்பம் துன்பம் என்று இருக்கின்றன. இதைப்போன்று இரண்டாம் எண்ணிற்குரிய கவிதைகளை எழுத ஆரம்பித்தேன்.

மூன்று என்று சொன்னதும் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற வீம்பு பேசுபவர்கள் நினைவுக்கு வர அதை வைத்து எழுதினேன். அதன் பின் நான்கு... இந்த உலகத்தில் நாலு பேரு நாலு விதமாப் பேசுவான் என்பதற்காக நாம் வாழாமல் இருக்க முடியாது, நாம் வாழ்ந்துதான் ஆக வேண்டும், அந்தக் கருவை வைத்து எழுதினேன். ஐந்து என்ற எண்ணுக்குப் பஞ்சபூதங்களை வைத்து எழுதினேன். ஆறு என்றதும் காடாறு மாதம் நாடாறு மாதம் வாழ்ந்த விக்ரமாதித்தன் நினைவுக்கு வந்தான். அவனைப் பற்றி எழுதினேன்.

இப்படி ஒவ்வொரு எண்ணுக்கும் மனசுல முதல்ல என்னவெல்லாம் தோன்றுகிறதோ அதை வைத்துத்தான் எழுத ஆரம்பித்தேன். அந்தத் தொடர் எழுதும்போது காலையில் எழுந்து கவிதைதான் எழுதுவேன். தூங்கி எழும்போதே பேப்பர் பேனாவோடதான் எழுவேன். "பெரிய அறிஞர் அண்ணா இவரு... காலைல எழுந்த உடனே எழுத ஆரம்பிச்சுட்டாரு... இவரு எழுதித்தான் நாடு திருந்தப்போகுது..." என்று எனது அப்பா திட்டுவார். அன்று பேப்பரில் எழுதினேன். இன்று கைப்பேசியில் டைப் செய்துகொண்டிருக்கிறேன். காலையில் எழுந்ததும் பதினைந்து, இருபது நிமிஷத்துக்குள் ஒரு கவிதையாவது எழுதாமல் இருந்ததே இல்லை. இப்படி எண்கள் பற்றி எழுதிக்கொண்டிருக்கும்போது ஒன்பது எண் வரைக்கும் எழுதிவிட்டேன். அடுத்தது பூஜ்ஜியத்தைப் பற்றி எழுத வேண்டும். பூஜ்ஜியத்தைப் பற்றிச் சிந்தித்தால் "பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு ராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டு புரியாமல் இருப்பான் ஒருவன், அவனைப் புரிந்துகொண்டால் அவன்தான் இறைவன்" என்ற பாட்டுதான் எனக்குத் திரும்பத் திரும்ப மனதில் ஓடிக்கிட்டே இருக்கேயொழிய இதைத் தாண்டி என்னால எதுவும் சிந்திக்கவே முடியவில்லை. சரி, எப்போது தோணுதோ அப்போது எழுதலாம் என்று விட்டுவிட்டேன். அப்படியே நாட்கள் சென்றுவிட்டன. அதற்குப்பின் அது எனக்குத் தோணவேயில்லை. ஒரு



ஆறு ஏழு மாசம் கழித்து மெல்ல தோன்ற ஆரம்பித்தது. ஒன்றை உடைத்தேன், ஒன்று இரண்டானது, இரண்டையும் தரையில் ஓங்கி அடித்தேன், துண்டு துண்டுகளாகச் சிதறி எண்ணிக்கையற்றுப் பெருகியது, எல்லாவற்றையும் எரித்தேன், ஒன்றுமில்லாமல் போனது. ஒன்றுமில்லாமல் போனதைத்தான் ஒன்றும் செய்ய இயலவில்லை என்னால். இந்த பூஜ்ஜியம் என்பது ஒன்றுமில்லாமல் எப்போது மாறியதோ அப்போது எனக்கு ஒன்னு இல்ல ரெண்டு இல்ல கவிதை வந்துகொண்டே இருக்கிறது. பூஜ்ஜியம் உருவான கதை என்று ஒன்றை எழுதிக்கொண்டிருக்கிறேன். இந்த பூஜ்ஜியம் எப்படித்தான் உருவாகியிருக்கும்? எண்கள் அனைத்தும் ஒருநாள் கடவுளிடம் போய் 'எங்களில் யார் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று சொல்' என்று கேட்டன. 'உங்களுக்குள்ளேயே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பேதம் வந்துவிட்டதா? உங்களை விட ஒருவர் புதியதாக வரப்போகிறார். அவர்தான் உங்களை விட உயர்ந்தவர்,' என்றார். அவர்தான் பூஜ்ஜியம். பூஜ்ஜியத்துக்கு என்ன தன்மையைக் கொடுக்கலாம்னு பார்த்தால் இறைவன் தன் தன்மையைத்தான் கொடுக்க வேண்டுமென்று நினைத்தார். எல்லாவற்றோடும் சேரும்... எல்லாவற்றின் குணாதிசயங்களையும் ஏத்துக்கும்... எல்லாவற்றிற்கும் மேலாக அது எல்லாவற்றோடும் சேர்ந்து மகிமை ஆகிவிடுமென்று பூஜ்ஜியத்தைப் படைத்தார்.

ஒன்று பூஜ்ஜியத்துடன் சேர்ந்தால் பத்து என்று ஆகும். 10 பூஜ்ஜியத்தோடு சேர்ந்தால் 100 ஆகிவிடும்.100 பூஜ்ஜியத்தோட சேர்ந்தால் 1000 ஆகிவிடும். பூஜ்ஜியத்தோடு சேர்ந்து இப்படி பல்கிப் பெருகிக்கொண்டே இருக்கும். பூஜ்ஜியத்தோட மகிமை பூஜ்ஜியம் சேரச் சேர பெரிய மதிப்பு பூஜ்ஜியத்துக்குத்தான் கிடைக்கும்.

பூஜ்ஜியம் பற்றி எனக்கு ரொம்ப காலமாக எழுத முடியாமல் இருந்தது. ஆனால் அதைப் பற்றித்தான் புத்தகத்தில் நிறைய எழுதி இருக்கிறேன். பூஜ்ஜியம் எழுதியாகிவிட்டது. ஒன்றிலிருந்து ஒன்பது எழுதியாகிவிட்டது. அதற்குப்பின் என்ன எழுதலாம் என்று யோசிக்கிறபோது, இன்ஃபினிட்டி பற்றி எழுதலாம் என்று தோன்றியது. நான் கும்பகோணத்தில் பிறந்தேன். எங்க வீட்டுக்குப் பக்கத்தில்தான் கணிதமேதை ராமானுஜம் இருந்தார். அவர்தான் இன்ஃபினிட்டி கண்டுபிடித்தார். அதனால் அவர் வாழ்ந்த நகரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் இன்ஃபினிட்டி பற்றி எப்படி எழுதாமல் இருக்க முடியும்? என்று தோன்றியது. 'The Man Who Knew infinity' என்று அவரைப் பற்றிய புத்தகமே வந்துள்ளது. இன்ஃபினிட்டி பற்றி எழுதவில்லையென்றால் நாம் கும்பகோணத்தில் பிறந்ததுக்கே அர்த்தம் இல்லையென்று ஆகிவிடுமென்று எனக்குத் தோன்றியது. "முடிவிலி" என்றொரு



கவிதையை எழுதினேன்.

வேறு ஏதாவது விட்டுப்போய் விட்டதா? என்று நினைக்கும்போது “பின்னங்கள்”. அதுவும் ஒரு எண்தானே. பின்னங்கள் பற்றி எழுதினேன். அந்தக் கவிதையின் நூலுக்குத்தான் கவிஞர் அப்துல் ரகுமானிடம் கொண்டு போய் அணிந்துரைக்காகக் கொடுத்தேன். அந்த அணிந்துரையில் ‘நான் நடக்கும் பாதையிலேயே பிருந்தாவும் நடக்கிறார். நான் பார்க்கும் காட்சிகளையே பிருந்தாவும் காண்கிறார். ஒளியை அடைவார்’ என்று எழுதினார். இது எனக்கு மிகப்பெரிய பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. ஒரு அங்கீகாரத்தையும் கொடுத்த மாதிரி இருந்தது. அந்தப் புத்தகத்திற்குக் கவிஞர் விக்ரமாதித்யன் கூட எனக்கு ஒரு வாழ்த்துரை எழுதியிருந்தார். “பரிசோதனை முயற்சியே வெற்றிதான்” என்று எழுதினார். ரவி சுப்ரமணியனிடம் அந்தப் புத்தகத்தைக் காட்டியபோது, மா. அரங்கநாதன் இப்போது இல்லை, இருந்தால் அவரிடம் இந்தப் புத்தகத்துக்கு அணிந்துரை வாங்கி இருக்கலாம் என்று கூறினார்.

இப்போதும் அந்தப் புத்தகத்துக்கு எதிர்பாராத இடங்களில் இருந்து எல்லாம் பாராட்டு கிடைக்கிறது. கண்ணதாசனையும், அப்துல் ரகுமானையும் எந்த நோக்கமும் இல்லாமல் படைத்த அந்தப் பாதிப்பில் இது விளைந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். ‘எண்ணும் எழுத்தும்’ என்று தலைப்பும் கூட ஆரம்பத்திலேயே தோன்றியது. ஆனால் அது பழையதாக இருக்கிறது, வேறு தலைப்பை வைக்கலாம் என்று சில நண்பர்கள் சொல்ல நானும் வேறு தலைப்பைத் தேடிப் பார்த்துவிட்டு எதுவும் பொருத்தமாக அமையாமல் இதுவே சரியாக இருக்கும் என்று வைத்துவிட்டேன்.

யாரும் தொடாத கவிதையை எழுதவேண்டும், யாரும் இதுவரை சிந்திக்காத சிந்தனையைச் சிந்திக்காத கோணத்தில் சொல்லவேண்டும் என்று நினைத்தேன் அல்லவா.. அது மாதிரி ஒரு புத்தகம்தான் இது. இதற்குத்தான் ‘படைப்புக் குழுமம்’ விருது கொடுத்தார்கள். வெகுஜன மக்களால் கவனிக்கப்பட்ட புத்தகமும் கூட. சொல்லப்போனால் அந்த ‘எண்ணும் எழுத்தும்’ புத்தகம் முடிவடைந்துவிட்டதாக நான் நினைக்கவே இல்லை. ஒவ்வொரு எண்ணைப் பற்றியும், இன்னும் எழுதாத பல எண்களைப் பற்றியும் எழுத வேண்டும். இப்போதும்கூட பல சமயங்களில் எண்கள் பற்றித் தோன்றுகிற கவிதைகளை எழுதி வைத்துக்கொண்டே வருகிறேன். ‘புல்லின் இதழ்கள்’ கவிதைத் தொகுப்பை வால்ட் விட்மன் முதலில் வெளியிடும்போது நாற்பது கவிதைகளைத்தான் புத்தகமாகப் போட்டார். இப்போது புதிய பதிப்பில் 200, 300 கவிதைகள் இருக்கும். ஒவ்வொரு பதிப்பு போடும்போதும் கவிதைகள் சேர்த்துக்கொண்டே இருப்பார். தொகுதி ஒன்று, தொகுதி இரண்டு, தொகுதி மூன்று

என்று புத்தகம் போட மாட்டார். அதே மாதிரி நானும் “எண்ணும் எழுத்தும்” கவிதைகளை அடுத்தடுத்த பதிப்புகளில் சேர்த்துக்கொண்டே இருக்கலாம் என்கிற எண்ணம் இருக்கிறது. இந்தப் புத்தகத்திற்கு ஓவியர் இராம. பழனியப்பன் ஓவியம் வரைந்திருக்கிறார். எண்கள் குறித்து நீண்ட காலமாக அவரும் பயணம் போய் ஒரு கண்காட்சி வைக்கிற அளவிற்கு எண்ணற்ற ஓவியங்கள் வரைந்து வைத்திருந்தார். அவற்றிலிருந்து சில ஓவியங்களை இந்த நூலுக்குப் பயன்படுத்தக் கொடுத்தது நூலை மேலும் அர்த்தமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் மாற்றியது.

"எங்கும் நீர்

குடிப்பதற்குத்தான் இல்லை

தவிக்கிறது ஊர்"

**சென்னையில் மழைக்காலத்தில் வெள்ளம் சூழ்ந்து தத்தளித்தபோது அங்கு மக்கள் பட்ட அவலத்தை வலி மிகுந்த எளிய மக்களின் குரலாய் ஒலித்த இந்த மாதிரியான கவிதைகள் நிறைய எழுதிருக்கீங்க... அவை உருவான தருணத்தைப் பற்றி?**

சென்னையில் மழைக்காலத்தில் தண்ணீர் சூழ்ந்து நிற்கிறது, ஏரி உடைந்து தண்ணீர் சூழ்ந்த அபாயம். நான் பார்த்து அதிர்ச்சியானேன். ஏனென்றால் நான் தண்ணீர் இல்லாத சென்னைக்கு வந்தவன்.

நான் சென்னைக்கு வந்த புதிதில் ஒரு குடம் தண்ணீருக்காக இரண்டு மூன்று தெருக்கள் தள்ளிப் போய்த் தண்ணீர் தூக்கி வந்த காலம் இருந்தது. ஆனால் இன்றைக்குத் தண்ணீர் உடைப்பு எடுத்துத் தெருவில் இறங்க முடியாத சூழ்நிலை. இவ்வளவு பெரிய மாநகரத்தில தண்ணீர் சூழ்ந்து இருக்கிறதைப் பார்க்கும்போது எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இது இயற்கையின் சீற்றமா? இயற்கை ஒரு நகரத்தையே ஸ்தம்பிக்க வைக்கிற காரியத்தை ஒருபோதும் செய்வதில்லை. இந்த நகரத்தை வடிவமைத்தவர்கள் இதை எல்லாம் யோசிக்காமல் வடிவமைத்திருக்க மாட்டார்கள். எங்கோ நாம் தவறு செய்திருக்கிறோம். தண்ணீர் போவதற்கான பாதைகளை எல்லா வகையிலும் அடைத்துவிட்டோம் என்று அந்த வெள்ளக் காட்சிகள் புரிய வைத்தன.

ஒரு கவிஞன் என்பவன் ஒரு ஊரில் வாழ்கிற சாதாரண மனிதன்தான். அதே சமயம் உலகத்தைப் பற்றிக் கவலைப்படுகிற சிந்தனையாளனும் கூட. எங்கள் வீட்டில் எல்லாம் சொல்வார்கள், நீ என்னடா எழுதி இந்த உலகம் மாறவா போகுது? என்று. நான் ஒரு கலெக்டர் போல, அமைச்சர் போல, அதிகாரத்தில் இருக்கிற ஆள் கிடையாது. ஆனால் கவிஞன் என்பவன் இந்த மக்களுடைய பிரச்சனைகளுக்குத் தன் கவிதைகளின் மூலமாகத் தீர்வு தேடுபவன் என்று எனக்கு நானே நினைத்துக்கொள்வேன். அதை நகைச்சுவையாகக் கூட சிலர் நினைக்கலாம். ஆனால், மாநகரத்தை ஸ்தம்பிக்க வைக்கிற சூழல்களைக் கவிதைகள் மூலமாகக் கவிஞர்கள் சொல்லுகிறபோதும், ஒரு அவலத்தை நான் எழுத்தில் வடிக்கிறபோதும் அது அதிகார மையங்களை நோக்கிச் செல்கிறது. ஒரு இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நிலங்களைக் கூறு போட்டு ரியல் எஸ்டேட் என்ற பெயரில் வியாபாரம் கொடி கட்டிப் பறந்தபோது, எளிய கவிஞர்களின் சிறு சிறு கவிதைகள் சட்டமன்றங்களில், நீதிமன்றங்களில் கூட எதிரொலித்தன. ரியல் எஸ்டேட் என்ற பெயரில் விவசாய நிலங்களை அழிக்கும் பெரிய சுரண்டல் நிறுத்தப்படுவதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இப்போது நீர்நிலைகளைப் பாதுகாக்கும் காலம் வந்துவிட்டது.

நான் தண்ணீர்ப் பிரச்சனையைப் பற்றி மட்டும் எழுதவில்லை. மழைக்காலத்தில் வெள்ளம் சூழ்ந்த நாட்களில் மட்டுமல்ல, எப்போதெல்லாம் பேரிடர் காலம் நிகழ்கிறதோ, அப்போதெல்லாம் அதைப்

பற்றிய பதிவுகளைக் கவிதை வழியாக நான் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறேன்.

கொரோனா காலகட்டத்தில் கூட 20, 30 கவிதைகள் தொடர்ந்து எழுதினேன். ஒவ்வொரு தனிமனிதனும் ஸ்தம்பித்து வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடந்தபோது அந்த நகரம் எப்படி அடைபட்டுக் கிடந்தது, தனி மனிதர்கள் எப்படி மோசமான நிலையில் கிடந்தார்கள் என்கின்ற அவலத்தை எல்லாம் என் கவிதைகளில் பதிவு செய்தேன்.

சில வருடங்களுக்கு முன் கஜா புயல் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களை நிறைய பாதித்தது. நானும் தஞ்சை மாவட்டத்துக்காரன் என்பதால், மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டேன். அப்போதும் அதைப்பற்றி நான் கவிதை எழுதினேன்.

நான் மட்டுமல்ல, சமூகப் பொறுப்புள்ள கவிஞர்கள் எழுத்தாளர்கள் அனைவருமே இது போன்ற பிரச்சனைகளை எடுத்துக் கவிதையாக வடித்திருக்கிறார்கள். அது நிச்சயமாகக் கேட்க வேண்டிய செவிகளுக்குப் போய்க் கேட்கும்.

**இலக்கியம் சினிமா என்று இரண்டு துறைகளிலும் மிக அழுத்தமாகப் பதிவு செய்கிறீர்கள். அது எப்படி சாத்தியமாகிறது?**

திரைப்படத்துறையில் ஒரு வசனகர்த்தாவாகப் பணியாற்றிவருகிறேன். அதற்கு முன் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கவிதைகள் எழுதி வந்துகொண்டிருக்கிறேன். சினிமாவிற்கு எழுதுகிறபோது அது மக்கள் மனங்களை உடனடியாகச் சேர்ந்துவிடும் என்கின்ற பொறுப்பு இருந்துகொண்டே இருக்கும். எளிமையாக இருக்க வேண்டும், அதே சமயம் படத்தின் வெற்றிக்குப் பயன்பட வேண்டும், அதைக் கடந்து நமக்கும் பெயர் வர வேண்டும்.. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு எழுதவேண்டும். கதைக்குள் இருக்கின்ற ரகசியங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அடிப்படைக் கதையை நியாயப்படுத்தி மக்கள் மனங்களில் அதை நிலைநிறுத்த வேண்டும். இவையெல்லாம் ஒரு திரைக்கதை வசனகர்த்தாவாக எனக்குக் கொடுக்கப்படும் வேலை. எனக்கு வாய்ப்பு வரும்போது அதை சரியாகச் செய்திருக்கிறேன்.

கவிதை என்பது யாரும் எனக்குக் கொடுக்கின்ற வேலை அல்ல. நானே விரும்பிச் செய்வது. ஒரு திரைப்படத்தின் வெற்றிக்குப் பிறகு அது மக்கள் மனதில் நீண்ட நாள் நிற்குமா? இல்லையா? என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. ஆனால் நீண்ட காலத்திற்குப் பிறகு நாம் இல்லாத ஒரு உலகு வரும்போது நம் பெயரைச் சொல்வதற்கு அந்தக் கவிதைகள் வந்து நிற்கும், நிற்க வேண்டும். சமகாலப் பிரச்சனைகள், நான் ரசித்த விஷயங்கள் என அன்றாடம் எவையெல்லாம் நம் மனதில் எழுதுவதற்குத் தோன்றுகிறதோ அவற்றையெல்லாம் அழகியலோடும், அரசியலோடும் பதிவு செய்து வைத்தால் நிச்சயமாக நம் பெயரையும் காலம் வரவு வைக்கும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று எழுதிய கணியன் பூங்குன்றனார் இன்றும் நினைக்கப்படுகிறார் அல்லவா? அப்படி ஒரு வழியைக் கண்டுபிடிக்கவே தொடர்ந்து எழுதுகிறேன்.

கவிதை நம் கைகளில் கொடுக்கப்பட்டுள்ள ஆயுதம். அதை வைத்து நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்விக்கு விடை சொல்ல தினமும் முயற்சிக்கிறேன். இலக்கியத்தின் மூலம் ஒரு தனி மனிதனின் வாழ்விலும் மாற்றத்தைக் கொண்டு வர முடியும், சமூகத்தின் வாழ்விலும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இவற்றையெல்லாம் என் எழுத்து மூலமாகச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.

– நேர்காணல் தொடரும்

அன்பழகன்.ஜி



ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

# விமோசனம்

கதிர்வேல் பிணம் சுடும் வேலைக்கு வந்தது ஒரு விபத்து போன்றது.

அந்தக் கிராமத்தில் வசதி படைத்த ஒரு மிராசுதாரரான வேலப்பனின் மருமகள் குணவதி எலிக்கு வைக்கும் செல்பாஸ் மாத்திரைகளை விழுங்கித் தற்கொலை செய்துகொண்டபோது போலீசுக்குத் தகவல் தெரிவிக்காமல் அவசர அவசரமாக எரிப்பதற்குத் தயாரானபோது செவலைக்குத் துணையாக அவரது பங்காளிகள் யாரும் இல்லாததால் அவரது அண்ணன் மகன் கதிர்வேலை முதன்முதலாக செவலை அழைத்து வந்தார். கட்டாயப்படுத்தி அழைத்ததால், போய்த்தான் பார்ப்போமே என்ற அரைகுறை தைரியத்தில் சுடுகாட்டிற்குச் சென்றான். அப்போது அவனுக்கு வயது பத்தொன்பது. இப்போது இருபத்து ஐந்து.

கதிர் ஒரு படுசுட்டி. அவன் நுண்ணறிவுக்கு இந்த உலகம் தீனி போட்டு வளர்க்கத் தயாராக இல்லை.

பெரும்பாலான அறிவுக் கொழுந்துகள் இப்படித்தான் சோர்ந்து வாடி வதங்கிக் கருகிப்போய் வளராமல் போகின்றன.

ஐந்தாம் வகுப்பு வரை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் இலவசப் புத்தகம், இலவச நோட்டு, இலவச சீருடையில் பயின்றான். அவன் பள்ளிக்குச் சென்றதே மதியம் ஒருவேளை பள்ளியில் சத்துணவு சாப்பிடலாம் என்பதனால்தான். ஆறாம் வகுப்பிலிருந்து அவன் கல்வி பயில பண உதவி செய்து வந்த நான்காம் வகுப்பு கணக்காசிரியர் ஒருநாள் மது போதையில் பள்ளிக்கு வந்து தலைமையாசிரியரிடம் ரகளையில் ஈடுபட்டதால் அவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, கதிர்வேலுவுக்கு உதவி செய்ததை நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார். விளைவு எட்டாம் வகுப்பின் பாதியில் படிப்பை முடித்துக்கொண்டான் கதிர்வேல்.

பதினைந்தாவது வயதில் பக்கத்து ஊரில் உள்ள வெல்டிங் பட்டறையில் எடுபுடியாக வேலையில் சேர்ந்தான். சில மாதங்களில் தேர்ந்த வெல்டராக திறமையை வளர்த்துக்கொண்டான். முதலாளியை எதிர்த்துப் பேசுவான். வாய்ச்சண்டை போடுவான். விரக்தி. வாழ்க்கையில் சாதிக்க முடியாதபோது அவ்வப்போது காரணமின்றிக்கூட கோபம் வரும்.

பட்டறையை விட்டு வந்து கொஞ்ச நாள் பேப்பர் ஏஜென்சியில் சேர்ந்து வீடு வீடாகக் காலை பேப்பர் போட்டான். பின்னர்

பாக்கெட் பால் சப்ளையரிடம் சேர்ந்து விடிகாலை வேனில் சென்று பூத்திற்குப் பாக்கெட் பால் சப்ளை செய்தான். ஒருநாள் அவன் வெட்டிமைத் தொழிலுக்குப் போய் வந்துள்ளதை அறிந்த அந்த சப்ளையர் வேலையை விட்டு விரட்டினார்.

"என்னக்கின்னாலும் நீ சாவத்தானே போரே.. அன்னக்கி உன்ன வச்சிக்கிடுறேன்" எனச் சப்தமிட்டான்.

"செத்த பொணத்த என்ன செய்ய முடியும். போட்டு ரெண்டு அடி அடிப்பே. அடிச்சிட்டுப் போடா" என்றார்.

"எரிக்க யாரையும் வரவிடாம ஸ்ரைக் பண்ணிப்புடுறேன் பாரு."

"நீங்க எரிக்க வரலன்னா டவுனுக்குக் கொண்டுபோய் மின்சார சுடுகாட்டுல எரிச்சிடப் போறாங்க.. போடா."

"அந்தத் துணிச்சல்லதான் பேசுறியா. டேய் போடா.. போ" எனத் திட்டிவிட்டு அதற்குமேல் பேசினால் கைகலப்பாகிவிடும் என விலகி வந்துவிட்டான்.

கடைசியாக விவசாயக் கூலி வேலையில் தன்னை அடகு வைத்துக்கொண்டான்.

விவசாய வேலையும் தற்போது இயந்திர மயமாகிவிட்டது. தெளிப்பு, நடவு, மருந்து தெளித்தல், அறுவடை, வைக்கோல் அடித்தல் போன்ற எல்லாமே மனித உழைப்பை உதறிவிட்டு இயந்திரங்கள் பயன்படுத்தி விரைவாகவும் குறைந்த செலவிலும் நடந்தேறுகின்றன. இவன் இயந்திரத்தை இயக்கக் கற்றுக்கொண்டு கூலிக்கு ஓட்டுநராகச் செயல்பட்டு வந்தான். அந்த வேலைகள் வருடத்தின் எல்லா நாட்களும் இருக்காது. மற்ற நாட்கள் வெட்டியாகத்தான் கழிந்தது. ஞாயிறுதோறும் மாலையில் பக்கத்து நகரத்தில் உள்ள கிளை நூலகத்திற்குச் சென்று வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டான். நூலகம் திறந்தது முதல் இரவு மூடும் வரை புத்தகங்களைப் புரட்டிக்கொண்டே இருப்பான். ஆழ்ந்த வாசிப்பில் லயித்துப் போவான்.

அவனது ஒரு தமக்கைக்கும் திருமணம் நடந்து குடிசை வீட்டை விட்டு இன்னொரு குடிசை வீட்டிற்குச் சென்றுவிட்டாள். வீட்டில் தாயார் மட்டுமே. தந்தை இவனது குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிட்டார்.

தாயார் சொல்லை முழுமையாகக் கேட்காதவனாகத்தான் வளர்ந்தான். இப்போதுகூட தாயாரை வா போ என்று ஒருமையில்தான் அழைப்பான். அது அவனது மனநிலை. மாற்றிக்கொள்ள முடியாத பழக்கம்.

கிட்டத்தட்ட வாழ்க்கைதான் இவனை மாற்றி வருகிறது. வாழ்க்கையை இவனால் மாற்ற முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இனி எப்படியெல்லாம் மாற்ற வேண்டும் என்ற பெரும் கனவுகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டான். சின்னச் சின்ன கனவுகள் நிறைவேறினால் மகிழ்வது வாழ்க்கையாகிப் போனது. அவற்றை அனுபவிக்கும்போது சுகப்படுதல் ஆறுதல் தருவது போல அமைந்தன.

இது அவனுக்கு ஏழாவது பிணம். செவலையும் கதிர்வேலுவும் போராடிக்கொண்டிருந்தார்கள்.

"மடக்கு நாற்காலி மாதிரி இருந்துகிட்டு கிழவி எரியிதா பாருங்களேன்" என்று அலுத்துக்கொண்டான் கதிர்வேல்.

"ஏய்.. அவங்க நல்லவங்களோ கெட்டவங்களோ. செத்த பிறகு பேசக்கூடாது. எப்புடின்னாலும் எரிச்சி முடிச்சித்தானே ஆவணும்.."

"அதுக்குல்ல சித்தப்பா. பாட்டி இருவது கிலோ இருந்துருப்பாங்களா. பத்து மணிக்குத் தீ மூட்டுனது நாலு மணியாவப் போவுது, இன்னும் எரியுதுன்னா எரிச்சல் வராதா?"

"நல்ல புஸ்டியா இருக்குற பாடி சீக்கிரமா வெளஞ்சிடும். நச்சலான பாடிதான் இப்புடி

சோலி கொடுக்கும்" என்றார் செவலை.

காற்று தெற்கிலிருந்து வீசியதால் எரியும் பிணத்தின் வாடை தங்களின் மீது வீசாதவாறு தெற்குப்புறமாக உட்கார்ந்து இருந்தனர். மேல் நோக்கி அசைந்தாடிய தீக்கொழுந்துகள் பின்வாங்கத் தொடங்கின. மூட்டத்தில் குறைந்த உயரத்தில் செந்தீ நாக்குகள் நீட்டிய வண்ணம் இருந்தன. இடுப்புப் பகுதி சதை மட்டும் சவாலாக இருந்தது. கம்பால் தட்டித் தட்டி விரைந்து எரியவிட்டுக்கொண்டிருந்தார் செவலை. வெளிச்சம் மங்கிவிட்டது. கிட்டத்தட்ட இருள் சூழும் தருணம்.

திடீரெனப் பின்புறத்திலிருந்து "ஐயா.. ஐயா.." எனக் குரல் கேட்டது.

இருவருக்கும் திகைப்பு. பிரமையா?

"ஏதோ குரல் கேக்குதுல்ல?"

"ஆமாம்" என்றான் கதிர்வேல்.

இருவருக்கும் கேட்டால் அது எப்படி பிரமையாகும்.

மீண்டும் அதே குரல். திரும்பிப் பார்த்தனர். கைப்பாடையிலிருந்து எடுத்துக் கீழே போட்டிருந்த முடைந்த தென்னை மட்டை செங்குத்தாக நின்றது.

பயத்தில் "யாரு?" என அதட்டினான் கதிர்வேல்.

"ஐயா, நான் ஒரு பொம்புள ஐயா. துணி இல்லாம மட்டைய மறச்சிக்கிட்டு நிக்கிறேன்."

"நீ யாரு? என்ன வேணும்?"

"ரெண்டு பாவிங்க என்ன அந்தப் பனந்தோப்புக்கு அழச்சிக்கிட்டு வந்து வேலைய முடிச்சிக்கிட்டு துணி பர்ஸ் எல்லாத்தையும் உருவிக்கிட்டு பொய்ட்டாங்க ஐயா. ஏதாவது துணி கொடுத்து உதவுங்க" என்றது மறைவில் நின்ற பெண் குரல்.

பிரச்சனையை உணர்ந்துகொண்டார்கள்.

"உன்னோட பேரு?"

"முல்லை."

"நீ எந்த ஊர்?" என்றார். சொன்னாள்.

"எப்புடி இவ்வளவு தூரம் வந்து தனியா மாட்டுனா?"

"ஒரு ஆட்டோகார கூப்புட்டான்னு நம்பி வந்துட்டேன். இங்க வந்தா ஏற்கனவே என்கிட்ட தகராறு பண்ணுன இன்னொருத்தன் இருந்தான். ரெண்டு பேரும் சேந்து இப்படி பண்ணிட்டாங்க."

என்ன செய்யலாமென யோசித்தார். சிறிது நேரத்தில் ஒரு ஐடியா கிடைத்தது. தான் துக்க வீட்டிற்குச் சென்று பாடி எரிந்து முடிந்ததாகத் தகவல் சொல்லிவிட்டு ஏதாவது ஒரு பழைய புடவையை வாங்கி வருவதாகக் கிளம்பினார் செவலை.

"பயம் ஒண்ணும் இல்லையேடா கதிர்" என்றார்.

"எனக்கென்ன பயம், தொணைக்கி ஒரு பொம்பளே வேற இருக்கு" என்றான் கிண்டலாக.

"தட்டித் தட்டி இடுப்ப எரியவிடு. நான் வாரதுக்குள்ள அனேகமா முடிஞ்சிடும்" எனக் கிளம்பினார்.

பிரேதம் வீட்டைக் காலி செய்த பிறகு துக்க வீட்டில் தீட்டு போக வேண்டி முன்னிரவு நீரில் முக்கிக் காய வைத்திருந்த உடைகள் அடிக்கும் காற்றில் உலர்ந்து வெளியே கொடியில் தொங்கின.

வீட்டில் இந்நேரத்தில் ஒரு சேலை கேட்டால் தருவார்களா? ஏன் எதற்கு என்று கேள்வி மேல் கேள்வி கேட்பார்கள். உண்மையான காரணம் சொல்ல முடியாது. அப்படியே ஏதாவது சொன்னாலும் கொடுக்காமல் போனால் என்ன செய்வது? பொய் சொல்லி ஏமாறுவதை விட திருடுவது மேலாகப் பட்டது.

இழுக்க இழுக்க வந்துகொண்டே இருந்த துரோபதைக்குக் கண்ணன் கொடுத்த நீண்ட சேலையை நெய்தது யாராக இருக்கும் என

இதுவரை யாரும் கேள்வி எழுப்பவில்லை. மானத்தைக் காப்பதுதான் பிரதானம். கேள்வி எல்லாம் தர்மத்தின் முன்பு மௌனமாகிவிடும் தன்மை கொண்டது. செவலையின் முடிவும் தர்மம் சார்ந்தது. அது திருட்டு அல்ல.

மேச்சிங்காகக் கிடைக்கவில்லை. ஒரு சிவப்பு நிறச் சேலையையும் பச்சை நிற ரவிக்கையையும் கொடியிலிருந்து உருவி எடுத்துப் பந்து போலச் சுருட்டிக் கொஞ்ச தூரம் திரும்பி வந்து ஒரு பனை மரத்து அடியில் வைத்துவிட்டுத் திரும்பி துக்க வீட்டிற்குச் சென்றார்.

லொள்ளு லொள்ளு என ஜிம்மி குரைத்ததில் பந்தலில் பெஞ்ச் மேல் தூங்கிக்கொண்டிருந்த இரண்டு பெரியவர்கள் விழித்துக்கொண்டார்கள்.

"யாருப்பா?" என்றார் ஒருவர்.

"பெரியாச்சி எரிஞ்சி வௌஞ்சிட்டாங்க ஐயா" என்ற தகவலைத் தெரிவித்தார் செவலை.

மூக்குக் கண்ணாடியைக் கண்டுபிடிக்க கைகளால் துழவியவாறு "சரிப்பா. பொய்ட்டு வா" என்றார் அடுத்த பெரியவர்.

தென்னை மட்டை மறைவில் நின்றவாறு கை நீட்டி, துகிலுரிந்த உடலைக் கலியுகக் கண்ணன் அளித்த சேலையால் மூடிக்கொண்டாள்.

அதிகாலை ஐந்து மணி.

"பொழுது விடியப்போவுது. அந்தா எரியுது பாரு டீப் லைட். அதுதான் பஸ் டாப். ஐஞ்சர மணிக்கு ஒரு டவுன் பஸ் வரும். போய் ஏறி வீட்டுக்குப் போ. இங்க ஒண்ணும் பயம் இல்ல. அதும் இன்னக்கி பிரேதம் எரியிரதால ஒரு பயலும் வரமாட்டான். தைரியமா போ."

அருகில் வந்து சேலையோடு காட்சி தந்து கையெடுத்துக் கும்பிட்டாள்.

"பரவாயில்ல போம்மா. ஏதோ என்னால முடிஞ்சது" என்றவர் இடுப்பில் செருகி இருந்த பணத்தில் ஒரு ஐம்பது ரூபாய் நோட்டை நீட்டி "இந்தா பஸ்க்கு வச்சிக்க" என்றார்.

"வேண்டாய்யா. வேண்டாம்" என்றாள்.

"அதான் பர்ஸ புடுங்கிக்கிட்டாங்கன்னுயே. எப்புடி போவா? வச்சிக்க" என்றதும் மறுப்பின்றி வாங்கி நடையைக் கட்டினாள்.

இருவரும் வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது செவலைக்கு யோசனை கொஞ்சம் தாறுமாறாக ஓடியது.

இரவில் யாருமில்லாத ஓர் இடத்தில் ஒட்டுத் துணிகூட இல்லாமல் நிற்கும் பெண் பக்கத்தில் கதிரைத் தனியே விட்டுச் சென்றது சரிதானா? அவன் யோக்கியவான்தான். எதையும் சீர்தூக்கிப் பார்ப்பவன்தான். அதர்மத்தை விரும்ப மாட்டான்தான். அவள் ஏற்கனவே சிதைக்கப்பட்டு வேறு நிற்கிறாள். அவனையும் அழைத்துப் போயிருந்தால் அவளுக்குத் துணை யார்? உண்மையில் துணையாகத்தான் இருந்திருப்பான். சந்தேகப்படுவது மோசமான சிந்தனை. பின்னே ஏன் தற்போது திடீரென சந்தேகம் முளைக்கிறது.

மனிதனுக்குக் கண்ணனைப் போலச் சிந்தனை இருந்தாலும் துரியோதனனைப் போலச் சாக்கடை மனது எப்போதும் தோன்றலாம். ஏனெனில், அவன் மனிதன் இல்லையா! எல்லோருக்கும் தோன்றாவிட்டாலும் சிலருக்குத் தோன்றும். சிலரில் கதிர் இருப்பானா? அப்படியானால் தானே எண்ணெயை ஊற்றி எரியவிட்டதாகாதா?

சேச்சே என் கதிர்வேலைப் பற்றி எனக்குத் தெரியாதா? ஒரு முற்றுப்புள்ளியை இட்டுக்கொண்டார்.

ஆனால் கதிர்வேலைத் தனியே விட்டுச்சென்றதும் அமைதியாக இல்லை. கிளர்த்தெழுந்தான்.

"ஏம்மா இந்த ஈனத்தொழில விட்டுட்டு

வேற வேலைக்குப் போகக்கூடாதா?" என்றான்.

"வயத்துப் பசி தம்பி. இப்போ நிம்மதியா மூணு வேளையும் சாப்புடுறோம்."

"நாட்டுல வேலையா இல்ல. பூ கட்டலாம். மண்ணு தூக்கலாம். கல்லு தூக்கலாம்."

"கல்லு தூக்கி சித்தாள் வேலதான் பாத்தேன். அங்க மேஸ்திரி ஓசியில மிரட்டிப் படிய வச்சாரு. அதால அவரு வேலை செய்யுற இடத்தவிட்டு வந்துட்டேன். ஒருநாள் வேலை தேடி எல்லாரும் கூடியிருக்கும் இடத்துல ஒருத்தர் வந்து ஒரு சித்தாள் தேவைப்படுது வாரிங்களான்னார். பக்கத்துல இருந்த என்னோட ப்ரண்ட் ஒருத்தி நல்ல கூலி கொடுப்பாரு போடின்னு சப்போர்ட் பண்ணினா. அவரு அழச்சிக்கிட்டுப் போன கட்டிடம் காங்கிரெட் செட்டாகணும்னு பாதி வேலையில நின்னுது. அங்க வேற யாரும் இல்ல.

"உனக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு கூலி தாறாங்க?" என்றார்.

"இருநூறு ரூவா" என்னேன்.

"நான் ஆயிரம் ரூவா தாறேன். சாயங்காலம் வரை இருந்துட்டு போன்"னார். மேஸ்திரிகிட்ட நடந்த மாதிரியே நடந்து ஐஞ்சி நாள் சம்பாத்தியத்த ஒரே நாள்ல சம்பாதிச்சேன். பணத்தாசை புடிச்சிப் போச்சி. இதையே தொழிலாக்கிக்கிட்டேன். இப்ப நல்லா வசதியா வாழுறேன். பொண்ணும் பையனும் காலேஜ்ல படிக்கிறாங்க. அவங்களாவது யோக்கிதையா வாழட்டுன்னு காலத்த ஓட்டுறேன்."

"அயோக்கியத்தனம் பண்ணுற எல்லாரும் அவங்க செய்யுற தப்புக்கு ஆயிரம் காரணம் சொல்லி நியாயம் கற்பிப்பாங்க. ஆனா அது கேவலமான தொழில்ன்னு ஒத்துக்கவே மாட்டாங்க."

"இத ஒரு தொழில்ன்னே பம்பாய்ல லைசன்ச கவர்மெண்டே கொடுத்து ஒத்துக்கிட்டுது நீங்க என்ன பேசுறிங்க."

"நல்ல தொழில்ன்னா இப்படி ராத்திரியில அம்மணமா நிக்க வேண்டி வருமா?"

"இனி நான் திருந்தினாலும் நல்லவன்னா சொல்லப்போறிங்க. இல்லயே."

"இதெல்லாம் உங்க பசங்களுக்குத் தெரியுமா?"

"அவங்களுக்குத் தெரியாது."

"தெரியாதுன்னா எப்புடி? இப்படி தாராளமா பணம் எப்படி வருதுன்னு நெனக்க மாட்டாங்களா. யாருக்கிட்ட பொய் சொல்லுறிங்க."

பதில் சொல்லத் தெரியாது தடுமாறினாள். அமைதியானாள்.

"நாள பின்னே உங்க பசங்க தப்பு பண்ணினா நீங்க எப்புடி கண்டிக்க முடியும். ஆமா.. உங்க புருஷன் என்ன பண்ணுறார்?"

"வாரத்துக்கு ரெண்டு மூணு நாள் வேலைக்குப் போவான். கூலிய வாங்கிக்கிட்டு வந்து குடிச்சிட்டுப் பேசாம வீட்ல படுத்துக்கிடுவான். அவனோட பசிக்கும் நான்தான் படுக்கணும்."

"இதுக்கு எல்லாருக்கும் வெஷத்த கொடுத்துக் கொன்னுட்டு நீங்களும் தற்கொலை பண்ணிக்கிடலாம் போங்க."

"வெளியே இருந்து பாத்தா அப்படித்தான் யோசனை பண்ணத் தோணும். வாழ்ந்து பாத்தாத்தான் அது நியாயமா படும்."

மெல்லத் திரும்பிப் பார்த்தான். தன்னை மறைத்திட பயன்படுத்திய தென்னை ஓலை மட்டை சாயாமல் இருக்க பெரிதாகப் பிரயத்தனம் பட்டுத் தாங்கிப் பிடித்தவண்ணம் இருந்ததை அறிந்தான்.

"ஏன் கஸ்டப்பட்டு ஓலை மட்டைய புடிச்சிக்கிட்டு இருக்குறிங்க. நான் ஒண்ணும் திரும்பி உங்கள பாக்க மாட்டேன். கவலப்படாதிங்க" என்றான்.

"இருந்தாலும் மானம்ன்னு ஒண்ணு



இருக்குல்ல."

"வெக்கமா? மானமா? உடல விக்கிற உங்களுக்கா..!"

"அதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. உங்களுக்கு வயசு கம்மி. கடைசி வரைக்கும் வெட்கம் இருக்கும். மனசு மட்டும்தான் மரத்துப்போகும்."

"மனசுல இருந்து வர்றதுதானே வெட்கம்."

"இல்ல, உடல்ல இருந்து வரதா நடிக்கணும். அப்பதான் திருப்தி அடைவாங்க. அந்த நடிப்பே பழகிப் போச்சி. போலியான வெக்கம். மனசுக்கு சம்மந்தமில்லாத வெக்கம்."

"அப்படியேன்னாலும் இந்த அசிங்கத்த பண்ண உங்களுக்கெல்லாம் எப்படி மனசு வருது?"

"என்னோட பாடி உங்களுக்கு அசிங்கமா இருக்கா?"

"ஒரு பெண்ணு காதல்லயோ காமத்துலயோ பாத்தா அது ஒரு கிறக்கம் ஒரு கலை உணர்வு வரும். ஆபத்துல ட்ரஸ் இல்லாம இருக்குற பொம்புளய பாத்தா எப்படி காமம் வரும். அசிங்கமாவும் தெரியாது. வெறும் ஜடப் பொருளாத்தான் தெரியும்."

"சின்ன வயசுன்னாலும் ரொம்ப தெரிஞ்சவங்க போலப் பேசுறிங்க தம்பி."

"தெரிஞ்சவங்கன்னா?"

"எக்ஸ்பீரியன்ஸ சொன்னேன்."

"அடடா நான் ஒரு கன்னிப் பையன். வாழ்க்கைல பட்ட அடி அப்புடி பேச வைக்குது. வேலை கிடைக்கலங்குறதுக்காக நான் பெண்ணா இருந்தாலும் உடம்ப விக்க முடிவு பண்ண மாட்டேன். கோபம்.. கோபம்... ஆவேசம். ஆழமா பேச வைக்குது. அவ்வளவுதான்."

"சரி மட்டைய கீழ போட்டுட்டேன்" என்றாள். அது கீழே விழுந்த சப்தம் கேட்டது.

பாட்டியின் கடைசி சதைத் துண்டையும் தட்டித் தட்டி நெருப்பில் கரைத்தெடுத்தான் கதிர்வேல். முழுவதும் சாம்பலானாள் பாட்டி. மரணம் எல்லாவற்றையும் கூட்டித் தள்ளிவிட்டுப் போகிறது. வாழ்வெனும் பெரும் துயர் முடிவுக்கு வந்துவிடுகிறது. ஆன்மா என்ற ஒன்று உண்டா? உண்டென்றால் அவளின் ஆன்மா இன்னும் இருக்கிறதா? அது மறுபிறவி எடுக்குமா என்றெல்லாம் அவனுக்குத் தெரியாது. ஆனால் வாழ்க்கை ஒன்றுமில்லாதது என்பதுபோலப் பட்டது.

நிசப்தம் நிச்சலனமாகி நிராமயம் ஆனது. முல்லைக்காக விழித்துக்கொண்டான்.

அவளை இவ்வளவு கோபமாகக் கண்டித்திருக்கக்கூடாதோ என்று யோசிக்கத் தொடங்கினான்.

சமூகம் அப்படியேதான் இருக்கிறது. நாகரிகம் வளர்ச்சி என்பதெல்லாம் புறத்தோற்றத்தில்தான் இருக்கின்றன. காட்டுமிராண்டிச் சமூகத்தைக் கடந்து நாகரிக உலகில் வாழ்வதாகப் பீற்றிக்கொள்வது எல்லாம் பொய். தழைகளைக் கட்டிக்கொண்டு திரிந்தவன் உடையில் அலைகிறான். மற்றபடி அப்போதிருந்த வக்ர புத்தி காணாமல் போய்விட்டதா என்ன? துன்பங்களும் துயரங்களும் குறைந்துவிட்டதா? இல்லை.

கொடும் குற்றத்திற்காக மரணதண்டனை வழங்கினால் ஒரு மனிதனின் உயிரைப் பறிப்பது காட்டுமிராண்டித்தனம் இல்லையா? அப்படி பறிக்க எந்தச் சமூக அமைப்புக்கும் உரிமையில்லை என நியாயம் பேசுபவர்கள் பாதிக்கப்பட்டவரைக் கண்டுகொள்ளாமல் விடுகிறார்கள். இவ்வாறாக அநீதிக்குத் துணை போகும் அளவுக்குக்கூட நீதியின் பக்கம் நிற்க சமூகம் தயங்குகிறது.

விபச்சாரி விலைமகளாகி பாலியல் தொழிலாளியாக பெயர்தான் மாறி இருக்கிறது. அந்தக் கலாச்சாரம் மாறவே இல்லை. யோக்கியமாக வாழ்வது என்பது பெரிய சவால்.

எந்தச் சட்டம் போட்டாலும் நடைமுறைகளை மாற்றினாலும் லஞ்சம் வாங்குவது நின்றபாடில்லை. கொடுக்காமல் காரியத்தைச் சாதிப்பது எளிதல்ல. இப்படி இருக்க நான் என்ன சமூகத்தைத் திருத்திவிடப் போகிறேன். முல்லை இந்தத் தொழிலுக்கு வருவாள் என்று முன்னமே திட்டம் வைத்திருந்தாளா என்ன?

நான்காம் வகுப்பு கணக்காசிரியர் எதிர்காலத்துல நீ சிந்தனையாளனா வருவடா, விஞ்ஞானியா வருவடான்னு புகழ்ந்தார். நம்பிக்கையூட்டினார். ஒரு மண்ணாங்கட்டியாகவும் ஆக முடியவில்லை. பெரிய படிப்பு படித்துப் பெரிய வேலைக்குப் போகவேண்டும். குறைந்தது ஆசிரியராகவாவது போகவேண்டும் என்ற பெரும் கனவு, விழித்துப் பார்த்தால் இந்தப் பூமி சூது வாது நிறைந்ததாகப் பட்டது. கனவு பலிக்காது எனத் தெரிய வந்தது. நான் வேண்டுமென்று விரும்பியா வெட்டிமைத் தொழிலையும் செய்கிறேன். யாரும் இதைச் செய்யச் சொல்லி என்னைக் கட்டாயப்படுத்தாவிட்டாலும் பெருமழையின்போது நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக்கொண்டு போவதைப்போலக் கால ஓட்டத்தில் கலந்து ஓடிக்கொண்டிருக்கிறேன். எனக்கு ஒரு நியாயம். முல்லைக்கு ஒரு நியாயமா?

அவளைக் குறை கூற நான் யார்? அதிகப்பிரசங்கித்தனமாக எல்லாம் தெரிந்தவன்போல் தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்திவிட்டேன்.

எதிர்த்துப் பேசமுடியாது, வாதம் செய்யமுடியாது அவள் இக்கட்டில் இருந்ததைச் சாதகமாகப் பயன்படுத்திவிட்டேன். ஆமாம்.. ஆமாம். அதில் சந்தேகமே இல்லை என்ற முடிவுக்கு வந்தான்.

அவனது மனம் ஒரு புள்ளிக்கு வந்தது. மௌனம் உடையும் நிலையில் பரிதவித்தது.

சரசரவெனத் தென்னை மட்டைச் சப்தம் கேட்டது. தூரத்தில் இருட்டில் தெரிந்த கருப்பு உருவம் சித்தப்பா என உறுதி செய்தான். அவளும் பார்த்திருக்க வேண்டும். அதனால்தான் இருட்டை உடையாகப் போர்த்தி இருந்தவள் தென்னை மட்டை மறைவுக்குள் புகுந்துகொள்கிறாள்.

சித்தப்பா உடை மாற்றத்தைப் பார்த்திருப்பாரோ என ஐயுற்றான்.

குரலைத் தாழ்த்தி "என்னை மன்னிச்சிடுங்க, உங்கள தப்பு தப்பா பேசிட்டேன்" என்றான்.

அவளிடம் பதில் இல்லை. இருந்தாலும் செவலை அருகில் வந்துவிட்டதால் சொல்ல முடியாத சூழலில் இருந்திருப்பாள்.

மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

காலத்தின் கண்ணாடியாக விளங்குபவை கவிதைகளே. மனித மனதின் மென்னுணர்வுகளை மெல்லத் தட்டியெழுப்பும் வல்லமை கவிதைகளுக்கே உண்டு. அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்காக நாம் எல்லோருமே எதிரெதிர் திசைகளில்தான் ஓடிக்கொண்டேயிருக்கிறோம். எதிர்வருபவர் முகம் பார்த்துப் புன்னகைக்கவும் நமக்கு மனமோ, அவகாசமோ இல்லை.

ஏன் இப்படியாக ஓடிக்கொண்டிருக்கிறோம்? இதுதான் வாழ்க்கையா? இதிலிருந்து விடுபட்டு வாழ என்ன வழி? என்கிற கேள்விகளை எழுப்பும் மனம் வாய்த்தவர்களே, சராசரி வாழ்விலிருந்து துண்டித்துக்கொண்டு, புதிய வாழ்வோடு இணைத்துக்கொள்வதோடு, தங்களையும் புதுப்பித்துக்கொள்கிறார்கள்.

எல்லோரைப் போலவும் இல்லாமல் சற்றே தனித்திருந்தும், சமூகம் குறித்த அக்கறையோடும், சமூக நிகழ்வுகளைக் கூர்ந்து

கவனித்தும், கண்ணுற்றதைப் புதிய கோணத்தில் சிந்திப்பவனுமே கவிஞராகின்றான். காலந்தோறும் கவிஞர்கள் புதிது புதிதாய்ப் பிறந்துகொண்டேயிருக்கிறார்கள்.

புதிய கவிதைகளும் பிறந்த வண்ணமிருக்கின்றன.

கவிதைக்கான சொற்களுக்கு வண்ணம் தீட்டுவது மட்டுமே கவிஞனின் வேலையல்ல; நெடிய வாழ்விலிருந்து எது கவிதையென்பதைக் கவிஞன் கண்டுகொண்டாலே போதும்; தனக்கான வார்த்தைகளைக் கவிதைகளே கண்டெடுத்துக் கொள்ளும். செயற்கைப் பூச்சுகளால் கவிதைகளுக்கு ஒப்பனை செய்து, சற்றே அழகுபடுத்தலாம். ஆனால், ஒருபோதும் ஒப்பனைகளால் கவிதைக்கு உயிர் தரவே முடியாது.

"உண்மையும் தெளிவுமே கவிதையின் உயிர்" என்று சொன்ன மகாகவி பாரதியின் வரிகள், இன்னமும் தமிழ்க் கவிநிலத்தில் வேர்ப்பிடித்து நிலைத்திருக்கின்றன.

பாரதியாரை, பாரதிதாசனை, தமிழ்ஒளியை, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைத் தன் ஆதர்ச கவிஞராக வரித்துக்கொண்ட பல்லாயிரம் தமிழ்க் கவிகள், எதார்த்த வாழ்விலிருந்து துளிர்க்கும் கவிதைகளை எழுதும் நாளைய நம்பிக்கைச் சுடர்களாக மிளிர்கிறார்கள். அப்படியான கவிஞர்களின் கவிதைகளை ஏதேனுமொரு இதழில் படித்துவிட்டாலே என் மனதில் உற்சாகம் கரை புரண்டோடும். சிற்றிதழ்களில் மட்டுமல்ல; ஆனந்த விகடன், குமுதம், பாக்யா, ராணி, இனிய உதயம் உள்ளிட்ட வெகுசன இதழ்களிலும் நல்ல கவிதைகள் அவ்வப்போது வாசிக்கக் கிடைக்கும். அப்போதெல்லாம் அந்தக் கவிஞரின் பெயரையும், அந்தக் கவிதை வரிகளையும் என் மனசினோரத்தில் பொத்தி வைத்துக்கொள்வேன்.

அப்படியாகத்தான் 'பாக்யா' வார இதழில் நான் படித்த 'வெறகடுப்பு' எனும் கவிதையை மனதிலிறுத்திக்கொண்டேன்.

'காட்டுல கள்ளிவெறகு

தோட்டத்துல தொவரமாரு

கட்டாப்புல கருவேலமரம்

ஓடையிலே முள்ளுச்செடி..' என்பதாகத் தொடங்கும் அக்கவிதையின் முடிப்பில்,

'வெறகடுப்பிலிருந்து

மண்ணெண்ணெய் ஸ்டவ் வந்து

மண்ணெண்ணெய் ஸ்டவ்வும் மாறி

கேஸ் அடுப்பு வரை வந்துருச்சு

வளர்ச்சிதான் இது

ஒத்துக்கிறேன்

ஆனாலும்

மண்ணெண்ணெய் வூத்தி

மாமியார் எரிப்பு

கேஸ்டவ் வெடிச்சு

மருமக சாவுங்கிற

வளர்ச்சியோட வேகத்தத்தாங்க

சீரணிக்க முடியல.' – என்கிற வரிகளைப் படிக்கிற எவரையும் உள்ளுக்குள் உடைந்துபோக வைத்த கவிதையது. அந்தக் கவிதையை எழுதிய கவிஞரின் பெயரை அன்றைக்கே என் மனதில் பதிந்துகொண்டேன். இன்னும் அழியாமல் அழுத்தமாகப் பதிந்தேயிருக்கிறது.. 'அருண்பாரதி' எனும் அந்தக் கவிஞரின் பெயரும்.

காற்றில் சூடும் குளுமையும் கலந்தேயிருக்கும் தேனி மாவட்டத்தின் அழகுக்கு வேலி கட்டியிருப்பது மேற்கு மலைத் தொடர்ச்சியே. அந்தப் பசுமை குடியிருக்கும் மாவட்டத்திலுள்ள கம்பம் பள்ளத்தாக்கிலுள்ளது உத்தமபாளையம். அந்த ஊரில் வாழ்ந்த ஆரோக்கியசாமி – செல்வி தம்பதியினருக்கு 1987ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் தேதி தலைமகனாகப் பிறந்தவர் அருண்குமார். படிக்காத பெற்றோருக்கு மகனாகப் பிறந்த அருண்குமார், பள்ளிக்குச் சென்ற முதல் தலைமுறை எனும் சிறப்போடு கல்வி கற்றார்.

மண் சுமக்கும் மாட்டுவண்டி ஓட்டுபவராகப் பணியாற்றி வந்த அருண்குமாரின் தந்தை, மண் சரிந்துவிழுந்து இறந்துபோகிறார். அந்தத் துயரமும் வலியுமே அருண்குமாருக்குள் கவிதையாகக் கசிந்தன. பள்ளியில் படிக்கிற நாட்களிலேயே கவிதைகள் மீது ஆர்வம்கொண்ட அருண்குமாருக்குக் கவிதை அரும்பியது. பாரதி, பாரதிதாசன் கவிதைகள் தந்த தாக்கத்தினால் எழுதத் தொடங்கியவர், தன் பெயருடன் 'பாரதி'யை இணைத்துக்கொண்டு, 'அருண்பாரதி' எனும் பெயரில் கவிதைகளை எழுதத் தொடங்கினார். 2004ஆம் ஆண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு படிக்கும்போதே பள்ளி மாணவனாக இருந்த அருண்பாரதி, 'சிந்திக்க நேர்ந்தவை' எனும் தனது முதல் கவிதை நூலை மாணவர்கள் மத்தியிலேயே வெளியிட்டார்.

கிராமத்து மண் வாசமிக்க கவிதைகளையும், எதிர்காலம் குறித்த ஏராளமான கனவுகளையும் சுமந்துநின்ற அருண்பாரதிக்குள்ளும் திரைப்படப் பாடல் எழுத வேண்டுமென்கிற ஆசை துளிர்த்தது. பாடல் எழுதும் உத்வேகத்தில் ஊரைவிட்டு, சென்னைக்குப் பயணமானார் அருண்பாரதி.

சென்னை வந்த பின்னரே திரையுலகம் பற்றிய புரிதல் அருண்பாரதிக்குக் கிடைக்கிறது. சில காலம் கோயம்பேடு பகுதியிலுள்ள டீக்கடை ஒன்றிலும், சில காலம் கூரியர் சர்வீஸில் டெலிவரி வேலையையும் செய்துகொண்டே, தனக்கான பாடல் வாய்ப்புகளைத் தேடினார் அருண்பாரதி.

சென்னையில் அருண்பாரதியை முதலில் அரவணைத்த கரங்களுக்குச் சொந்தக்காரர் இயக்குநரும் நடிகருமான கே.பாக்யராஜ். தன்னுடைய அலுவலகத்திலேயே தங்கவைத்து, ஆர்மோனியப் பெட்டியில் வழிந்த இசைக்குப் பாடலெழுத வைத்தது என மூன்றாண்டுகள் கே.பாக்யராஜின் நேரடி உதவியாளராக இருந்து, தனது திரைப்படப் பாடலெழுதும் கனவிற்கு உரமேற்றிக்கொண்டார் அருண்பாரதி.

2009ஆம் ஆண்டில் 'மண்ணோடு போராடும் வேர்கள்' எனும் தனது இரண்டாவது கவிதை நூலினைத் தமிழ் அலை வெளியீடாகக் கொண்டுவந்தார் அருண்பாரதி. 'சொற்களை ஆயுதங்களாகக் கையாளும் பக்குவம் பெற்றிருக்கிறார் அருண்பாரதி. அருண்பாரதியின் கவிதைகளில் போர்முரசு ஒலிக்கிறது. கத்திகளின் சத்தம் கேட்கிறது. அவரது வார்த்தைப் படை வெல்லட்டும்' என அந்த நூலில் வாழ்த்தினை வழங்கியிருப்பார் கவிக்கோ அப்துல்ரகுமான். அந்த நூலில் 'எங்க அப்பா' எனும் முதல் கவிதையில், தனது அப்பா குறித்தே எழுதியிருப்பார் கவிஞர்.

'மாட்டுவண்டி பூட்டிக்கிட்டு
தென்னாட்டுச் சிங்கம்போல
வண்டியிலே வருவாரு எங்கப்பா..
உருமாலக் கட்டிக்கிட்டு
ஊருக்குள்ள வந்துபுட்டா
ஊரே வச்சகண்ணு வாங்காம
பாத்திருக்கும்..'

அப்பாவின் சிறப்புகளைப் பட்டியலிட்டு, பாடநூல் வாங்க அப்பாவிடம் காசு கேட்கிறார் கவிஞர். 'மண்ணள்ளிப் போட்டுட்டு பணத்தோட வர்றேன்' என்று சொல்லிவிட்டுப் போன அப்பா, வாழ்க்கையில மண்ணள்ளிப் போட்டுவிட்டுப் பிணமாக வருகிறார்.

'புள்ளங்க மூணுந்தான்
உசுருன்னு வாழ்ந்த மனுசன்
இப்ப மண்ணுக்குள்ள
புள்ளங்க மூணும்
நடுத்தெருவுல!
ஒரு உசிர எடுத்ததுனால
ஒரு குடும்பமே
நடைபிணமா திரியுறது
தெரியுமோ? தெரியாதோ?
எங்க வாழ்க்கையில
மண்ணள்ளிப் போட்ட



அந்த சாமிக்கு.'

இப்படியாக அந்தக் கவிதை முடிகையில், நம் கண்களினோரம் ஒரு சொட்டுக் கண்ணீர்த்துளி வந்துவிழும்.

உழைக்கும் மக்களின் சொல்லாடலில் எழுதப்பட்ட கவிதைகள் நூலெங்குமுள்ளன. இடையிடையே இருக்கும் குறுங்கவிதைகளிலும் அதே மொழியாடலும், எள்ளலும் குத்தலுமான வரிகளும் நம் மீது குண்டூசியெனக் குத்தி நிற்கின்றன. 'தெய்வமே...' எனும் தலைப்பிலான கவிதையில்,

'கொடுக்கிற தெய்வம்

கூரையைப் பிய்த்துக்கொண்டு

கொடுக்குமாம்...

ஏ தெய்வமே!

நீ கூரையை...

பிய்த்துக்கொண்டெல்லாம்

கொடுக்க வேண்டாம்

முதலில்

எங்களுக்கு ஒரு

கூரையைக் கொடு போதும்!'

இந்தக் கவிதை நாத்திகம் பேசுகிறதா.. இல்லை.. ஆத்திகம் பேசுகிறதா என்பதைவிட, இக்கவிதை மானுட வாழ்க்கை மேம்பட வேண்டுமென்பதற்கான கோரிக்கையைக் கடவுளிடம் வெறும் வேண்டுதலாக அல்ல, உரிமைக்கான முழக்கமாக வைக்கிறது என்றே சொல்லலாம்.

இந்நூலிலுள்ள 'பறை..' எனும் இன்னொரு கவிதையைப் படிக்கையில் நம் இதயம் அதிர்கிறது.

'நாங்கள் தப்படிக்கும்

பறைச் சத்தத்தில்தான்

உங்கள் பூசாரிக்கே

சாமி வருகிறது.

ஏ சாமியே

உன்னைப் பார்க்க

நாங்கள்

கோவிலுக்குள் வரக்கூடாதா?'

இந்தியத் திருநாடு சுதந்திரமடைந்து 78 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ள வேளையிலும், காலங்காலமான இக்கேள்விக்கு இன்னமும் தெளிவான உறுதியான பதில் கிடைத்தபாடில்லையே..!

'பாக்யா' வார இதழில் 'புதிய பானையில் பழைய சோறு' எனும் புதிய கிராமியக் கவிதைத் தொடரை எழுதும் வாய்ப்பினை அருண்பாரதிக்கு அளித்தார் இயக்குநர் கே.பாக்யராஜ். அப்போது அருண்பாரதிக்கு வயது 22. தனக்குக் கிடைத்த நல்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்ட அருண்பாரதி, 22 வாரங்களுக்கு எழுதிய அந்தத் தொடரின் மூலமாகப் பலரின் கவனிப்பையும் பெற்றார். மேலும், 2015ஆம் ஆண்டில் 'துணை முதல்வர்' எனும் திரைப்படத்தில் பாடலாசிரியராக அருண்பாரதியை அறிமுகப்படுத்தினார் கே.பாக்யராஜ். அந்தப் பாடல் ஒலிநாடாவில் பயன்படுத்தப்பட்ட போதிலும், திரைப்படத்தில் இடம்பெறாததால் அருண்பாரதிக்கு வேறு வாய்ப்புகளேதும் கிட்டவில்லை. தொடர் வாய்ப்புகள் இல்லாமல் சென்னையில் எவ்வளவு காலம் சும்மாயிருப்பது..?

தனது கனவைச் சற்றே மூட்டை கட்டி வைத்துவிட்டு, குடும்பச் சூழலின் தேவை கருதி, ஊடகத் துறையில் வேறு பணிகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டத் தொடங்கினார் அருண்பாரதி. கவிஞருக்கு மீண்டும் பாடலெழுதும் வாய்ப்பு இசையமைப்பாளரும் நடிகருமான விஜய் ஆண்டனி மூலமாக வாய்த்தது.

விஜய் ஆண்டனி கதாநாயகனாகவும், இசையமைப்பாளராகவும் பணியாற்றிய 'அண்ணாதுரை' திரைப்படத்தில் பாடலெழுதும் வாய்ப்பினை 2017ஆம் ஆண்டு அருண்பாரதிக்கு வழங்கினார் விஜய் ஆண்டனி. அந்தப் படத்தின் அனைத்துப் பாடல்களையும் எழுதும் நல்வாய்ப்பு அருண்பாரதிக்குக் கிடைத்தது, அதனை மிகச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டார் கவிஞர். அந்தப் படத்தில் இடம்பெற்ற "தங்கமா... வைரமா..." பாடல் மூலம் தமிழகமெங்கும் அறியப்படும் பாடலாசிரியரானார். அன்று தொடங்கி விஜய் ஆண்டனி நடிக்கும் எல்லாப் படங்களிலும் அருண்பாரதியின் பாடல்களும் இடம்பெற்று வருகின்றன என்பது இருவருக்குமிடையேயான அன்புக்கும் நட்புக்கும் சான்றாக விளங்குகிறது.

அஜித்குமார் நடித்த விஸ்வாசம், ரஜினிகாந்த் நடித்த அண்ணாத்த, என்.லிங்குசாமி இயக்கத்தில் விஷால் நடித்த சண்டக்கோழி 2 உள்ளிட்ட பல படங்களிலும் தொடர்ந்து பாடல்களை எழுதத் தொடங்கினார் அருண்பாரதி. தனக்குக் கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் மிகுந்த ஈடுபாட்டோடும், அக்கறையோடும் செய்கிற அருண்பாரதிக்குத் தொடர் வாய்ப்புகள் கிடைத்து, சிகரம் நோக்கிய தன் பயணத்தை மிகச் சீராகத் தொடங்கினார்.

எல்லோரோடும் அன்போடு பழகும் எளிய மனிதராக வலம்வரும் அருண்பாரதியின் திரைப்பாடல்களில் கவிச்செறிவும், கிராமத்துச் சொல்லாடலும் வெகு இயல்பாகவே கலந்திருக்கும். பாடல்களை எழுதுவதில் மட்டுமே மனநிறைவு கொள்ளாமல் அவ்வப்போது கவிதைகளையும் தொடர்ந்து எழுதிவந்தார் அருண்பாரதி.

'பாக்யா' இதழில் எழுதிய கவிதைத்தொடர் 2016 டிசம்பரில் 'புதிய பானையில் பழைய சோறு' எனும் தலைப்பில் நூலானது. ஓவியர் ப்ரத்யூஷின் நேர்த்தியான கோட்டோவியங்களோடு மலர்ந்துள்ள இந்த நூலிலுள்ள 22 கவிதைகளுமே கிராம வாழ்வின் எதார்த்தத்தை, அழகிய வயல்வெளியை, பசியெடுத்த உழவுக்குடிகளின் வாழ்க்கைப்பாடுகளை எவ்விதப் பூச்சுகளுமற்று நேரான கூரான மொழியில் பேசின. தாய்ப்பால், பச்சை குத்து, சொகப் பிரசவம் ஆகிய கவிதைகள் ரொம்பவும் தனித்துவமானவை.

தனது கவிதைகளில் வெளிப்படுத்திய கிராமத்துச் சொற்களையும், கிராமத்து சம்சாரிகளின் வாழ்க்கைச் சிக்கல்களையும் தனது திரைப்பாடல்களிலும் மிகப் பொருத்தமான வகையில் கையாளுவதில் சிறந்த ஆளுமையாளராக அறியப்படலானார் பாடலாசிரியர் அருண்பாரதி.

'திமிரு புடிச்சவன்

அந்தத் திமிருக்கே புடிச்சவன்...'(திமிரு புடிச்சவன்–2018)

'மீச வச்ச வேட்டைக்காரன் எங்க கருப்பன்தான்

வீரத்துக்கு இவன போல இல்ல ஒருத்தன் தான்...' (சண்டக்கோழி 2–2018)

'டங்கா... டங்கா... டங்கா டங்கா... டங்கா டங்கா டானே...

டிகிரு டங்கா... டிகிரு டங்கா டானே...' (விஸ்வாசம்–2018)

'வா.. சாமி... வா... சாமி...'

(அண்ணாத்த–2021)

'கல்லூறும் பூவே...' (பிச்சைக்காரன் 2–2023)

காற்றில் கலந்து காதுகளை வந்தடையும் பாடல்களையெல்லாம் தனது கவித்துவச் சிந்தனை வரிகளால் கவனப்படுத்தி, முன்னணிப் பாடலாசிரியர்களுள் ஒருவராக முன்னேறி வருகிறார் கவிஞர் அருண்பாரதி.

"அறிவு சார்ந்த பாடல்கள், உணர்வு சார்ந்த வரிகள் என இரண்டு விதமாகத் திரைப்படப் பாடல்களை நான் பார்க்கிறேன். அதில் இரண்டாவதான உணர்வு சார்ந்த விஷயத்திலேயே என் கவனம் இருக்கும். அதன் வழியேதான் வாழ்க்கையைப் பதிவுசெய்ய முடியும். அதுதான் காலம் கடந்தும் வாழும் என நம்புகிறேன்" என்று தான் எழுதும் பாடல்களைப் பற்றிச் சொல்லும் அருண்பாரதியின் உணர்வு சார்ந்த பாடல்கள், நம் உணர்விலும் சட்டெனக் கலந்து போகின்றன.

2020 சனவரியில் தனது நான்காவது கவிதை நூலாக 'அம்மாச்சி'யைப் படைத்தார் அருண்பாரதி. அதில், தாத்தா, தங்கை, அம்மாச்சி, தாய்மாமன், அத்தை, அண்ணன், சித்தி என மனித உறவுகளைப் பற்றியும், மனித வாழ்க்கைக்குப் பயனளிக்கும் கொடுக்காப்புளி மரம், செருப்பு, சட்டை பற்றியும் எழுதியுள்ள கவிதைகள், அருண்பாரதியின் விசாலமான கவிதைப் பார்வைக்கும் வாழ்ந்துபெற்ற அனுபவப் பகிர்விற்கும் சிறந்த எடுத்துக்காட்டான கவி வரிகளாக விளங்குகின்றன.

தனது திரைப்பாடல்களுக்காக 'இளம் பாடலாசிரியருக்கான கண்ணதாசன் விருது', 'Best Inspiration Lyricist' எடிசன் விருது, அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கிய மதிப்புறு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ள அருண்பாரதி, தற்போது திரைப்படங்களுக்கு வசனமும் எழுதி வருகிறார். கவிஞரது தொகுப்பிலுள்ள

‘ஈமக்கலயம்’ எனும் கவிதை, கேரள மாநில அரசின் பன்னிரண்டாம் வகுப்பு சிறப்புத்தமிழ் பாடநூலில் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கவிஞர் அருண்பாரதியின் கவிதைகள் மொத்தமும், கிராமத்து வாழ்வையே மையப்பொருளாகக் கொண்டு, ஒரு கதைக்கான கனத்துடன் இருப்பதைக் காணலாம். அப்படியான கவிதைகளுள் ஒன்றாக இந்தச் ‘செருப்பு’ கதைக்கவிதையும் சேர்ந்துகொள்கிறது.

‘நான்காம் வகுப்பு வரை
செருப்பு போட்டே
நடந்ததில்லை நான்
செருப்பு வாங்கக்கூட
குடும்பத்தில் காசு இல்லை என்பதே
உண்மை என்றாலும்
நம்மளத் தாங்குற பூமாதேவிய
செருப்புக் காலால மிதிக்கக் கூடாதுன்னு
அப்பா சொன்ன வார்த்தைகளையே
நீண்ட நாள்களாக
நம்பிக் கொண்டிருந்தேன்
மற்றொருமுறை பள்ளிக்கூடத்திற்குப்
புதிதாக வந்த ஆசிரியர்
செருப்பு போடாம ஸ்கூலுக்கு
வரக்கூடாதுன்னு
அடித்து அனுப்பியதில்
அழுதுகொண்டே போய் நின்றேன்
அப்பா முன்பு
வேறு வழியில்லாமல்
தன் முதலாளி மகன்
பயன்படுத்தித் தூக்கியெறிந்த
பழைய செருப்பொன்றை
கையில் தூக்கிக் கொண்டுவந்து
என் காலில் போட்டுவிட்டார் அப்பா
அப்பொழுதுதான்
அவர் கால்களைக் கவனித்துக் கேட்டேன்
அப்பா நீங்க ஏன்
செருப்பு போடுறதில்ல என்று
வலி சுமந்த காயங்களோடும்
காய்ந்துபோன உதடுகளோடும்
மெல்லிய புன்னகையில்
சொல்ல ஆரம்பித்தார் அப்பா
செருப்பு போடாமல் நடந்ததற்காய்
நான் ஆசிரியரிடமிருந்து
அடி வாங்கியது போல
முதலாளி முன்பு
செருப்பு போட்டு நடந்ததற்காய்
அவர் வாங்கிய
சூடுகள் ஆறாத கதையை.’(அம்மாச்சி, பக்கம்: 66)

இன்னும் சூடு ஆறாத கதையைப் போலவே, சொல்லித் தீராத கதைகளும் இம்மண்ணில் உண்டு. சொல்லிச் சொல்லித் தீராததே கதையென்றாலும், காலந்தோறும் விட்டுவிடாமல் அதைச் சொல்வதும், அடுத்த தலைமுறைக்கு நம் கதைகளைக் கவிதைகளினூடாகவேனும் சொல்லிச் செல்வதும் ஒவ்வொரு கவிஞருக்கும் கதாசிரியருக்குமான பணியென்பேன்.

அன்புத்தம்பி அருண்பாரதி ஒரு கவிஞராக, திரைப்படப் பாடலாசிரியராகத் தன் பணியினைச் செவ்வனே செய்துவருகிறார். தமிழ்க் கவியுலகமும், தனக்கான சில கதைக்கவிதைகளை அருண்பாரதியின் வழியே பெற்றுக்கொள்ளவே பெருநம்பிக்கையோடு காத்திருக்கிறது. எல்லாக் காத்திருப்பும் காலத்தே கனிவதைப்போல், இந்தக் காத்திருப்பும் சில கதைக்கனிகளைக் கவிதைகளாகப் பறிப்பதற்காகவே காத்திருக்கிறது. காலமும் கவிதைகளும் என்றென்றும் கனிந்துகொண்டேயிருக்கட்டும்.

– இத்துடன் நிறைகிறது.

தி.வள்ளி



ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்

# பொன்னுத்தாயி

வட்டில் நிறைய பழைய சாதத்தைக் கணவன் முன் கொண்டு வந்து வைத்தாள் அய்யம்மா. அதற்குத் தொட்டுக்க தோதுவாக உப்பிட்ட நார்த்தங்காய் ஊறுகாயையும், நெத்திலிக் கருவாட்டையும்.. அத்துடன் நாலைந்து சின்ன வெங்காயம் ரெண்டு பச்சை மிளகாயையும் வைத்துவிட்டுக் கணவன் அருகில் தரையில் உட்கார்ந்தாள். சாதத்தை அள்ளி அத்துடன் துண்டு ஊறுகாயை வைத்துச் சாப்பிட ஆரம்பித்தவன் மிளகாயையும் ஒரு கடி கடித்தான். சற்று தள்ளி அமர்ந்து கூடை பின்னிக்கொண்டிருந்த மகள் பொன்னுத்தாயிடம்..

"ஏந்தாயி, இந்தக் கண்ணாலத்துல உனக்குச் சம்மதம்தான.. மாப்பிள்ள சொந்த விவசாயம்தான்.. பெருசா சொத்துபத்து இல்ல.. ஆனால் ரொம்ப நல்ல பையன். உங்க ஆத்தாவுக்குச் சம்மதம். உனக்குச் சம்மதம்னா இந்த இடத்தை முடிச்சிடலாம்" என்றான் மாதையன். அதை ஆமோதிப்பது போல அய்யம்மாவும் தலைசைத்தாள்.

தனக்கும் சம்மதம் என்று தலையாட்டிய பொன்னுத்தாயின் கன்னங்கள் வெட்கத்தில் சிவந்தன. அடுத்த முகூர்த்தத்தில் ராசைய்யா அவள் சங்கு கழுத்தில் தாலி கட்ட.. மேலமங்கலம் கிராமத்திற்கு மருமகளாக வந்து சேர்ந்தாள் பொன்னுத்தாயி. கிராமத்திலிருந்து ஒதுக்குப்புறமாகப் பசுமை கொஞ்சுமிடமாக இருந்தது ராசைய்யா வீடு. சுற்றிவர தோப்பும் துரவுமாக வீடு சிறியதாக இருந்தாலும் அழகாக இருந்தது.

பக்கத்து ஊரின் குளம் வால்போல நீண்டிருந்தது. தண்ணீரின் நடுவே ஆங்காங்கே தென்பட்ட பச்சைத் திட்டுகள்.. அதில் அமர்ந்திருந்த பறவைகள்.. அழகான அந்த வெள்ளைப் பறவைகள் ஆரஞ்சு கலர் மூக்குடன் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகோடு, அவள் மனதை ரொம்பவே கவர்ந்தன. மகளின் மனதை, அவள் முகமலர்ச்சியால் படித்த மாதையன் நிம்மதியாக ஊர் திரும்பினான். ராசைய்யாவுக்கு உறவுகள் ஒருவரும் கிடையாது. தூரத்துச் சொந்தங்களும் ஊர் திரும்பிவிட, தனித்து விடப்பட்டனர் இருவரும்.

"ஏன் பொன்னு.. ஏதோ காட்டுக்குள்ள இருக்கிற மாதிரி இருக்கா?"

"இல்ல மாமா. இந்த இடம் எனக்கு ரொம்ப

புடிச்சிருக்கு. பசுமையா, அழகாயிருக்கு.. அதோ பாருங்க, அந்தக் குளத்துப் பச்சைத் தட்டுல வெள்ளைப் பறவைங்களப் பாக்கிறதே பரவசமாயிருக்கு. எனக்குப் பறவைங்கன்னா ரொம்ப பிடிக்கும்.. இந்தப் பறவைங்க எல்லாம் நம்ம கிட்டக்க வருமா மாமா?"

"என்ன அப்படி கேட்டுட்ட பொன்னு.. வீட்டச் சுத்தி இருக்கிற மரங்க எல்லாமே, நான் இந்தப் பறவைங்களுக்காகத்தான் வளக்கறேன்.. விடிஞ்சதும் பாரு, ஒவ்வொரு மரத்திலும் பறவைகள் கூடுகள் வச்சுக் குஞ்சு பொரிச்சிருக்கும்.. நிறைய பறவைகள் நம்மள சுத்தி இருக்குதுக, சொந்தபந்தம் இல்லாத எனக்கு இந்தப் பறவைகளும், தோட்டமும்தான் சொந்தம்."

"ஏன் மாமா, இந்தப் பறவைங்க எல்லாம் இங்கேயேதான் இருக்குமா.. இல்ல குளத்தில் தண்ணி இல்லன்னா பறந்து போயிடுமா?" ஆர்வத்தோடு கேட்டாள் பொன்னுத்தாயி.

"ஒரு மாசம் கழிச்சுப் பாரு.. நிறைய புதுப்புது பறவைங்க எல்லாம் வரும். எல்லாம் வெளிநாட்டுப் பறவைங்க. இங்க ஒன்னு ரெண்டு மாசம் தங்கியிருக்கும். அப்புறம் குளத்துல தண்ணி குறஞ்சதும் அதுக நாட்டப் பாக்க பறந்திடும்."

"அய்யய்யோ வழி தவறிப் பறந்துட்டா எப்படி அதுக நாட்டுக்குப் போய்ச் சேரும்?" குழந்தைத்தனமாகக் கவலைப்படும் மனைவியை அணைத்துக்கொண்டான் ராசைய்யா.

"பொன்னு.. அதுகளுக்கு அறிவு சாஸ்தி. எங்கிருந்து.. எங்க உள்ள இடத்துக்கு.. எவ்வளவு அழகா வந்துட்டு அதுக நாட்டுக்குத் திரும்பிப் போகுது பாரு."

"அப்ப இந்தப் பறவை எல்லாம் போயிட்டா வெறிச்சுன்னு ஆயுடுமா மாமா?"

"வெளிநாட்டுப் பறவைங்கதான் போகும் பொன்னு. இங்கே இருக்கிற பறவைங்க இங்கதான் இருக்கும். அதுக நம்ம குழந்தைங்க மாதிரிதான், நம்மள சுத்தித்தான் இருக்கும். ரொம்ப சினேகமா இருக்கும்.. நம்மள பாத்துப் பயப்படாது.. சாப்பாடு கொடுத்தாலும் கிட்டக்க வந்து சாப்பிடும். நீயே போகப் போகப் புரிஞ்சிக்குவ.. நீயும் அதுக மேல பாசமா இருக்குறது ரொம்ப சந்தோஷமா இருக்குது" என்றான் ராசைய்யா மன நிறைவோடு. தனக்கு வரும் மனைவி தன்னைப் போலவே பறவைகளிடம் பாசமாக இருக்க வேண்டுமே என்ற கவலை அவனுக்கு நிறையவே இருந்தது.

இப்போது அவனைவிட பறவைகளிடம் பாசமாக இருக்கும் பொன்னுத்தாயைப் பார்க்கும்போது அவன் மனம் மகிழ்ச்சியில் நிறைந்தது.

காலையில் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருந்தவள் கையில் இருந்த பெரிய பாத்திரத்தைக் கீழே போட்டுவிட, "தடால்" என்ற சத்தத்துடன் பாத்திரம் உருண்டது. அந்தச் சத்தம் கேட்டுப் பறவைகள் மிரண்டு படபடவெனச் சிறகையடித்து தத்தளிக்க, பொன்னுவுக்கு ஒன்று புரிந்தது.. இந்தப் பறவைகள் சத்தம் கேட்டால் பயப்படுகின்றன..

அதற்கப்புறம் சத்தமில்லாமல் பாத்திரம் கழுவக் கற்றுக்கொண்டாள். துணி கூட அடித்துத் துவைக்கமாட்டாள்.

"மாமா.. சீக்கிரம் வாங்க.. சீக்கிரம் வாங்க." பொன்னுவின் குரல் கேட்டுப் பதறியோடினான் ராசைய்யா. "இங்க பாருங்க, கூட்டிலிருந்து ரெண்டு குஞ்சு கீழே விழுந்து கெடக்கு. அய்யய்யோ அதுக்கு நல்லா அடிபட்டிருக்கே" என்று பதறினாள்.

ராசைய்யா ஒரு சின்ன கூடையில் வைக்கோலைப் பரத்திக் குஞ்சை அதன்மேல் படுக்கவிட்டான். காயங்களுக்கு மூலிகை மருந்து தடவினான். ஒவ்வொரு வேளையும் அதற்குச் சின்ன சங்கு போல ஒரு மூங்கில் குழாயை வைத்துச் சாப்பாடு கொடுத்தான். கீழே விழுந்த பறவைகளுக்கு அவன் செய்யும் உபசாரத்தைப் பார்த்துப் பொன்னுவும் அதேபோலப் பறவைகளைப் பராமரிக்கப்

பழகிக்கொண்டாள்.

பின்னர் அதுவே அவளுக்கு முழு நேர வேலையாயிற்று. மரத்திலிருந்து விழும் பறவைகளைப் பார்த்து எடுத்துப் பராமரித்து, அவை சரியாகும்வரை அதுகளுடனே கிடப்பாள். அவளுடைய அன்பான உபசரிப்பால் பறவைகள் அவளையே சுற்றிச் சுற்றி வரும்.

அன்று ராசைய்யா, "பொன்னு பக்கத்து ஊர்ல திருவிழா நடக்குது.. பாத்துட்டு வருவமா? அப்படியே குளத்தங்கரையில நிறைய பறவைங்க இருக்கும்.. வெளிநாட்டுப் பறவைகள் கூட வந்திருக்கும். பாக்க நல்லா இருக்கும்."

பறவைகள் என்றதும் உடனே கிளம்பிவிட்டாள் பொன்னு.

வானவேடிக்கையும், வெடிகளும் அதிர ஊர்த் திருவிழா களைகட்டியிருந்தது. குளத்தின் பச்சைத் திட்டுகளில் வெள்ளைப் பறவைகள் பாக்கவே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அப்போதுதான், கொஞ்சமாக வெளிநாட்டுப் பறவைகளும் வர ஆரம்பித்திருந்தன. வெடிச் சத்தத்திற்குப் பயந்து அங்குமங்கும் பறந்து பறவைகள் அலைமோதிக்கொண்டிருந்தன.

"ஏன் மாமா, இந்த ஊரு பஞ்சாயத்து தலைவரப் பாக்க முடியுமா?"

"நம்ம பெரியசாமி அண்ணன்தான் இந்த ஊர்த் தலைவர்."

"என்னம்மா என்ன விஷயம்?" என்றார் பெரியசாமி.

"ஐயாகிட்ட ஒரு விண்ணப்பம்.. இந்தப் பறவைங்கள்ல வெளிநாட்டுப் பறவைகளும் இருக்கு. அதெல்லாம் சத்தத்துக்குப் பயப்படுதுக பாருங்க.. அந்த அதிர்வேட்டுச் சத்தத்துக்கு எப்படி படபடன்னு பறக்குது. அதனால நாம திருவிழாவில அதிர்வேட்டு போட வேணாம்னு சொல்லுங்கய்யா" என்றாள் தயவாக.

"நல்லா இருக்கு பொன்னு.. நீ அசலூரிலிருந்து வந்தவ, அதிர்வேட்டு போடாம எப்படி திருவிழா களகட்டும்."

"ஐயா, எந்த ஊருக்கும் இல்லாத ஒரு மருவாத, இந்தூருக்கு இருக்கு. இம்புட்டுப் பறவைங்கள எந்த ஊர்லயாவது பாக்க முடியுமா? நம்ம ஊர நம்பி அடைக்கலமா வர்ற பறவைங்கள அதுகளுக்கு ஒரு இடைஞ்ச இல்லாம பத்திரமாகப் பாத்துக்கறது நம்ப பொறுப்பில்லையா? தயவுசெஞ்சு அதிர்வேட்டு மட்டும் வேண்டாங்கய்யா" என்று கைகூப்பினாள்.

"வெளியூரிலிருந்து வந்த பொண்ணு, இந்த ஊர்ப் பறவைகள் மேலயும் இவ்வளவு பாசமா பேசுது.. அது சொல்றதையும் நாம கேட்டுத்தான் பாப்பமே.. இந்தத் தடவை அதிர்வேட்டு இல்லாம திருவிழா நடக்கட்டும். மத்தாப்பு மட்டும் பொருத்திக்கிடட்டும்."

ஊர்ப் பெரியவர் ஒருவர் சொல்ல, அரை மனதாய்ச் சம்மதித்தனர் இளவட்டங்கள்.

பறவைகள் சத்தமின்றி நிம்மதியாக இருக்கும் என்ற நிறைந்த மனதுடன் ஊர் திரும்பினர் ராசைய்யாவும் பொன்னுவும். வரும் வழியில் சந்தையில்..

"ஏம்மாமா கைல காசிருக்கா?"

"என்ன பொன்னு.. உனக்கும் சீல மேல ஆசை வந்துருச்சா? சந்தையில சீல எடுக்கப் போறியா?"

"அடப்போ மாமா.. நம்ம புள்ளைங்களுக்கு இன்னைக்குத் தீவனம் சரியா வைக்கல.. பாவம் வாடி கிடக்குது.. ரெண்டு கிலோ மீன் வாங்கிட்டுப் போனோம்னா.. அதுகளுக்கு ஒரு ரெண்டு நாளைக்கு வச்சுப் பராமரிச்சுக்கிடலாம்."

காலையில் கூட்டில் இருந்து விழுந்த அந்தச் சின்ன குஞ்சின் சோர்வான முகமே அவள் மனக்கண்ணில் வந்தது. மனசு நிலைகொள்ளாமல் தவித்தது. 'பாவம் சிறுசு.. திருவிழா பாக்க போறேன்னு அத விட்டுட்டு வந்தாச்சு.. எப்படி இருக்குதோ?'



ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

மனசு கிடந்து அடிச்சுக்கிட்டது.

மீனை வாங்கிக்கொண்டு ஊர் வந்து சேர்ந்ததும் முதலில் ஓடியது அந்தக் குஞ்சைப் பாக்கத்தான். தலைதூக்க முடியாமல் சோர்ந்து படுத்திருந்தது. உள்ளே ஓடியவள் "ஆத்தா வனப்பேச்சி.. அந்தக் குஞ்சு பொழைக்கட்டும்" என்று ஒரு ரூபா காச ஒரு துணியில் முடிஞ்சு சாமி முன்னால் காணிக்கையாய் வைத்தாள்.

பொன்னுவின் குரலைக் கேட்காமலா இருப்பாள் வனப்பேச்சி. காலையில் குஞ்சு நன்றாகக் கண்ணை உருட்டி அவளைப் பார்க்க.. "அடி என் சீம சிறுக்கி.. நேத்து எவ்வளவு பயமுறுத்திட்ட" என்று திட்டிக்கிட்டே அதைப் பூப்போல எடுத்து மடியில் விட்டுக்கொண்டாள்.

அன்று அவள் அப்பனும், ஆத்தாவும் கை நிறைய பண்டங்களுடன் மகளைப் பார்க்க வந்தனர். பறவைகளைக் கொஞ்சிக்கொண்டிருந்த மகளைப் பார்த்து முகம் சுழித்தாள் ஆத்தா அய்யம்மா. கைகாலையெல்லாம் சுத்தபத்தமாகக் கழுவிவிட்டு, உள்ளே வந்தவள், பொங்கி வைச்சிருந்த சோத்தை இலை போட்டு ரெண்டு பேருக்கும் பரிமாறினாள்.

"நல்ல மணமா இருக்குடி பொன்னு.. அருமையா சமச்சிருக்க," என்றவள் மகளைத் தனியாக அழைத்து, "ஏண்டி ஏதும் விசேஷம் உண்டா? இப்படி இந்தப் பறவைகள கொஞ்சிட்டு உட்கார்ந்திருக்க.. எப்ப குழந்த பெத்துக்கப் போற" என்றாள்.

"அம்மா பெத்துக்கிட்டா ஒரு குழந்த. இங்க பாரு என்ன சுத்தி எத்தன குழந்தைங்க.. என் மேல எம்புட்டுப் பாசம் வச்சிருக்கு.. என்னையே சுத்திச் சுத்தி வருதுக.. இந்த சந்தோஷம் எதிலுமே கிடைக்காதுமா. என் வாழ்க்கை பூரா இதுகளோட இருக்கணும். கடைசி மூச்சு வரைக்கும்". கோபத்தில் விருட்டென எழுந்து வெளியே போனாள் அய்யம்மா.

உண்மையில் அடுத்து வந்த வருடங்களில் ராசைய்யாவும், பொன்னுத்தாயும் வாழ்ந்தது ஒரு அற்புதமான வாழ்க்கை. இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை.. இப்போதெல்லாம் இவர்கள் சொல்வதைக் கேட்டுப் பக்கத்துக் கிராமத்தில் வெடி போடுவதை நிறுத்திவிட்டார்கள். பறவைகளுக்கு மீன் வாங்க தோட்டத்து வரும்படியைப் பயன்படுத்தினார்கள்..

ஒருமுறை அடித்த கடுமையான புயல் காற்றில் நிறைய மரங்கள் முறிந்து விழுந்தன. பெரிய பறவைகள் பறந்து தப்பித்துக்கொள்ள.. பறக்க முடியாத குஞ்சுகள் நிறைய காயமுற்று

விழுந்தன. ராசைய்யாவும், பொன்னுவும் ஓடி ஓடி அந்தப் பறவைகளை எல்லாம் மீட்டு, வீட்டுக்குள் வைத்துப் பத்திரப்படுத்தினர். மூலிகை மருந்திட்டு, உணவு கொடுத்து ராப்பகலாய்க் கண்விழித்து, தங்களால் முடிந்த அளவு அவற்றைக் காப்பாற்றினர். அவைகளுக்கு மீன் வாங்கவும், மருந்துச் செலவிற்கும் எனத் தன்னுடைய சங்கிலியை விற்றுப் பணத்தைச் செலவு செய்தாள் பொன்னுத்தாயி.

இந்தச் செய்தியைக் கேட்டு வனத்துறை அதிகாரிகள் தங்கள் விழாவுக்குப் பொன்னுத்தாயையும், ராசைய்யாவையும் அழைத்தனர். அவர்களைப் பாராட்டிப் பேசி, கேடயம் கொடுத்தனர். "பறவைப் பாதுகாவலர்கள்" என்ற பட்டம் கூட கிடைத்தது.

விழா முடிந்ததும் இருவரையும் விருந்து சாப்பிடச் சொன்ன அதிகாரி "நீங்க ரெண்டு பேரும் பறவைகளைப் பேணுறது ரொம்ப சந்தோஷமான விஷயம். அவையெல்லாம் காட்டுப் பறவை, ஜாக்கிரதையாக இருக்கிறது நல்லது.. வெளியிடங்களிலிருந்து வரக்கூடிய பறவைகளால் நோய்த் தொற்று வரக்கூடும்.. அத மனசுல வச்சுக்கோங்க" என்று அறிவுரை கூறினார்.

அந்த விழாவுக்குப் பின் பத்திரிக்கை வெளிச்சம் அவர்கள் பேரில் பட, நிறைய பத்திரிக்கைகளில் பேட்டி எடுத்தனர். பறவைகளிடம் அவர்கள் கொண்ட பாசமும், அக்கறையும் எங்கும் பேசும் பொருளாயிற்று. பறவைகளைப் பார்க்க வரும் கூட்டமும் பெருகத் தொடங்கியது. அந்த மக்களிடமிருந்து பறவைகளைக் காக்க இன்னும் மெனக்கிட வேண்டியிருந்தது.

இப்போது சில நாட்களாகப் பொன்னுவுக்கு முன்னப்போல முடியவில்லை. அடிக்கடி உடம்பு சரியில்லாமல் படுக்க ஆரம்பித்தாள். காய்ச்சல் வந்து பாடாய்ப் படுத்த ராசைய்யா டவுன் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போய்க் காண்பித்தான். அப்படியும் சரிப்பட்டு வராமல் பெரியாஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போனான். நாளாக நாளாக மெலிந்துகொண்டே போன பொன்னுத்தாயி ஒருநாள் புருஷனிடம்..

"எனக்கு என்னவோ நான் பிழைச்சு வருவேன்னு தோணல.. டாக்டர் சொல்லும்போது கவனிச்சேன். எனக்கு வந்த நோய்க்குக் காரணம், பறவைகளிடமிருந்து வந்த நோய்த் தொற்றுன்னு.. ஆனா அதுக்காக அதுகளை வெறுத்துடாதீங்க மாமா.. மனுஷங்ககிட்டயிருந்து மனுஷங்களுக்கு வர்றதில்லையா? அந்த மாதிரி நினைச்சுக்குவோம். நமக்கு இந்த ஜென்மத்துல பிள்ளைங்க அதுகதான். நான் இருந்தாலும் சரி, இல்லைன்னாலும் சரி, நம்ம பிள்ளைகளை நீங்கதான் பாத்துக்கணும்" என்றவள் சத்தியம் வாங்குவதுபோல அவன் கையை இறுகப்பற்றிக் கொண்டாள்.

அதுதான் அவள் அவனிடம் பேசிய கடைசிப் பேச்சு. காலையில் அவனிடம் பேச அவள் உடம்பில் உயிர் இல்லை. ராசைய்யா மனதைத் தேற்றிக்கொண்டான். அவள் எங்கும் போகவில்லை.

இதோ அவளுக்காக ஒரு சிலையை எழுப்பியிருக்கிறான், அவனுடைய வீட்டின் முன்னே. அந்தச் சிலைக்கு அவன் கட்டிய சின்ன மண்டபத்துக்குள் அவனுடைய ஓய்வு நேரத்தில் அவளை நினைத்தவாறே உட்கார்ந்திருப்பான்.

பொன்னுத்தாயின் நினைவில் இருந்தவனைக் கீச்சு கீச்சென்ற குரல் கவனத்தை ஈர்த்தது. பார்த்தான். பொன்னுத்தாயின் சிலையின் மடிக்கும்.. கைக்கும் இடையே ஒரு சின்ன கூட்டில் ரெண்டு பறவைகள். "இருந்தாலும், இறந்தாலும் நீதான் எங்கள் தாய்" என்று சொல்லுவது போல. அப்படியே அவள் பாதத்தை இறுகப்பற்றித் தலையைச் சாய்த்துக்கொண்ட குஞ்சுகள் நிம்மதியாயின.

தன்னையும் அறியாமல் ராசைய்யனின் கண்களில் கண்ணீர் வழிந்தது..

வானவில் வண்ண மின்னல்

பகுதி 2 தொடர் 26

ஆதிரன்



# வெற்றியின் பரிமாணமும் பரிநாமமும் – மேற்கத்தியக் கருதுகோள்

“Victory has a thousand fathers, but defeat is an orphan.” - John F. Kennedy

வெற்றியின் மேற்கத்தியக் கருத்து அறிவுசார் வரலாற்றில் மிகவும் சிக்கலான மற்றும் பரிணாம வளர்ச்சியடைந்த கருத்துக்களில் ஒன்றாகும். இது இரண்டாயிரம் ஆண்டுகளாக நீடித்த தத்துவ, இராணுவ, அரசியல் மற்றும் பண்பாட்டு மரபுகளில் ஆழமாக வேரூன்றியுள்ளது. வெற்றியைப் பற்றிய ஒப்பீட்டளவில் நிலையான புரிதல்களைப் பராமரித்துவரும் பல நாகரிகங்களைப் போலல்லாமல், மேற்கத்தியப் பாரம்பரியம் வெற்றியை அடைவதன் அர்த்தம் என்ன என்பதைத் தொடர்ந்து மறுவரையறை செய்துவருகிறது. இது மதிப்புகள், தொழில்நுட்பம் மற்றும் புவிசார் அரசியல் சூழ்நிலைகளில் பரந்த மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது எனலாம்.

**பாரம்பரிய அடித்தளங்கள்: கிரேக்க மற்றும் ரோமானியக் கருத்துக்கள்**

வெற்றியைப் பற்றிய மேற்கத்தியப் புரிதல் பண்டைய கிரேக்க மற்றும் ரோமானியச் சிந்தனையில் அதன் ஆரம்பகால வெளிப்பாட்டைக் கொண்டிருக்கிறது. கிரேக்கர்கள் ‘nikē’ (வெற்றி) என்ற கருத்தை அறிமுகப்படுத்தினர், இது ஒரு தெய்வமாக உருவகப்படுத்தப்பட்டது. மேலும் இது வெறும் வெற்றி பெறுவதை மட்டும் அல்ல, போராட்டத்தின் மூலம் சிறந்து விளங்குவதையும் குறிக்கிறது. அரிஸ்டாட்டில் "வெற்றி என்பது இராணுவ அறிவியலின் முடிவு" என்று கூறினார். வெற்றியைப் போரின் அடிப்படை நோக்கமாக அவர் நிறுவினார். இருப்பினும், கிரேக்கத் தத்துவம் எளிய வெற்றியைத் தாண்டிச் சென்றது, உண்மையான வெற்றி அமைதி மற்றும் நீதியை அடைவதற்கான உயர்ந்த நோக்கத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியது. வெற்றி பற்றிய கிரேக்கக் கருத்து, வீரம் மற்றும் நல்லொழுக்கம் பற்றிய அவர்களின் புரிதலுடன் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது எனலாம். உடல் எண்ணிக்கை அல்லது வெற்றிக்கோப்பைகளால் அளவிடப்படும் தனிப்பட்ட வலிமையைக் கொண்டாடும் பிற பண்பாடுகளைப் போலல்லாமல், கிரேக்க வீரர்கள் உருவாக்கத்தைப் பராமரித்தல், தோழர்களைப் பாதுகாத்தல் மற்றும் கூட்டு நோக்கங்களை முன்னேற்றுதல் ஆகியவற்றிற்காக அங்கீகாரத்தைப் பெற்றனர். இது தனிப்பட்ட மகிமையிலிருந்து கூட்டு சாதனைக்கான ஒரு புரட்சிகர மாற்றத்தைக் குறிக்கிறது. இது பல நூற்றாண்டுகளாக மேற்கத்திய இராணுவப் பண்பாட்டை வரையறுக்கும் வடிவங்களை நிறுவியது

என்று சொல்லலாம். போலவே, ரோமானிய நாகரிகம் கிரேக்கக் கருத்துக்களை விரிவுபடுத்தி முறைப்படுத்தியது. இது 'விக்டோரியன்' என்ற கருத்தை இராணுவ வெற்றி மற்றும் அரசியல் சட்டபூர்வமான தன்மை என இரண்டாக வளர்த்தது. ரோமானியர்களைப் பொறுத்தவரை, வெற்றி என்பது எதிரிகளை முழுமையாக அடிபணியச் செய்வதன் மூலம் அமைதியைத் திணிப்பதாகும். பிரபலமான ரோமானிய சொற்றொடர் "si vis pacem, para bellum" (நீங்கள் அமைதியை விரும்பினால், போருக்குத் தயாராகுங்கள்). நீடித்த வெற்றி என்பது எதிரிகளைத் தோற்கடிப்பது மட்டுமல்லாமல் எதிர்கால மோதல் சாத்தியமற்றதாக மாறும் நிலைமைகளை உருவாக்குவதும் அவசியம் என்ற அவர்களின் நம்பிக்கையை உள்ளடக்கியது. ரோமானிய வரலாற்றாசிரியர்கள் பொதுவாக வெற்றிகரமான போர்களை நியாயமான போர்களாகக் கருதினர், இராணுவ வெற்றியை அவர்களின் தார்மீக மேன்மையின் தெய்வீக ஒப்புதலாகக் கருதினர்.

**இடைக்கால மாற்றம்: கிறிஸ்தவ நீதிப் போர்க் கோட்பாடு**

கிறிஸ்துவத்தின் எழுச்சி, மேற்கத்திய வெற்றிக் கொள்கையின் 'அடிப்படைக் கருத்துக்களை' மாற்றியது. முறையான போர்க் கோட்பாட்டை உருவாக்கிய முதல் பெரிய கிறிஸ்தவச் சிந்தனையாளரான ஹிப்போவின் அகஸ்டின் (Augustine of Hippo), சில சமயங்களில் கடுமையான தவறுகளை முறியடிக்க அல்லது சமூக ஒழுங்கைப் பாதுகாக்க போரை நியாயப்படுத்த முடியும் என்றாலும், வெற்றியால் உருவாக்கப்பட்ட பொருட்கள் எப்போதும் அபூரணமானவை மற்றும் நிரந்தரமற்றவை என்று வாதிட்டார். ஆனால் வெகு சிலர், 'வெற்றி அவசியமாக இருக்கலாம், ஆனால் அது ஒருபோதும் அதன் சொந்த நலனுக்காகப் பெருமைப் படுத்தப்படக்கூடாது' என்ற கருத்தை முன்வைத்தார்கள். இருந்தும், அகஸ்டினின் கட்டமைப்பு, சட்டபூர்வமான வெற்றி வெறும் வெற்றியைத் தாண்டி தார்மீக நோக்கங்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதை நிறுவியது. போர் லட்சியத்தைத் திருப்திப்படுத்தவோ அல்லது பிரதேசத்தைக் கையகப்படுத்தவோ அல்ல, அமைதியையும் நீதியையும் மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டபோது மட்டுமே நியாயப்படுத்தப்பட்டது. இந்தக் கிறிஸ்தவக் கண்ணோட்டம் இராணுவ வெற்றி உருவாக்கக்கூடிய "தவறான பெருமைக்கு" எதிராக எச்சரித்தது. பூமிக்குரிய வெற்றிகள் இறுதி ஆன்மீக வெற்றியின் தற்காலிக நிழல்கள் என்பதை வலியுறுத்தியது. தாமஸ் அக்வினாஸ் போன்றோரால் உருவாக்கப்பட்ட இடைக்கால நீதியான போர்க் கோட்பாடு, 'போருக்கான உரிமை' மற்றும் போரில் 'சரியான நடத்தை' ஆகியவற்றுக்கு இடையே வேறுபடுத்தும் ஒரு அதிநவீன கட்டமைப்பை உருவாக்கியது. அநீதியான வழிமுறைகள் மூலம் அடையப்பட்ட வெற்றி உண்மையான வெற்றி அல்ல, மாறாக ஒரு வகையான தார்மீகத் தோல்வி. ஒருவர் எவ்வாறு வெற்றி பெறுகிறார் என்பது ஒருவர் வெற்றி பெறுகிறாரா என்பது போலவே முக்கியமானது என்ற கொள்கையை இது நிறுவியது.

**அறிவொளி பகுத்தறிவு: முன்னேற்றமாக வெற்றி**

வெற்றியைப் புரிந்துகொள்வதற்கான புதிய அறிவியல் மற்றும் பகுத்தறிவு அணுகுமுறைகளை அறிவொளி கொண்டு வந்தது. கார்ல் வான் கிளாஸ்விட்ஸ் போன்ற சிந்தனையாளர்கள் வெற்றியை ஒரு முடிவுக்குப் பதிலாக அரசியல் நோக்கங்களுக்கான ஒரு வழிமுறையாக பகுப்பாய்வு செய்வதன் மூலம் இராணுவக் கோட்பாட்டில் புரட்சியை ஏற்படுத்தினர். போர் என்பது "பிற வழிகளில் அரசியலின் தொடர்ச்சி" என்ற கிளாஸ்விட்ஸின் பிரபலமான கூற்று, குறிப்பிட்ட அரசியல் நோக்கங்களை அடைய எதிரியின் மீது ஒருவரின் விருப்பத்தை வெற்றிகரமாக திணிப்பதாக வெற்றியை அடிப்படையில் மறுவரையறை செய்தது.

இருப்பினும், கிளாஸ்விட்ஸ் தனது



அணுகுமுறையின் வரம்புகளையும் அங்கீகரித்தார், "ஒரு போரின் இறுதி விளைவு கூட எப்போதும் இறுதியானதாகக் கருதப்படாது. தோற்கடிக்கப்பட்ட அரசு பெரும்பாலும் முடிவை ஒரு நிலையற்ற தீமையாகக் கருதுகிறது" என்று குறிப்பிட்டார். இராணுவ வெற்றிக்கும் நீடித்த அரசியல் வெற்றிக்கும் இடையிலான வேறுபாடு பற்றிய நவீன விவாதங்களை இந்த நுண்ணறிவு எதிர்பார்த்தது. அறிவொளி, வெற்றிக்குப் புதிய அர்த்தத்தை அளித்த 'முன்னேற்றம் மற்றும் நாகரிகம்' பற்றிய கருத்துக்களையும் அறிமுகப்படுத்தியது. மேற்கத்திய சக்திகள் வெற்றியை "பின்தங்கிய" மக்களுக்கு நாகரிகம், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைக் கொண்டுவருவதாக நியாயப்படுத்தத் தொடங்கின. இது அறிஞர்கள் இப்போது ஒரு முரண்பாடான வடிவமாக அங்கீகரிக்கும் ஒன்றை உருவாக்கியது: மேற்கு நாடுகள் உலகளாவிய கொள்கைகளை (சுதந்திரம், சமத்துவம், நீதி) உருவாக்கிய அதே நேரத்தில் மற்ற பண்பாட்டுகள் மீது ஆதிக்கத்தை நியாயப்படுத்த அவற்றைப் பயன்படுத்துகின்றன.

**தொழில்துறை மற்றும் நவீன காலகட்டங்கள்: முழுமையான வெற்றி மற்றும் அதன் வரம்புகள்**

தொழில்துறை புரட்சி மற்றும் இரண்டு உலகப் போர்கள் மேற்கத்திய வெற்றிக் கருத்துக்களை அடிப்படையில் மாற்றியமைத்தன. 'மொத்தப் போர் (total war)' என்ற கருத்து வெளிப்பட்டது, நீடித்த வெற்றியை அடைய படைகள் மட்டுமல்ல 'முழு சமூகங்களும்' தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இரண்டாம் உலகப் போர் இந்த அணுகுமுறையை உறுதிப்படுத்துவதாகத் தோன்றியது எனலாம். ஜெர்மனி மற்றும் ஜப்பானின் நிபந்தனையற்ற சரணடைதல், முந்தைய வரையறுக்கப்பட்ட வெற்றிகளால் அடையத் தவறிய நிலையான, ஜனநாயக அமைதியை உருவாக்கியதாகத் தோன்றியது. ஆனால் பனிப்போர் புதிய சிக்கல்களை வெளிப்படுத்தியது. கம்யூனிசத்தின் மீதான வெற்றிக்கு இராணுவம், பொருளாதாரம், பண்பாடு மற்றும் தத்துவம் எனப் பல துறைகளில் பல தசாப்தங்களாகப் பொறுமையான போட்டி தேவைப்பட்டது. அணு ஆயுதங்கள் மற்றும் மறைமுக மோதல்களின் சகாப்தத்தில் தீர்க்கமான போரின் பாரம்பரியக் கருத்துக்கள் குறைவான பொருத்தமற்றதாக மாறியது. வெற்றி என்பது எதிரியை உடல்ரீதியாக அழிப்பதற்குப் பதிலாக ஒருவரின் அமைப்பின் மேன்மையை

நிருபிப்பதாக மாறியது. பனிப்போரில் அமெரிக்க வெற்றி என்பது மேற்கத்திய வெற்றிக் கருத்துக்களின் தூய்மையான வெளிப்பாடாக இருக்கலாம்: தாராளவாத ஜனநாயகம், சுதந்திரச் சந்தைகள் மற்றும் சர்வாதிகார மாற்றுகளுக்கு எதிரான தனிநபர் உரிமைகள். பிரான்சிஸ் ஃபுகுயாமா இதை "வரலாற்றின் முடிவு" என்று பிரபலமாக அறிவித்தார். இது மேற்கத்திய மதிப்புகள் அனைத்துப் போட்டியிடும் சித்தாந்தங்களுக்கும் எதிராக இறுதி வெற்றியைப் பெற்றுள்ளன என்பதைக் குறிக்கிறது.

**சமகாலச் சவால்கள்: டிஜிட்டல் யுகத்தில் வெற்றி**

ஈராக், ஆப்கானிஸ்தான், லெபனான் மற்றும் பிற இடங்களில் நடந்த சமீபத்திய மோதல்கள் மேற்கத்தியச் சிந்தனையாளர்களை வெற்றி பற்றிய அடிப்படை அனுமானங்களை மறுபரிசீலனை செய்யக் கட்டாயப்படுத்தியுள்ளன. சமகால மோதல்களுக்கு அமெரிக்காவுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் ஒத்திசைவான "வெற்றிக் கோட்பாடுகள்" இல்லை என்று இராணுவ வரலாற்றாசிரியர் பிராட் ராபர்ட்ஸ் வாதிடுகிறார். அமெரிக்கப் படைகள் ஒவ்வொரு போரிலும் வெற்றி பெறலாம், ஆனால் நீடித்த அரசியல் நோக்கங்களை அடையத் தவறிவிடுகின்றன. இது எதிரிப் படைகளைத் தோற்கடிப்பதற்குப் பதிலாக நிலையான, சட்டபூர்வமான அரசியல் விளைவுகளை உருவாக்குவதாக வெற்றியைப் புரிந்துகொள்வதில் புதுப்பிக்கப்பட்ட முக்கியத்துவத்திற்கு வழிவகுத்தது. சமகால மேற்கத்திய இராணுவக் கோட்பாடு, போரை வெல்வதைப் போலவே "அமைதியை வெல்வதையும்" அதிகளவில் வலியுறுத்துகிறது. வெற்றிக்கு இராணுவ வெற்றி மட்டுமல்ல, மோதலுக்குப் பிந்தைய வெற்றிகரமான மறுகட்டமைப்பு, நிறுவனக் கட்டுமானம் மற்றும் நல்லிணக்கம் தேவை. வெற்றிக்கு வெற்றியைத் தாண்டி தார்மீக நோக்கங்களைச் செய்யும் வெற்றி பற்றிய முந்தைய கிறிஸ்தவ மற்றும் அறிவொளி கருப்பொருள்களுக்குத் திரும்புவதை இது குறிக்கிறது. டிஜிட்டல் யுகம் போட்டியின் முற்றிலும் புதிய களங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. சைபர் போர், தகவல் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரப் போட்டி ஆகியவை பாரம்பரிய இராணுவ மோதலில் தேவையில்லாத வெற்றிக்கான சாத்தியங்களை உருவாக்குகின்றன. ஆயுத பலத்தை விட தொழில்நுட்ப மேன்மை, கலாச்சாரச் செல்வாக்கு அல்லது பொருளாதாரச் செல்வாக்கு மூலம் நாடுகள் மூலோபாய நோக்கங்களை அடைய முடியும்.

**தத்துவப் பரிமாணங்கள்: வெற்றி மற்றும் மனித இயல்பு**

மனித வளர்ச்சிக்கு வெற்றி என்றால் என்ன என்பது பற்றிய ஆழமான கேள்விகளை மேற்கத்தியத் தத்துவம் தொடர்ந்து எதிர்கொண்டுள்ளது. வெற்றி நல்லொழுக்கத்தையும் சிறப்பையும் வளர்க்க வேண்டும் என்பதைப் பாரம்பரிய மரபுகள் வலியுறுத்தின. வெற்றியை, 'ஊக்குவிக்கக்கூடிய பெருமை' மற்றும் 'வன்முறைக்கு' எதிராகக் கிறிஸ்தவ மரபுகள் எச்சரித்தன. அறிவொளி மரபுகள் வெற்றியை மனித முன்னேற்றத்தையும் பகுத்தறிவையும் முன்னேற்றுவதாகக் கண்டன. சமகால மேற்கத்தியச் சிந்தனை வெற்றியை அகநிலை மற்றும் சூழல் சார்ந்ததாக அதிகளவில் அங்கீகரிக்கிறது. வெற்றி என்பது சம்பந்தப்பட்ட மனிதர்களின் மதிப்புகள், நோக்கங்கள் மற்றும் சூழ்நிலைகளைப் பெரிதும் சார்ந்துள்ளது. இது தந்திரம் / செயல்திட்டம், தற்காலிக / நீண்டகால, மற்றும் தார்மீக / நடைமுறை போன்ற பல்வேறு வகையான வெற்றிகளை வேறுபடுத்தும் மிகவும் நுணுக்கமான அணுகுமுறைகளுக்கு வழிவகுத்துள்ளது.

**கலாச்சாரத் தாக்கம்: வெற்றி மற்றும் மேற்கத்திய அடையாளம்**

வெற்றியின் மேற்கத்தியக் கருத்து, பண்பாட்டு அடையாளத்தையும் உலகளாவிய செல்வாக்கையும் ஆழமாக வடிவமைத்துள்ளது. மேற்குலகம் இருண்ட மாற்றுகளின் மீது பகுத்தறிவு, ஜனநாயகம்



மற்றும் மனித உரிமைகளின் வெற்றியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற கருத்து மேற்கத்திய சுய புரிதலுக்கு மையமாக உள்ளது. இது அதிகளவு முறையில், பன்முக உலகில் வாய்ப்புகளையும் சவால்களையும் உருவாக்குகிறது, அங்கு பிற நாகரிகங்கள் வெற்றி மற்றும் சாதனை பற்றிய போட்டிப் பார்வைகளை வழங்குகின்றன. மேற்கத்தியக் கலாச்சாரத் தயாரிப்புகள் ஹாலிவுட் படங்கள் முதல் வீடியோ கேம்கள் வரை தனிப்பட்ட வீரம், தொழில்நுட்ப மேன்மை மற்றும் தார்மீக நீதியை வலியுறுத்தும் குறிப்பிட்ட வெற்றி தரிசனங்களைத் தொடர்ந்து பிரச்சாரம் செய்கின்றன. இந்தக் கதைகள் மேற்கத்திய மதிப்புகளைப் பிரதிபலிக்கின்றன மற்றும் வலுப்படுத்துகின்றன, அதே நேரத்தில் வெற்றிக்கு என்ன தேவை, அது என்ன சாதிக்க முடியும் என்பது பற்றிய நம்பத்தகாத எதிர்பார்ப்புகளை உருவாக்குகின்றன.

**விமர்சனக் கண்ணோட்டங்கள்: மேற்கத்திய வெற்றியின் வரம்புகள்**

சமகால அறிஞர்கள் வெற்றி பற்றிய மேற்கத்திய அனுமானங்களை அதிகளவில் கேள்வி கேட்கின்றனர். மேற்கத்திய அணுகுமுறைகள் பெரும்பாலும் வெற்றி மற்றும் மோதல் தீர்வு பற்றிய பல்வேறு பண்பாட்டுக் கருத்துக்களைப் புரிந்துகொள்ளத் தவறிவிடுகின்றன என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். முந்தைய கட்டுரையில் குறிக்கப்பட்ட 'பைரிக் வெற்றி (Pyrrhic victory)' என்ற கருத்து–தோல்வியை ஒத்த மிகப்பெரிய செலவில் அடையப்பட்ட வெற்றி–மேற்கத்தியச் சக்திகள் சமீபத்திய இராணுவத் தலையீடுகளின் மகத்தான செலவுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட சாதனைகளுடன் போராடுவதால் பெருகிய முறையில் பொருத்தமானதாகிவிட்டது. இராணுவ ஆதிக்கத்தை விட பேச்சுவார்த்தை, பொருளாதார மேம்பாடு மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு முன்னுரிமை அளிக்கும் மாற்று அணுகுமுறைகளில் இது புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

முடிவாக, மாறிவரும் தொழில்நுட்ப, அரசியல் மற்றும் பண்பாட்டுச் சூழ்நிலைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக வெற்றியின் மேற்கத்தியக் கருத்து தொடர்ந்து உருவாகிவருகிறது. பகுத்தறிவு, நீதி மற்றும் மனித செழிப்புக்கான முக்கிய உறுதிப்பாடுகளைப் பராமரிக்கும் அதே வேளையில், சமகால மேற்கத்தியச் சிந்தனை வெற்றியை உலகளாவிய ரீதியாக அல்லாமல் சூழல் ரீதியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை அறிவுத்துகிறது. 'இது ஒட்டுமொத்த வெற்றியின்' அடிப்படையால் இயக்கம் கொள்கிறது எனலாம். டிஜிட்டல் யுகம் புதிய சவால்களையும் வாய்ப்புகளையும் முன்வைக்கிறது. அதனடிப்படையில், மேற்கின் 'வெற்றித் தத்துவம்' மனித விவகாரங்களில் நீடித்த வெற்றியை அடைவதன் அர்த்தம் என்ன என்பதை அடிப்படையாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். மேலும், வெற்றியைப் பற்றிய சிந்தனைக்கு நீடித்த மேற்கத்தியப் பங்களிப்பு எந்தவொரு குறிப்பிட்ட வரையறையிலும் இல்லை. மாறாக அந்தக் கருத்தைப் பகுத்தறிவுப் பகுப்பாய்வு, தார்மீக ஆய்வு மற்றும் நடைமுறைச் சோதனைக்கு உட்படுத்துவதில் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ப. ராஜ்குமார் சிவன்

# கண்ணாடி பிம்பத்தில் கடவுள்

காலையில் கடையைத் திறக்கும் முன்பே வாசலில் நான்கு நபர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ‘ஞாயிற்றுக்கிழமை சீக்கிரமே வந்து கடை திறக்கக் கூடாதா கோபி’யெனச் சலித்துக்கொண்டார்கள். வாடிக்கையாளர்களிடம் நன்றாகப் பழகக்கூடியவன் கோபி. சென்னை வந்து பல ஆண்டுகளாக முடி திருத்தும் வேலை செய்கிறான். தொழில் மீது மதிப்பு மரியாதையும் அதிகமாகக் கொண்டவன். கடை திறந்ததும் ஒரு வாலிபன் இருக்கையில் அமர்ந்துகொண்டான். கோபி கடையைச் சுத்தம் செய்து கத்தரிக்கோல், சீப்பு, கண்ணாடி எல்லாம் துடைத்து வைத்துவிட்டு.. ஒரு ஊதுபத்தியைப் பிள்ளையார் படம் அருகே எரிய வைத்துவிட்டு, அவனுக்கு முடியைத் திருத்தம் செய்ய ஆரம்பித்தான்.

‘என்னணே... ஞாயிற்றுக்கிழமை சீக்கிரமா வந்து கடையைத் திறக்க வேண்டியதுதானே. நான் வந்து அரை மணி நேரமா நின்னுக்கிட்டு இருந்தேன். அப்புறமா அந்தத் தம்பி வந்தான். அதற்குப் பிறகு அந்த சார் வந்தாங்க, எல்லாரும் வந்த உடனே இன்னுமா கடை திறக்கலை அப்படின்னுதான் கேட்கிறாங்க. கோபி அண்ணே, வாடிக்கையாளர்களை ரொம்ப காத்திருக்க வைக்காதீங்க. அப்புறம் வேற கடைக்குப் போயிடுவாங்க. உங்களுடைய தொழில் சுத்தம் பழக்கவழக்கங்கள் நேர்மைதான் நிறைய வாடிக்கையாளரை இங்கே வர வைக்கிறது.’

‘நேற்று கடையடைக்க பத்தரை மணி ஆகிவிட்டது. சனிக்கிழமை சாயந்திரம் நிறைய வாடிக்கையாளர்கள் வந்துட்டாங்க... போயிட்டு நாளைக்கு வாங்கன்னு சொல்ல முடியாது. அவங்க ஞாயிற்றுக்கிழமையில் வேறு ஏதாவது நிகழ்ச்சிக்கோ, இல்லை வெளியூருக்கோ போவாங்க... அதனால கொஞ்சம் தாமதமானாலும் இருந்து முடி வெட்டிவிட்டுத்தான் போகணும். கொஞ்சம் அயந்து தூங்கிட்டேன். ஒருத்தர் போன் பண்ணி பதினொரு மணிக்கு வருவேன், வேற யாருக்கும் நேரம் ஒதுக்கிடாதன்னு சொன்னாரு, அதற்கு பிறகு எழுந்து குளிச்சிட்டு வரேன்.’

ஒவ்வொரு வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும் தெரிந்துவைத்திருப்பான். அதற்கு ஏற்ப அவர்களின் தலைமுடியைத் திருத்திவிடுவதால், ஒருமுறை வந்த வாடிக்கையாளர்கள் வேறு எங்கும் செல்ல மாட்டார்கள். முடி திருத்தத்திற்கான கூலியையும் கறாராகக் கேட்டு வாங்க மாட்டான். நகரத்தின் மற்ற கடைகளை விட குறைவாகவே பெற்றுக்கொள்வான். இன்னும் இரண்டு வாடிக்கையாளர்கள் வந்து அமர்ந்தார்கள். காலையில் வந்திருந்த தினத்தந்தி, தினகரன் நாளிதழை அவர்கள் படித்துக்கொண்டு இருந்தார்கள். தொலைக்காட்சியில் இளையராஜா பாடல்கள் ஒளியும், ஒலியுமாக சன் மியூசிக் ரம்யமாக ஒலித்துக்கொண்டிருந்தது. செவி வழி பாடலையும் கண்கள் நாளிதழையும் உள்வாங்கிக்கொண்டிருந்தன.

கடை திறந்து அரை மணி நேரத்தில் முதலில் அமர்ந்தவனுக்கு முடி திருத்தம் செய்யப்பட்டது. முளைப்பாரி போலக் கருமையாக அவன் தலையில் முடி மேல் நோக்கி நீண்டிருந்தது. சுற்றிலும் கை பிடி படாத அளவு இயந்திரம் கொண்டு முடி வெட்டி எடுக்கப்பட்டது. அந்தக் கண்ணாடியில் நூறு முறை தனது சிகை அலங்காரத்தை ரசித்துப் பார்த்த இளைஞனின் புன்னகையை அந்தக் கண்ணாடி பிரதிபலித்துக்கொண்டிருந்தது. தனது கால் சட்டையிலிருந்த அலைபேசியின் வழியாக முடி திருத்தத் தொகையை அவன் அனுப்பினான். அவன் இருந்த இருக்கையையும் அவனுக்குப் போர்த்தியிருந்த

ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

துணியையும் சுத்தம் செய்துவிட்டு 'தம்பி நீங்க வாங்க'யென கோபி கூப்பிட்டான்.

அவனுக்கு சுமார் இருபத்துநான்கு வயது இருக்கும். பெயர் மிக்கேல். தென்மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பது அவன் பார்வையிலும் உடல் மொழியிலும் தெரிந்தது. அவன் ஆடையில் ஏழ்மையின் நூல்கள் நெடுக்குமாகவும், வறுமையின் நூல்கள் குறுக்குமாகவும் கோர்க்கப்பட்டிருந்தன. கண்கள் உள்ளே போய் மெலிந்த தேகத்தோடு இருந்தான். தலைமுடி அதிகமாக இருந்தது. எண்ணெய் தேய்த்து மூன்று நாட்களுக்கு மேல் இருக்கலாம். முகத்தில் இளம் மயிர் வளர்ந்திருந்தது. உடுக்கை இழந்தவன் கைபோல அந்த முடி வெட்டும் இருக்கையில் அமர்ந்தான். 'வாங்க... தம்பி பெயர் என்ன? ஏரியாவுக்குப் புதுசா? எந்த ஊர் உங்களுக்கு? இதுவரை உங்களை நான் கடையில் பார்த்ததில்லை.'

'ஆமாண்ணே... பெயர் மிக்கேல். தென்காசி பக்கம் ஒரு கிராமம்.. பக்கத்துத் தெருவுல கல்லூரி நண்பன் ரூம்ல தங்கி இருக்கேன். வந்து ஒரு வாரம் ஆகுது. வேலை தேடிக்கிட்டு இருக்கேன். ஏதாவது வேலை இருந்தா சொல்லுங்களேன். பிகாம் படிச்சு முதல் வகுப்பு தேர்ச்சி எடுத்து இருக்கேன். வீட்டுல கஷ்டப்பட்டுப் படிக்க வச்சாங்க... இன்னும் அவங்களுக்குப் பாரமா இருக்கக்கூடாதுன்னு... சென்னைக்கு வந்துட்டேன். கடையில சாப்பிட்டுக்கிட்டு வேலை தேடுகிறேன். நாளைக்கு அம்பத்தூர் எஸ்டேட்டில் ஒரு கம்பெனிக்கு நேர்முகத் தேர்வுக்குப் போகணும். இந்தக் கோலத்தில் போனா உள்ளே விடமாட்டாங்க. அதான் முடிவெட்டிட்டுப் போக வந்தேன். உங்களுக்கு எந்த ஊரு அண்ணே... நம்ம ஊர் மாதிரியே பேசுறீங்களே...'

'எனக்கும் மதுரை மேலூர் தம்பி.. நானும் உன்னை மாதிரிதான். அப்பா தொழில் கத்துத் தந்தாரு... அதற்கு பிறகு இங்க வந்து ஐந்து வருடமாகக் கடையை வச்சிருக்கேன். நம்ம மாதிரி ஆட்களுக்கு அடைக்கலம் தருவது சென்னை, கோவை, திருப்பூர் மாதிரி ஊர்கள்தான். வந்த புதிதில் ஒருநாள் பொழுது கழிவது ரொம்ப கஷ்டமா இருக்கும். நான் கூட சாப்பாடு கிடைக்காமல் இரவு படுத்து இருக்கேன். சென்னை வந்த புதுசுல ஒருவரிடம் வேலைக்குச் சேர்ந்தேன். தினமும் நூறு ரூபாய் சம்பளம், பன்னிரெண்டு மணி நேரம் வேலை, சாப்பாடு போக ஐம்பது ரூபாய் மிச்சம் வரும். அதை வீட்டுக்கு அனுப்புவேன். இப்பொழுதுதான் கொஞ்சம் நிம்மதியா சாப்பிடுறேன்' என கோபி தன் கதையைச் சொல்லிக்கொண்டே முடியைத் திருத்திவிட்டு முகச்சவரம் செய்ய ஆரம்பித்தான்.

இருக்கையின் தலைப்பக்கம் சாய்வதற்கு இருந்த மெத்தையைச் சற்று மேல் இழுத்து இருக்கையைச் சற்று சாய்வாக்கி சோப்பு நுரையை முகத்தில் தடவிவிட்டான். மிக்கேல் நெஞ்சில் ஏதோ பேச சுரந்த வண்ணம் இருந்தது. இப்பொழுதே சொல்லிவிடலாமா என யோசித்தான். முகத்தில் இருந்த முடிகள் வெள்ளை நிற நுரையோடு வழித்து எடுக்கப்பட்டன. சலவை செய்யப்பட்ட தோல் போல முகம் பொலிவாகக் காணப்பட்டது. எதிர் இருக்கும் கண்ணாடியைப் பார்க்கும்பொழுதெல்லாம் அடிவயிற்றில் ஏதோ உறுத்தலும் தவிப்பும் அவனை வாட்டிக்கொண்டே இருக்க முழுமையாக வேலை முடிந்ததும் இருக்கையில் இருந்து எழுந்து நின்று ஒட்டி இருந்த முடிகளைத் துடைத்தான்.

ஏதோ சொல்ல வாய் குளறுகிறது. நடுக்கம்... பயம்... அவன் அங்கங்களைப் பதற்றுகிறது. அவன் நெஞ்சில் சோகமுள் சிக்கிக்கொண்டதை எடுக்க முடியாமல் தவிக்க...

'என்ன தம்பி, நல்லா வெட்டலையா? ஒரு மாதிரி கண்ணாடிய பாக்குறீங்க... என்ன விசயம், சைடுல முடி நல்லா எடுத்தாச்சு. இன்னும் குறைக்கணுமா..?'

'இல்லண்ணே, நல்லாத்தான் இருக்கு.'

கோபி அடுத்திருந்தவரை இருக்கையில் அமர வைத்துவிட்டுக் கீழே கிடந்த

முடிகளைச் சுத்தம் செய்து ஓரமாக இருந்த குப்பைத்தொட்டியில் சேர்த்து வைத்துவிட்டு 'தம்பி நூற்று முப்பது ரூபாய் கொடு' என்றான்.

மிக்கேல் மீண்டும் திருதிருவென முழித்தான். கண்கள் கலங்கிப்போயிருந்தன. 'அண்ணே..' என இழுத்தான்.

'என்னப்பா... என்ன சொல்லு...'

'கையில இப்ப பணம் இல்லணே... ஊரிலிருந்து வரும்போது ஐநூறு ரூபாய் கொண்டு வந்தேன். ஒரு வாரத்துல சாப்பாட்டுக்கும், பஸ்க்கும் சரியாப் போச்சு... ஃபிரண்ட்ஸ்கிட்ட கடன் வாங்கித்தான் செலவு செய்துகொண்டு இருக்கேன். இன்னும் வீட்டில் பணம் கேட்க முடியாது. அடுத்த வாரம் எப்படியாவது வேலைக்குப் போய் முதல் சம்பளத்தில் உங்களுக்குப் பணம் தருவேன். மன்னிச்சுக்கோங்க அண்ணே!'

'அடடா... அதற்கு ஏன் தம்பி பயப்படுற.. இந்த மாதிரி நிறைய பேர் நம்ம கடைக்கு வந்திருக்காங்க. சில பேர் நன்றி மறக்காமல் வேலை கிடைச்சதும் ஸ்வீட்டோட வந்து பணம் கொடுத்துட்டுப் போயிருக்காங்க.... பல பேர் ஏமாற்றியும் போயிருக்காங்க. அதனால பரவாயில்லை, நீ வேலை கிடைச்சதும் சம்பளம் வாங்கிட்டு வந்து பணம் தந்துட்டுப் போப்பா...' என கோபி சொல்லி அனுப்பினான்.

பின் இருக்கையில் அமர்ந்து இருந்தவருக்கு இப்போது முடியைத் திருத்தம் செய்துகொண்டே இருந்தான். இவர்களது பேச்சை அவர் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டே இருந்தார்.

'பாத்திங்களா சார்.. பாவம் பசங்க ஊர்ல படிச்சிட்டு வேலையில்லாமல் சென்னைக்கு வந்துடுறாங்க. இங்க வந்து அவங்க படுகிற கஷ்டம் அதிகம். இந்தப் பையன் நல்லவனா தெரியுது. சில பேரு பர்சை ரூம்ல வச்சுட்டு வந்துட்டேன், வர வழியில பணம் தொலைஞ்சுப் போச்சுன்னு ஏதோ பொய் சொல்லுவாங்க. இந்தப் பையன் நேர்மையா சொல்லிட்டுப் போறான்.'

'ஆமா கோபி, நானும் இப்படி சென்னை வந்தவன்தான்' எனச் சொல்லிக்கொண்டே முடி திருத்தம் செய்து கிளம்புகிறார்.

அம்பத்தூர் தொழிற்பேட்டைச் சாலைகள் எட்டு மணிக்கெல்லாம் பரபரப்பாக இருந்தன. வருகைப் பதிவு செய்ய பணியாளர்கள் ஓட்டமும் நடையுமாகச் செல்கிறார்கள். ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒவ்வொரு விதமான சங்கொலி எழுப்புகிறார்கள். தொழிற்பேட்டை பேருந்து நிலையத்திலிருந்து வடக்கு நோக்கிப் பட்டரைவாக்கம் செல்லும் ரோட்டில் மிக்கேல் நடந்து செல்கிறான். சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் சென்றதும் அமெரிக்கன் ரெமடிஸ் கம்பெனி எங்கு இருக்கிறதெனக் கேட்டு நடந்து செல்கிறான். பட்டரைவாக்கத்திலிருந்து கொரட்டூர் செல்லும் ரோட்டில் அமைந்துள்ள அந்த நிறுவனத்தில் காலை பத்து மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைப்புக் கடிதம் வந்திருந்தது. அந்த நிறுவனத்தை ஒன்பது மணிக்கு எல்லாம் அடைந்துவிட்டான். காவலாளிகள் கம்பீரமாகக் கதவருகே நின்றுகொண்டிருக்கிறார்கள். சாலையில் நின்று ஏக்கத்தோடு அந்த நிறுவனத்தைப் பார்க்கிறான். சுமாரான வெள்ளை நிறச் சட்டையும் நீலக் கலர் கால் சட்டையும் அணிந்து இருக்கிறான். பழைய செருப்பு அவனைப் போலவே ஏழ்மையில் தேய்ந்து இருந்தது.

நேர்முகத்தேர்வுக் கடிதத்தைக் காட்டியதும் ஒரு வருகைப் பதிவேட்டில் பதிவு செய்துவிட்டு உள்ளே அனுப்பினார்கள். வரவேற்பறையில் இருந்த இளம்பெண் அதை வாங்கிப் பார்த்துவிட்டு 'இன்னும் சார் வரவில்லை, அமருங்கள்' என இருக்கையைக் காண்பித்தாள். காலை உணவு சாப்பிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு வெளியே வந்தான். நேற்று இரவு சாப்பாடு இரண்டு வாழைப்பழம் மட்டும். அங்கு சாலையில் ஓரமாக இருந்த நடைபாதை உணவகத்திற்குச் சென்று இரண்டு இட்லி வடை மட்டும் சாப்பிட்டான். அவ்வளவுதான் பணம்

இருந்தது. கடலில் கலந்த நதி போலப் பசி கொஞ்சம் அடங்கிவிட... மீண்டும் நிறுவனத்துக்குள் வந்தான்.

இப்பொழுது நிறைய பேர் அமர்ந்திருந்தார்கள். நாகரீக உடை, காலணி, நுனி நாக்கில் ஆங்கிலம் என மாறுபட்டு இருந்தார்கள். இவன் மட்டும் தனித்துவமாகத் தெரிந்தான். இவனிடம் ஆங்கிலத்தில் ஒருவன் பேச தமிழிலே பதிலளித்தான். மனிதவள மேலாளர் வந்துவிட எல்லோரும் எழுந்து வணக்கம் செய்தார்கள். பதினைந்து நிமிட இடைவெளியில் வரவேற்பறைப் பெண் ஒவ்வொருவராக அழைத்து உள்ளே அனுப்பினாள். நேர்முகத் தேர்வு முடிந்து ஒவ்வொருவரும் மீண்டும் வந்து தங்கள் இருக்கையில் அமர்ந்தார்கள். மூன்று நபர்களைத் தேர்வு செய்ய சுமார் இரண்டு மணி நேரம் எடுத்துக்கொண்டார்கள். தேநீர் வந்தவர்களுக்கு வழங்கப்பட்டது. குளிர்சாதன அறையிலும் மிக்கேலுக்கு வியர்வை வந்தது. கண்களை மூடாமலே அவன் பிரார்த்தனை செய்துகொண்டு இருந்தான்.

மதிய உணவு இடைவேளைக்குச் சற்று முன் அந்த வரவேற்பறைப் பெண் ஒரு பட்டியலை வாசித்தாள். ‘விக்னேஷ், மைதீன், மிக்கேல் மூவரும் இருங்கள். மற்றவர்களுக்கு அடுத்த முறை வாய்ப்பு அளிக்கிறோம், இப்போது கிளம்புங்கள்’ என்றாள். மிக்கேல் உள்ளத்தில் தேவாலய மணி ஒலித்தது. கை விரல்களை இறுக்கி மீண்டும் பிரார்த்தனை செய்துகொண்டான். கண்கள் இரண்டிலும் நட்சத்திர ஒளி தெரிந்தது. விக்னேஷ், மைதீன் உள்ளே சென்று பணி ஆணையை வாங்கிக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். மிக்கேல் மூன்றாவதாக உள்ளே சென்றான்.

‘வாங்க தம்பி.. அமருங்கள். இந்தாங்க உங்க பணி ஆணை. நேற்று உங்களை கோபி முடித்திருத்தக் கடையில் பார்த்தேன். என் பெயர் செல்வராஜ். ஆனால் நீங்கள் என்னைக் கவனித்திருக்க மாட்டீங்க... உங்க நேர்மை எனக்குப் பிடித்திருந்தது. ஒரு நிறுவனத்துக்கு வறுமையோடு செல்லலாம். ஆனால் ஒழுக்கமாகச் செல்லணும்னு நினைத்து முடி திருத்தி வந்தீங்க... கோபிக்கு முதல் மாதச் சம்பளத்தில் பணம் தருவதாக உறுதி அளித்தீர்கள். நான் பின்னால்தான் அமர்ந்து இருந்தேன். நீங்க இந்த நேர்முகத் தேர்வுக்கு வருவீங்கன்னு எனக்குத் தெரியாது. ஆனால் உங்களைக் காலையில் பார்த்ததும் புரிந்துகொண்டேன். உங்க விண்ணப்பத்தில் இருக்கும் ஊர் விலாசம், இப்பொழுது தங்கியிருக்கும் இடம் எல்லாம் நான் கேட்டதற்கும், நீங்க நேற்று கோபியிடம் சொன்னதும் சரியாக இருந்தது. உங்கள் உண்மைத்தன்மையைத் தெரிந்துகொண்டு, இந்தப் பணிக்குச் சரியான நபரை நான் தேர்வு செய்திருக்கிறேன். காலையில் சாப்பிட்டீர்களா? மதிய உணவுக்கு டோக்கன் தருகிறேன். இங்கே சாப்பிட்டுப் போங்க.. நாளை மறுநாள் வந்து உங்கள் பணியைத் தொடருங்கள்’ எனச் சொல்லி அனுப்பினார்.

வெளியே வந்த மிக்கேலுக்கு சந்தோசத்தை அளக்க கருவிகள் இருக்க வேண்டாம் என வேண்டினான். வானத்தில் அப்போது கூட நட்சத்திரங்கள் தெரிந்தன. கோபியைக் கடவுளாக நினைத்தான். பல நாள் பட்டினியை இந்த ஒரு நாள் உணவு தீர்த்துவிட்டதே என சந்தோசமாக நடந்தான். சாலையில் வருவோரெல்லாம் வாழ்த்தும் தேவ தூதர்களாகத் தெரிந்தார்கள். கிடைத்த பணியை எப்படி செய்ய வேண்டும் எனும் சிந்தனையை மட்டும் மூளையில் வைத்துவிட்டு மற்ற கவலைகளைக் கண்ணாடிக் குவளையைப் போலக் கவிழ்த்து வைத்துவிட்டுப் பணியைத் தொடர ஆரம்பித்தான். கண்ணாடி பிம்பத்திலும் கடவுள் அமர்ந்திருக்கிறார். கண்களுக்குத்தான் தெரியாமல் போய்விட்டது. பின் இருக்கையில் அமர்ந்து எல்லாவற்றையும் கவனித்திருந்தவர் தான் மனிதவள மேலாளர் என்பதை நிரூபித்திருக்கிறார். மைக்கேல் பிரார்த்தனை நிறைவேறி இருக்கிறது. கோபிக்கு முதல் மாதச் சம்பளத்தில் கடனோடு சேர்த்து அன்பளிப்பையும் கொடுத்தான்.

கவிதா லட்சுமி

# ஊழிக்கூத்து – உணர்ந்தார்க்குப் பேரனுபவம்!

கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு என்று பாரதியின் பல படைப்புகள் அவனின் கவித்திறனைப் பறைசாற்றியபோதும், தனிப் பாடலாக உச்சத்தைத் தொட்ட கவிதைகளுள் அவனின் ஊழிக்கூத்து சிகரமாக நிற்கின்றது.

ஆழ்ந்த பொருளுள்ள பாரதியின் கவிதைகளில் 'ஊழிக்கூத்து' மிகவும் தனித்துவமிக்கது.

தெய்வப் பாடல்கள் என்ற பகுப்பில் இக்கவிதையைச் சேர்த்திருப்பது எத்தனை தூரம் பொருந்தும் என்பதை இக்கவிதையைப் படித்துணர்ந்தவர்களின் முடிவிற்கே விட்டுவிடுதல் நன்று.

இப்பாடலின் உட்பொருளாகி ஆடும் அன்னை பிரபஞ்ச சக்திகளின் மூலம். மூலசக்தி!

அவள் மகாசக்தி!

பாரதி போற்றிய கடவுள் கருத்துக்களில் சக்திக்கே முக்கிய இடத்தினைக் கொடுத்தார். சக்தியே எங்கும் நிறைந்திருந்ததாய்க் கண்டார். தனது வசனக் கவிதையில் சக்தியை,

**அநந்தம், எல்லையற்றது முடிவற்றது...**

**பிணைப்பது, கலப்பது...**

**புடைப்பது.. வீசுவது..**

**ஒன்றாகுவது, பலவாக்குவது..**

**கொல்வது, உயிர் தருவது...**

**சக்தி முதற்பொருள்...**

என்கிறான். “சொல்லுக்கடங்காவே – பராசக்தி” என்றொரு பாடலில் மொழிகிறான்.

**காட்டு வழிகளிலேமலைக்**

**காட்சியிலே, புனல் வீழ்ச்சி யிலே, பல**

**நாட்டுப் புறங்களிலேநகர்**

**நண்ணு சிலசுடர் மாடத்தி லே, சில**

**வேட்டுவர் சார்பினிலேசில**

**வீர ரிடத்திலும் வேந்த ரிடத்திலும்,**

**மீட்டு மவள்வருவாள் அம்மா**

அம்மா என்று அழைப்பதற்கும் அன்னை என்று அழைப்பதற்கும் நுண்ணிய வேறுபாடு உண்டு. அம்மா என்ற அழைப்பில் ஒரு நெருக்கம் உண்டு. அன்னை என்று விளித்து நோக்கும்போது அவளையே சற்று தூரத்தில் வைத்து, அவளை, அவளின் சக்தியை நிமிர்ந்து பார்த்து, பிரமித்து மரியாதையோடு அழைப்பது போல.

இங்கு, அண்டவெளியின் சக்தியை அன்னை என்று அழைக்கின்றான் பாரதி.

ஊழிக்கூத்து கவிதை காலத்தோடு நிர்மூலம் ஆகும் மூவுலகின் அழிவை, அதன் ஆட்டத்தை அழகியலோடு பேசுகிறது.

**வெடிபடு மண்டத் திடிபல தாளம்**
**போட வெறும்**

**வெளியி லிரத்தக் களியோடு பூதம் பாட**

வெறும் வெளி பிரபஞ்சம். பூதம் என்பது சக்தியின் (Sprit / Energy) வடிவம். பெரும் மோதல்கள் எழுந்து அனைத்தும் சிதறிப்போகும் சக்திகளின் கூத்தில் இடிகள் எழுகின்றன. அவை தாளத்தோடு அசைகின்றன.

பிரபஞ்சத்தில் காணும் சக்திகளின் இயங்கு விசைகளின் வேகத்தைக் காட்சிப்படுத்தும் பாடல் வரிகளின் பொருள் யாவும் சக்தியே.

ஒன்று மற்றொரு வடிவமாகப் பரிணமிக்கும் சக்தி, இக்கவிதையில் ஒரு பேயுருவினைப் போலக் காட்சிப்படுத்தப்படுகிறது.

**பாட்டின்**

**அடிபடு பொருளுன் அடிபடு**
**மொலியிற் கூடக் களித்**

**தாடுங் காளீ, சாமுண்டீ, கங்காளீ!**

தனது சதைகளைப் பிய்த்தெறிந்து எலும்புக் கூடாகத் திரியும் காளியின் பேய் வடிவமே கங்காளி.

கறுத்த நிறத்தில் தோற்றங் காட்டுவாள் சாமுண்டி. இங்கு இவள் பிரபஞ்சத்தின் இருளினைச் சுட்டி நிற்கின்றாள். பிணங்களின் மீது அமர்ந்திருக்கும் சப்த கன்னியர்களில் ஒரு தெய்வமாகும். இவரை சாமுண்டீஸ்வரி என்றும் அழைக்கின்றனர். இவர் துர்க்கா தேவி போரில் ஈடுபடும்போது அவருடைய படையில் ஒருவராகக் கருதப்படும் சக்தி வடிவம்.

சக்தியிலிருந்தே ஒலி எழுகின்றது, சக்தியிலிருந்தே ஒளி எழுகின்றது. பின் அந்தச் சக்தியினூடாகத் தானும் இயைந்து கூடுகின்றது. பிரபஞ்சத்தில் பிளவுபடும் சக்திகளின் மேலிருந்து இயக்கும், இயங்கும் சக்தியின் வடிவமாகவும் இவளே இருக்கின்றாள்.

இதைத் தனது வசனக் கவிதையில் வேறுசில சொற்களால் இப்படிக் கூறுகின்றான்..

**சக்திக் கூத்திலே ஒளி ஒரு தாளம்...**

....

**ஐந்துறு பூதம் சிந்திப் போயொன் றாகப் பின்னர்**

**அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப் போக**

ஐந்து பூதங்களுமே சக்தியினுடைய வேறு வேறு வடிவங்கள். நிலம் திண்மம். இந்தத் திண்மத்தை நாம் பிரித்துக் கொண்டு போனால் இறுதியில் மிஞ்சுவது அணு. அணு சக்தியின் வடிவம். அணு இணைந்தாலும் சிதைந்தாலும் சக்தியின் வடிவமே.

நீரைப் பிரித்துக்கொண்டு போனாலும் இறுதியில் வருவது அணுதான். தீயும் சக்தியின் வடிவமே. காற்றும், ஆகாசமும் அதிலிருக்கும் அனைத்தும் அணுக்கள்தான்.

ஆகாசம் ஏன் நீல நிறமாகத் தெரிகின்றது என்று நம்மில் எத்தனை பேர் சிந்தித்திருப்போம்?

பூமிக்கு வெளியில் இருந்து பூமிக்குக் கதிர் வீச்சுக்கள் வருகின்றன. அந்தக் கதிர் வீச்சுக்களில் இருக்கின்ற Ultra violet என்னும் உயிர்களுக்கு ஆபத்து தருகின்ற கதிர்வீச்சுகளும் இருக்கின்றன. அவை பூமிக்கு வராதபடி ஆகாயத்தில் இருக்கின்ற அணுத் துணிக்கைகள் (Gas molecules) தடுக்கின்றன. தடுத்து நிறுத்தும்பொழுது Ultra violet நிறத்தை ஆகாயத்து அணுத் துணிக்கைகள் தமக்குள் எடுத்துக்கொள்கின்றன.

இந்த அணுத் துணிக்கைகளின் மோதல் நிகழ்வுகளின் காரணமாகத்தான் நமக்கு ஆகாயம் நீல நிறமாகத் தெரிகிறது. இம்மோதல்கள் இரு சக்திகளின் கூத்தின்றி வேறென்ன?

சக்தியாக விளங்கும் ஐம்பூதங்கள் அழியும்போதிலும் அவை மீண்டும் அணுவாகி சக்தியின் வேறொரு வடிவமாகி விடுகின்றன.

**பொருளில்லாப் பொருளின் விளைவில்லா விளைவு** என்பதும் அவனுடைய வரிகளே.

**அங்கே**

**முந்துறும் ஒளியிற் சிந்தை நழுவும் வேகத் தோடே**

**முடியா நடனம் புரிவாய் அடுதீ சொரிவாய்,**

ஒளியின் வேகத்தோடு சேர்ந்து ஒருவர் சிந்திக்கும் வேகமும் சேரும்போது கிடைக்கும் வேகத்தோடு இணைந்து சக்திகளின் இயக்கம் பிரபஞ்சம் முழுவதும் நடைபெறுகின்றது. இந்த வேகத்தில் சக்திகள் மோதுண்டு சிதறும் காட்சிகள் பெருந் தீப்பிளம்பின் நடனமாக பாரதியின் மனக் கண்ணில் விரிகிறது.

சூரியனின் நெருப்பாகவும் தீப்பிழம்புகளாகவும் ஆகி அடுதீ சொரிகின்றது.

**பாழாம் வெளியும் பதறிப் போய்மெய் குலையச் சலனம்**

**பயிலும் சக்திக் குலமும் வழிகள் கலைய**

சலனம் என்பது இயக்கம். குலம் என்ற சொல்லின் மூலக் கருத்து கூட்டம். சக்தியினுடைய Genetic form. சக்தி இரண்டு வடிவங்களில் உள. அவையாவன நிலைவிசை மற்றும் இயங்குவிசை. இங்கே குறிப்பிடப்படுவது இயங்கு விசை.

அண்டவெளியில் பல இயங்கு விசைகள் இருக்கின்றன. இவை எல்லாம் தாம் இருக்கின்ற நிலைகளிலிருந்தும் வழிகளிலிருந்தும்

கலைகின்றன, வடிவங்கள் மாறுகின்றன.

**அங்கே**

**ஊழாம் பேய்தான் "ஓஹோ ஹோ" வென்றலைய, வெறித்**

**துறுமித் திரிவாய், செருவெங் கூத்தே புரிவாய்,**

**சத்திப் பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச் சட்டச்**

**சடசட சட்டென் றுடைபடு தாளங்கொட்டி**

பெரும் யுத்தம் நடைபெறும் இடத்தில் பேயினைப் போல் எங்கும் அழிவின் ஆட்டம் தொடர்கிறது. அழிவே தானாக, காணும் திசையெங்கும் சக்தி தன்னைத் தானே எரித்து மற்றோர் சக்தியாக மாறி மாறி இயங்கி இயக்குகிறது.

இவை எல்லாம் தானே தான் என்று மூலசக்தி அங்கே ஆடும் கூத்தே செருவங்கூத்து. செருவெங்கூத்தென்பது வன்மம் நிறைந்த யுத்தத்தைக் குறிப்பது.

இதன் தொடர்ச்சியாக சக்திக் கூட்டங்கள் தம் தலைகளை ஒன்றோடொன்று முட்டி மோதி தாளத்தோடு உடைந்து சிதறுகின்றன.

**அங்கே**

**எத்திக் கினிலும் நின்விழி யனல்போய் எட்டித் தானே**

**எரியுங் கோலங் கண்டேசாகும் காலம்**

சிந்தனையை நிறுத்திவிடும் பயங்கரக் காட்சிகளாக சக்தியினுடைய கண்களில் இருந்து புறப்பட்ட தீயில் தானே எரிந்து சாகும் காலமும் உண்டென்கிறது. மூலசக்தியினுடைய வடிவத்திற்குள் பிரபஞ்சத்தின் அனைத்து சக்திகளும் அடங்கி விடுகின்றன.

**காலத் தொடுநிர் மூலம்படு மூவுலகும் அங்கே**

**கடவுள் மோனத் தொளியே தனியா யிலகும்**

**சக்திக் கலைகளிலே ஒளி யொன்று..**

மூன்று உலகங்களும் பிரபஞ்சத்திற்கு உட்பட்டதே. அவை சொர்க்கம், மத்தியமம், பாதாளம் என்பன. இவை மூன்றும் காலத்தின் போக்கில் ஒன்றோடொன்று மோதி அழிந்து போகுமளவு சக்தியின் கூத்து நடைபெற்று முடிகிறது. முடியும் காலம் மோனத்து ஒளியுண்டாகும். அது அமைதியின் ஒளி!

இயற்பியலின் (Pxhysics) உச்ச நிலை என்பது இதுவே.

இயற்பியலின் உச்ச நிலை என்பது திண்ம சக்திக்கும் ஒரு எதிர்சக்தி ஒன்று இருக்கின்றது என்பதை அறிந்துகொள்வதே ஆகும். இதுவே இயற்பியலின் கடைநிலை எனப்படுகின்றது.

இங்கு மோனத்து ஒளி என்பது பிரபஞ்சத்தின் மற்றொரு சக்தி வடிவு (Anti Matter).

**சிவன்**

**கோலங் கண்டுன் கனல்செய் சினமும் விலகும் கையைக்**

**கொஞ்சித் தொடுவாய், ஆனந்தக்கூத் திடுவாய்,**

பிரபஞ்சத்தின் மற்றொரு பகுதியாக இருப்பது கருந்துளை (Black Hole). மோனத்து ஒளியை இங்கே சிவன் வடிவில் எடுத்து வருகிறான் பாரதி. சிவன் என்பது அழிவிற்கான குறியீடு. மோனத்து ஒளியுள் போய் சக்தி ஒன்றாகுதல் என்பது இயற்பியலின் உச்ச நிலை.

தனக்கு உட்பட்ட எந்த சக்தியும், ஒளியையும் கூட உள்ளிழுத்து வெளியேற முடியாத அளவு வலுவான ஈர்ப்பு சக்தியைக் கொண்டது கருந்துளை. அது முடிவிலியானது.


அழிவென்பது இங்கு இயைவாகிறது.

பிரபஞ்சக் கூத்தினைக் காட்சிகளாகக் கண்டவனின் பரவசநிலை கவிதையாக உருப்பெற, அதனை அற்புதச் சித்திரமாக நாமும் கண்டுணர்கின்றோம்.

இறப்பையும் கொஞ்சித் தொடுவாய், ஆனந்தக் கூத்திடுவாய் என்று பிரபஞ்சக் கூத்தினை உணர்ந்த பாரதி தன் நிலையில் இருந்து சொல்கிறான் 'அன்னை.. அன்னை.. ஆடும் கூத்தை நாடச் செய்தாய் என்னை'!

ஊழிக்கூத்து, உணர்ந்தார்க்குப் பேரனுபவம்!

என்.பாலாஜி



ஓவியம் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

# பழி

மேலமாங்குடி அரசு மேல்நிலைப் பள்ளியின் பத்தாம் வகுப்பு கணக்கு வாத்தியார் முத்தையன் இரண்டு நாட்களுக்கு முன்பு வகுப்பில் சுகுமாரையும் சவுந்தரராஜனையும் கையில் ஸ்மார்ட்ஃபோனுடன் பிடித்துவிட்டார். அங்கேயே இருவருக்கும் நான்கு அறை விட்டு, பெற்றோரைக் கூட்டி வரும்படி துரத்திவிட்டார். ஆனால் இரண்டு நாட்களாகியும் ஒருவனின் பெற்றோரும் வரவில்லை. இன்று கணக்கு வகுப்பின்போது பையன்கள் மீண்டும் முத்தையா வாத்தியாரிடம் சிக்கிக்கொண்டனர். கையில் இருந்த பிரம்பால் காலில் நாலு போடு போட்டு இருவரையும் நடு மைதானத்தில் முட்டி போட வைத்துவிட்டார்.

உச்சி வெயில் மண்டையைப் பிளந்துகொண்டிருந்தது. மதியம் உணவு இடைவேளைக்கு மணி அடித்ததும் வகுப்புகளில் இருந்து மாணவர்கள் சாப்பிட விரைந்தனர். அதில் இருவராக பூங்கோதையும் நாயகியும் கிளம்பினர்.

‘ஏண்டி பூவு, உன் ஆளு சுகுமார்தானே

கிரவுண்டுல முட்டி போட்டுக்கிட்டு நிக்கிறான்?'

'சீ..எரும. எப்ப பாத்தாலும் என்னய ஓட்டிக்கிட்டே இருக்க.'

'அவன் கூட இருக்கிறவன் யாருடி?'

'ம்.. அது உன் மொறமாமன் சவுந்தரு.'

பூங்கோதையும் நாயகியும் கைகளால் வாய் பொத்திச் சிரித்தபடி வேப்பமரத்தடியைத் தேடிப் போனார்கள். அங்கே கிரவுண்டில் கணக்கு வாத்தியார் முத்தையன் கையில் பிரம்போடு முட்டி போட்டிருந்தவர்களை நோக்கி நடந்து வந்தார்.

'உங்கொப்பாவ கூட்டீட்டு வரச் சொன்னேனே, எங்கடா?'

இருவரும் பதில் சொல்லாமல் தலைகுனிந்து முட்டிபோட்டபடி நின்றார்கள். கையில் வைத்திருந்த பிரம்பைச் சடார், சடார் என வீசினார் முத்தையன். அந்த சப்தம் பள்ளி முழுவதும் எதிரொலித்து ஒருகணம் பள்ளியே அமைதியாகி, அடி நின்றதும் மீண்டும் இயல்புக்கு மீண்டது.

'சீ பாவம்டி அந்த பசங்க, ஒரு மணிநேரமா நடுவெயில்ல முட்டி போட்டு அடி வாங்கீட்டு இருக்கானுங்க. மொத்த ஸ்கூலே அவனுங்களதான் வேடிக்கை பாக்குது.'

'நல்லா வாங்கட்டும் விடுடி. எப்ப பார்த்தாலும் ஃபோன்ல கண்டதையும் பாத்துக்கிட்டு.. பின்னால உக்காந்து வம்பிழுத்துக்கிட்டு..'

'இருந்தாலும் உனக்கு கல்நெஞ்சுடி.'

'நானும்தான் போன பரிட்சைல ஃபெயில் ஆனதுக்கு இந்த ஆள்கிட்ட தோல் உரியிற அளவுக்கு அடி வாங்குனேன். இப்ப இவனுங்க மாட்டிட்டானுங்க. நல்லா வாங்கட்டும்' என்றபடி வேப்பமரத்தடி நிழலில் உட்கார்ந்து டிபன்பாக்ஸைப் பிரித்தாள் பூங்கோதை.

அன்று மாலை பூங்கோதை பள்ளி முடிந்து ஆறரை மணி வரை வீட்டுக்கு வரவில்லை என்று கவலைப்பட்டு அம்மா காமாட்சி தேடத் தொடங்கினாள். பக்கத்து வீட்டில் இருந்த அண்ணன் பழனிவேலுவின் மகனை சப்தமாக அழைத்தாள்.

'ரமேசு, இன்னிக்கிப் பள்ளியோடம் முடிஞ்சி பூவு உங்கூடதானே கிளம்புனா?'

'இல்ல அத்த. அவள பாக்கலியே.'

'ஐயோ இத்தனை நேரமாயிட்டு, இன்னும் காணமே புள்ளைய. நீ பள்ளியோடத்துல போய்ப் பாத்துட்டு வர்றியா?'

ரமேஷ் சைக்கிளை எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குச் சென்றான். அங்கே கதவில் பெரிய பூட்டு தொங்கிக்கொண்டிருந்தது. பக்கத்தில் இருந்த இரண்டு மிட்டாய்க் கடைகளும் தார்ப்பாய் மூடிச் சுருட்டப்பட்டிருந்தன. பள்ளிச் சுற்றுச்சுவர் ஓரமாகச் சுற்றி வந்து பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி ஸ்கூலில் யாரும் இல்லை என்று ரமேஷ் தகவல் சொன்ன உடன் காமாட்சி சத்தம் போட்டு அழத் தொடங்கினாள்.

அவளது குரலைக் கேட்டு அக்கம்பக்கத்தில் இருந்த சொந்தக்காரர்கள் வீடுகளிலிருந்து என்னவென்று பார்க்க ஆட்கள் வரத் தொடங்கினார்கள். முதலில் பழனிவேலு வெளியே வந்து காமாட்சியிடம் விசாரித்தான்.

'பூவு எங்க போயிருப்பா? ஏதாவது ஃபிரெண்டு வீட்டுக்குப் போறதா சொன்னாளா?'

'இல்லையேண்ணே. தெனமும் பள்ளியோடம் முடிஞ்சதும் கரெக்டா நாலரை மணிக்கு வீட்டுக்கு வந்துடுவாளே?'

'சின்னப்புள்ளைன்னா வழிதவறிப் போயிருக்கும்னு தேடலாம். இத்தாம் பெரிய புள்ளைக்கு வழி எப்படி தவறும்? ஏண்டா ரமேசு, உன்னோட ஃபிரெண்ட்ஸுகிட்ட கேட்டுப் பாக்கிறியா?'

'சரிப்பா' என்றபடி ரமேஷ் மொபைலை எடுத்துக்கொண்டு தள்ளிச் சென்றான்.

அதற்குள் விஷயம் கேள்விப்பட்டு பூங்கோதையின் அப்பா முத்துசாமி டிவிஎஸ் 50ஐ அரக்கப்பறக்க ஓட்டி வந்தான்.

'என்னாடி புள்ள வளத்து வச்சிருக்க? இதுதான் நீ புள்ளய கவனிக்கிற லட்சணமா?'

'கடவுளே, எம் புள்ளைக்கு ஒண்ணும் ஆயிரக்கூடாது ஆத்தா.'

காமாட்சி கத்தி அழுதபடி திண்ணையில் இருந்த தூணில் சரிந்து உட்கார்ந்தாள். அதற்குள் அந்தத் தெருவில் குடியிருந்த முத்துசாமியின் சொந்தக்காரர்கள் இருபது, முப்பது பேர் வீட்டுக்கு முன் கூடிவிட்டனர்.

ஸ்கூல் நண்பர்களுக்கு ஃபோன் செய்த ரமேஷ் திரும்பி வந்து யாரும் பூங்கோதையைப் பார்க்கவில்லை என்று சொன்னான். உடனே அங்கிருந்த எல்லோரும் நான்கைந்து பேராகச் சேர்ந்து ஊரைச் சுற்றித் தேடலாம் என்று பழனிவேலு யோசனை சொன்னான். எல்லோரும் ஆமோதித்து தங்கள் வீடுகளுக்குச் சென்று வண்டிகளை எடுக்கத் தயாரானார்கள்.

ஆனால் அடுத்த பத்து நிமிடங்களில் பூங்கோதை சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டாள். வீட்டுக்கு முன் நின்றிருந்தவர்கள் தூரத்தில் அவளைக் கண்டதும் 'பூவு வந்திருச்சு' என்று குரல் கொடுத்தனர்.

பூங்கோதை அவர்கள் யாரையும் ஏறெடுத்துப் பார்க்காமல், தலையைக் குனிந்தவாறு சைக்கிளைச் சிரமப்பட்டுத் தள்ளிக்கொண்டு, களைப்பாக வீட்டை நோக்கி நடந்தாள்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த முத்துசாமியும் காமாட்சியும் அவளைப் பார்த்தவுடன் வேகமாகப் பக்கத்தில் வந்தார்கள். முத்துசாமி அவள் சைக்கிளை வாங்கிக்கொள்ள, காமாட்சி பூங்கோதையின் தோளைப் பிடித்துக்கொண்டு 'எங்கடி போன?' என்று கேட்டாள்.

பூங்கோதை எதுவும் பதில் பேசாமல் அவளைத் தள்ளிக்கொண்டு வீட்டுக்குள் சென்றாள். காமாட்சியும் பூங்கோதையின் பின்னாலேயே வீட்டுக்குள் சென்றாள். வீட்டுக்குள்ளே நெற்குதிர் இருக்கும் அறைக்குள் சென்ற பூங்கோதை இருட்டுக்குள் வெறும் தரையில் சுருண்டு படுத்துக்கொண்டாள். காமாட்சி அருகே உட்கார்ந்து அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

'என்னடி பண்ணுது ஒடம்புக்கு? தலைவலியா, வவுத்துவலியா?'

'..'

'பூவு... பூவு'

பூங்கோதை கைகளைத் தொடைகளுக்குள் செருகியபடி ஒருக்களித்துப் படுத்து விசும்பத் தொடங்கினாள். காமாட்சி பதைத்துப் போனாள். பூங்கோதையின் தலையை எடுத்துத் தன் மடி மீது வைத்துக்கொண்டே கேட்டாள்.

'என்னடி ஆயி பண்ணுது? மாச நோவா?' என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

பூங்கோதை பதில் சொல்லாமல் தொடர்ந்து விசும்பியபடி இருந்தாள்.

'சரி, வெந்நீர் வைச்சு ஒத்தடம் கொடுக்குறேன், சரியாயிரும். மதியம் சாப்புட்டியா?'

'..'

காமாட்சி அவள் அடிவயிற்றைத் தொட்டுப் பார்க்கக் கையை நகர்த்தினாள். பூங்கோதை விருட்டென்று அவள் கையைத் தட்டிவிட்டுவிட்டு வயிற்றின் குறுக்காகக் கையைக் கட்டிக்கொண்டு சத்தமாக விசும்பினாள். பதறிப்போன காமாட்சி பூங்கோதையைப் பிடித்து அமர வைத்தாள்.

'ஒழுங்கா என்னா நடந்ததுன்னு சொல்லுடி' என்று கூறியபடி அவள் தோள்பட்டைகளைப் பிடித்துக் குலுக்கினாள்.

பூங்கோதை அழுதுகொண்டே 'வாத்தியாரு..

கணக்கு வாத்தியாரு..' என்று திக்கினாள்.

அதிர்ந்துபோன காமாட்சி உடனே சப்தம் போட்டு முத்துசாமியைக் கூப்பிட்டாள்.

'ஏங்க, வாத்தியாரு இவள ஏதோ பண்ணிட்டான்னு சொல்றாங்க, எனக்கு ரொம்ப பயமாருக்கு.'

முத்துசாமியின் முகம் சுருங்கிச் சிவக்க 'பூவு, என்னா நடந்ததுன்னு தெளிவா சொல்லு' என்றான்.

பூங்கோதை விசும்பியபடி 'ஸ்கூல் முடிஞ்ச ஒடனே கணக்கு வாத்தியார் எங்கிட்ட பசங்களோட பரிட்சைப் பேப்பரை எல்லாம் எடுத்துக்கிட்டு ஸ்டாஃப் ரூமுக்கு வரச் சொன்னாருன்னு போனேன். பேப்பரை வச்சிட்டு 'கிளம்புறேன் சார்'ன்னு சொன்னப்ப வாத்தியாரு என் கிட்டக்க வந்து 'உனக்குக் கணக்கு பாடம் சரியா வரலின்னா என்னய கேக்க வேண்டியதுதானே?'ன்னாரு.

நானும் 'ஆமாம் சார், புரியல கஷ்டமாயிருக்கு'ன்னேன்.

'சரி, உன் ஸ்கூல் பேக்கை எடுத்துக்கிட்டு கிரவுண்டுக்கு வா'ன்னாரு. அங்க போனதும் என்னைய மோட்டார் ரூமுக்குள்ற போகச் சொன்னாரு. நான் பயந்துட்டே நின்னேன்.

'பயப்படாத வா'ன்னு சொல்லி என் கையைப் பிடிச்சி மோட்டார் ரூமுக்குள்ற கூட்டிட்டுப் போயி..' என்று சொல்லியபடி சத்தம் போட்டு அழத் தொடங்கினாள்.

அதுவரை பல்லைக் கடித்துக் கேட்டுக்கொண்டிருந்த முத்துசாமி வெறிகொண்டு 'டேய்' என்று கத்தியபடி எழுந்தான். முத்துசாமியின் கூச்சலைக் கேட்டுப் பழனிவேலுவும் ரமேஷும் வீட்டுக்குள் ஓடி வந்தார்கள்.

'ரமேசு, உன் கணக்கு வாத்தி முத்தையன் வீடு தெரியுமாடா?'

'தெரியும் மாமா.'

'கூப்புட்றா எல்லாத்தையும், இன்னிக்கு அவன வெட்டிட்டுத்தான் மறுவேல.'

இருட்டுக்குள் காமாட்சியின் மடியில் முகம் புதைத்து பூங்கோதை அழுதுகொண்டிருக்க, அந்தத் தெருவிலிருந்து பெரும் படையே முத்தையன் வீட்டை நோக்கி வெறியுடன் கிளம்பியது.

அடுத்த வருடம் பணி ஓய்வு பெறப்போகும் முத்தையன் வாத்தியாருக்கு மூன்று பெண் குழந்தைகள். மூத்தவளுக்குத் திருமணமாகிவிட்டது. மற்ற இருவரும் வீட்டில் அம்மாவுக்குத் துணையாக வேலைகள் செய்துகொண்டு திருமணத்திற்காகக் காத்திருந்தார்கள்.

போன வாரம் அவருடைய நண்பர், இரண்டாவது பெண்ணுக்கு ஒரு திருமண வரன் இருப்பதாகச் சொல்லி முத்தையனைச் சென்னைக்கு வரச் சொல்லியிருந்தார். அதற்காக முத்தையன் பள்ளி முடிந்ததும் வீட்டுக்கு வந்து மனைவி ரங்கநாயகியிடம் சொல்லிவிட்டுச் சென்னை செல்ல ஆறு மணி பஸ் ஏறியிருந்தார்.

ரமேஷ் வண்டியில் முன்னால் சென்று வழிகாட்ட, முத்தையனின் வீட்டை அடைந்த கும்பல் வீட்டுக்கு முன்னால் இருந்த படல் வேலிக் கதவை உடைத்து வீசியது. உள்ளே சமையலறையில் உலை வைத்துக்கொண்டிருந்த வாத்தியார் மனைவி சத்தம் கேட்டு வேகமாக வாசலுக்கு வந்தாள்.

'உன் புருஷன் எங்கடி?' என்று பழனிவேலு உரக்கக் கத்தினான்.

ரங்கநாயகி கண்ணில் திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'முதல்ல உன் புருஷன வெளிய கூப்புடு. அவன வெட்டிட்டுத்தான் மறுவேல.'

அதிர்ச்சியில் முந்தானையால் வாய்பொத்தி ஒரு நிமிடம் உறைந்து நின்றாள் ரங்கநாயகி. அப்போது உள்ளே இருந்து இரண்டு மகள்களும் வெளியே வந்து மலங்க விழித்தபடி அம்மாவின் பின்னால் நின்றனர்.

‘வீட்டுலயே இத்தன பொண்டுகள வெச்சுக்கிட்டு உன் புருசன் ஊர்ல இருக்குற சின்னப் பொண்ணுகள சீரழிக்கிறானா?’ என்று முத்துசாமி கூச்சலிட்டான்.

மூன்று பெண்களும் கண்ணீர் பொங்க பயத்துடன் எதுவும் பேசாமல் அழுதபடி நின்றனர். அதற்குள் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் அவர்கள் வீட்டுக்கு வெளியே கூடினார்கள்.

பழனிவேலு முன்னால் வந்து ‘இந்தாரு, உன் புருஷன் எங்க இருக்கான்னு ஒழுங்கா சொல்லீரு. இல்ல உங்களையும் வீட்டோட வச்சுக் கொளுத்தீருவோம்’ என்றான்.

‘அவரு இன்னிக்குச் சாயங்காலந்தான் மெட்ராஸ் கௌம்பிப் போனாரு.’

‘பாத்தியா, பய தப்பு பண்ணிட்டு ஓடி ஒளிஞ்சிட்டான். மொதல்ல ஃபோன போட்டு அவன ஒடனே ஊருக்குத் திரும்ப வரச் சொல்லு.’

ரங்கநாயகி அவசரமாக ஃபோனை எடுத்து முத்தையனை அழைத்தாள். மூன்று நான்கு முறை முயற்சி செய்தும் இணைப்பு கிடைக்கவில்லை.

கூட்டத்தில் இருந்த வக்கீல் ராஜமாணிக்கம் ‘தஞ்சாவூர்ல இருக்குற எனக்குத் தெரிஞ்ச இன்ஸ்பெக்டருக்கு ஃபோன் பண்ணிட்டேன். இப்ப லைன்ல வருவாரு. அவர்கிட்ட சொன்னா உடனே ஆளைப் பிடிச்சிரலாம்’ என்றார்.

அதிர்ச்சியில் முத்தையன் குடும்பமும் அக்கம்பக்கத்தினரும் வாய் பிளந்து நின்றிருக்க கும்பல் மீண்டும் முத்துசாமியின் வீட்டுக்குத் திரும்பியது.

ஃபோன் செய்த இன்ஸ்பெக்டரிடம் பழனிவேலு பேசினான்.

‘அவனுக்கு ஃபோன் பண்ணிப் பாத்தீங்களா?’

‘பாத்தோங்கய்யா, ஆனா நாட் ரீச்சபிள்னு வருது.’

‘சரி, நான் ஒருதடவ கூப்புட்டுப் பாக்குறேன்.’

‘சரிங்கய்யா.’

இன்ஸ்பெக்டர் முத்தையன் வாத்தியாருக்கு ஃபோன் அடித்தார். இப்போது ரிங் போனது.

‘நான் இன்ஸ்பெக்டர் சதாசிவம் பேசுறேன். எங்கிருக்கீங்க?’

‘திருச்சி பஸ்ஸ்டாண்டுல இருக்கேன் சார். மெட்ராஸுக்குப் போயிட்ருக்கேன்.’

‘சரி, உன் மேல ஒரு கம்ப்ளெய்ண்ட் வந்துருக்கு, அதனால நீ உடனே திரும்ப ஊருக்கு வரணும்.’

‘சார், என் மேல கம்ப்ளெய்ண்ட்டா? யாரு கொடுத்தது?’ என்று படபடப்பாகப் பேசினார் முத்தையன்.

‘அதெல்லாம் நேரிலதான் சொல்ல முடியும். நீ உடனே திரும்பி வரணும்.’

‘சார், தப்பா நெனக்காதீங்க. என் பொண்ணு கல்யாண விஷயமா மெட்ராஸ் போயிட்ருக்கேன். நாளைக்கு மாப்பிள்ளை வீட்டுக்குப் போறேன். நாளனைக்குக் காலைல வந்துருட்டுமா?’

‘ஓஹோ அப்படியா. சரி நீ இப்ப எங்க இருக்கன்னு சொன்ன?’

‘திருச்சி சென்ட்ரல் பஸ்ஸ்டாண்டுல சார்.’

‘ஒரு பத்து நிமிஷம் அங்கயே வெயிட் பண்ணு. நானும் திருச்சிலதான் இருக்கேன். நானே அங்க வர்றேன்.’

‘சார், உங்களுக்கு எதுக்கு சிரமம், நானே நாளன்னைக்கு வரேன்.’

‘நான்தான் வர்றேன்னு சொல்றேன்ல, அங்கயே வெயிட் பண்ணு.’

முத்தையன், இன்ஸ்பெக்டரின் வார்த்தையைத் தட்ட முடியாமல் அங்கேயே காத்திருந்தார். சொன்னது போலவே பத்து நிமிடத்தில் அவருக்கு ஒரு அழைப்பு வந்தது. ஆனால் அது இன்ஸ்பெக்டரின் நம்பர் இல்லை.

‘ஹலோ முத்தையன், எங்கிருக்கீங்க?’

‘மெட்ராஸ் பஸ் ஏர்ற எடத்துல இருக்கேன் சார்.’

‘சரி வர்றேன்.’

மீண்டும் ஃபோன் அடித்ததும் முத்தையன் எடுத்தபோது அவர் பக்கத்தில் இரு போலீஸ்காரர்கள் வந்து நின்றனர்.

‘முத்தையன்?’

தலையசைத்தவரின் கையிலிருந்த ஃபோனை வாங்கி ஆஃப் செய்து பேண்ட் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு ‘வாங்க’ என்ற சொல்லி அவர் புஜத்தைப் பிடித்து இழுத்தார் ஒரு போலீஸ்காரர்.

‘சார், இருங்க. என்ன விஷயம்? என்னை எங்க கூட்டீட்டுப் போறீங்க?’

‘சொல்றோம் வாங்க. ஐயா ஜீப்ல வெயிட் பண்றாரு. அங்க போய்ப் பேசிக்கலாம்.’

அவர்களோடு முத்தையன் நடந்து வெளியே வந்தபோது ஒரு போலீஸ் ஜீப் அவர்களுக்கருகே வந்து நின்றது.

‘சார், என்ன எங்க கூப்புட்டுப் போறீங்கன்னு சொல்லுங்க சார்.’

‘டேய் ஏறுடா உள்ள. எல்லா வெவரமும் சொன்னாத்தான் வருவியா?’ என்று முத்தையனைப் பிடித்திருந்த போலீஸ்காரர் நெட்டி ஜீப்பின் பின்சீட்டில் தள்ளினார்.

முத்தையன் உள்ளே விழுந்ததும் அவருக்கு இருபுறமும் அந்த இரு போலீஸ்காரர்கள் உட்கார்ந்துகொள்ள ஜீப் தஞ்சாவூர் நெடுஞ் சாலையில் விரைந்தது.

அடுத்த ஒருமணி நேரத்தில் ஜீப் தஞ்சாவூர் மானம்புச்சாவடியில் இருந்த ஒரு டைல்ஸ் குடோனுக்கு வந்து சேர்ந்தது. அங்கே இன்ஸ்பெக்டர், முத்துசாமி, பழனிவேலு, வக்கீல் ராஜமாணிக்கம் உள்ளிட்ட ஏழெட்டு பேர் ஏற்கெனவே வந்து சேர்ந்திருந்தனர்.

ஜீப்பிலிருந்து முத்தையன் இறங்கியதைப் பார்த்த முத்துசாமி அவரை அடிக்கப் பாய்ந்தான்.

‘தா.. இன்னும் ரெண்டு நாள்ல சாகப் போறவனாட்டம் இருந்துகிட்டு எம் பச்சபுள்ளைய சீரழிக்கிறியா?’

அருகிலிருந்த போலீஸ்காரர்கள் அவனை இறுகப் பிடித்துக் கட்டுப்படுத்தினார்கள். அதுவரை ஒரு தகவலும் தெரியாமல் குழம்பிப்போயிருந்த முத்தையன் முத்துசாமி சொன்னதைக் கேட்டு ஆடிப் போனார்.

‘ஐயோ, என்ன சொல்றீங்க? என்னையா சொல்றீங்க?’

‘ஆமாண்டா.. நீ பண்ண காரியத்துக்கு உன்னைக் கண்டுகண்டா வெட்டலாம்னு காத்திட்டிருக்கேன்.’

இடையில் புகுந்த ராஜமாணிக்கம், முத்தையனிடம் பூங்கோதை சொன்னதை விவரித்தார். அவர் சொல்லச் சொல்ல முத்தையன் ‘இல்ல..இல்ல’ என்று தலையாட்டி மறுத்துக்கொண்டே கதறி அழுது ராஜமாணிக்கத்தின் காலில் விழுந்தார்.

‘ஐயா, ஐயா! இது நெசமில்லிங்க. என் பொண்டு புள்ளைக மேல சத்தியமா சொல்றேன், இது பொய்யிங்க.’

உடனே இன்ஸ்பெக்டர் ‘டேய், கிழட்டு நாயே! உன்னை மாதிரி எத்தன பேர பாத்திருக்கேன். நீங்களெல்லாம் நாடகம் ஆடி எங்களை ஏமாத்திட முடியுமா? வாத்தின்னு மரியாதை கொடுத்தா நீ படிக்க வர்ற பச்ச புள்ள மேல கைய வைப்பியா?’ என்றவாறே ஓங்கி ஒரு அறைவிட்டார்.

முத்தையனுக்குப் பொறி கலங்கியது. காதுக்குள் ரீங்காரச் சத்தம் ஓங்கி ஒலிக்க கீழே விழுந்தவரை மற்றவர்களும் சேர்ந்து அடிக்கத் தொடங்கினார்கள். வலி தாங்காமல் அலறித் துடித்த முத்தையன் ஒரு கட்டத்தில் மயங்கிச் சரியும் நிலைக்கு வந்ததும் அடிப்பதை நிறுத்தினார்கள். ஒரு போலீஸ்காரர் போய்ப் பக்கத்துப் பெட்டிக்கடையில் ஒரு செவன்அப் வாங்கி வந்து முத்தையனுக்குக் குடிக்கத்

தந்தார். அடியால் வீங்கிக் கிழிந்த வாயில் சோடாவின் எரிச்சலைப் பொருட்படுத்தாமல் தாகம் தலைக்கேற மடமடவென அதைக் குடித்தார்.

இன்ஸ்பெக்டர் வக்கீலிடம் 'இவன இப்படி அடிச்சிட்டே இருந்தா செத்துருவான். நா வேணா மன்னார்குடி ஸ்டேஷனுக்குச் சொல்லி இவன் மேல போக்ஸோ கேஸு போடச் சொல்றேன். வேற என்னென்ன செக்ஷன் போடுறதுன்னு நீங்க சொல்லுங்க' என்றார்.

உடனே முத்துசாமியும் பழனிவேலும் ராஜமாணிக்கத்தைப் பார்த்து 'வேண்டாம்' எனத் தலையசைத்தார்கள்.

ராஜமாணிக்கமும் 'அதெல்லாம் வேண்டாம் சார், இவன எங்ககிட்ட விட்டுடுங்க. நாங்களே ஆக வேண்டியத பாத்துக்குறோம்' என்றார்.

இன்ஸ்பெக்டர் 'யோவ், அப்படி எதுவும் பண்ணிடாதீங்க. இவனுக்குக் கடைசியா நான்தான் போன் பண்ணிப் பேசியிருக்கேன். அப்புறம் சிக்கல்ல மாட்டிக்குவேன்' என்றார்.

'இல்ல சார். இவன நாளைக்கு எங்க ஊர் பஞ்சாயத்துல வச்சுப் பேசித் தீர்த்துக்கலாம்னு சொல்ல வந்தேன்.'

'அப்படியா, என்ன பண்ணலாம்னு இருக்கீங்க?'

'இவனுக்கும் ரெண்டு பொண்ணுங்க கல்யாணத்துக்கு இருக்கு. எங்க வீட்டுப் பொண்ணு வாழ்க்கை சீரழிஞ்ச மாதிரி அந்தப் பொண்ணுங்களுக்குக் கல்யாணமே நடக்காம இருக்க என்ன பண்றதுன்னு பேசி முடிவெடுக்கப் போறோம்.'

அதுவரை அரை மயக்கத்தில் இவர்கள் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த முத்தையன் திடுமென முழு நினைவு மீண்டு எல்லோரையும் கையெடுத்துக் கெஞ்சத் தொடங்கினார்.

'ஐயா, தயவுசெஞ்சு நான் சொல்றத நம்புங்க. நீங்க சொல்ற ஆளு நான் இல்ல. உங்க புள்ளகிட்ட மறுபடியும் நல்லா விசாரிச்சுப் பாருங்க. என் பொண்ணுங்க வாழ்க்கைய கெடுத்துறாதீங்க' என்று கதறி அழுதார்.

இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு 'சரி, சரி. மணி நைட்டு பன்னெண்டு ஆகப் போவுது. நீங்க எல்லாரும் ஊருக்குக் கிளம்புங்க. இவன நான் பாத்துக்குறேன்' என்றார்.

பூங்கோதையின் சொந்தக்காரர்கள் முத்தையனை முறைத்துப் பார்த்தபடி ஒன்றாக ஊருக்குக் கிளம்பினார்கள். அவர்கள் போன பின்னால் முத்தையனை இன்ஸ்பெக்டர் தன் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு ரயிலடிக்குப் பக்கத்திலிருந்த நைட்டு பரோட்டாக் கடைக்கு அழைத்துச் சென்று சாப்பிட வைத்தார்.

அப்போதும் முத்தையன் 'சார், நான் ஒண்ணுமே பண்ணல சார். யாரோ என் மேல தப்பா பழி போட்ருக்காங்க சார்' என்று தேம்பித் தேம்பி அழுதார்.

'அவங்க உன் மேல போக்ஸோ கேஸு கொடுக்காம இருந்தது நீ பண்ண புண்ணியம்னு நெனச்சிக்க. கேஸு கொடுத்துருந்தா நீ ஒரு வருஷத்துக்கு ஜாமீன்ல கூட வெளிய வர முடியாது. தண்டனை கெடச்சா உன் வாழ்க்கை ஜெயிலுக்குள்ளயே முடிஞ்சிருக்கும்.'

முத்தையனால் மேற்கொண்டு சாப்பிட முடியவில்லை. சுற்றிலும் சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள் வெறித்துப் பார்க்க, சப்தம் போட்டுக் கதறி அழத் தொடங்கினார்.

இன்ஸ்பெக்டர் 'இந்தாள அவங்க ஊர் எல்லைல எறக்கி விட்ருங்க. ஊருக்குள்ள ஜீப்ல அழைச்சிட்டுப் போக வேணாம்' என்று கான்ஸ்டபிள்களிடம் சொல்லிவிட்டுத் தன் வீட்டுக்குப் புறப்பட்டார்.

அவர்கள் முத்தையனை மேலமாங்குடி

ஊர் எல்லை தொடங்கும் செல்லமுத்தம்மன் கோவில் பேருந்து நிறுத்தத்தில் இறக்கி விட்டுவிட்டு, அவரிடமிருந்து பிடுங்கிய ஃபோனையும் கொடுத்துவிட்டுக் கிளம்பிப் போனார்கள்.

இடுப்பில் கசங்கி, நெகிழ்ந்து கிடந்த வேட்டியைச் சரிசெய்து கொண்டு ஊருக்குள் மெல்ல நடக்கத் தொடங்கிய முத்தையன், தன் குலதெய்வமான செல்லமுத்தம்மன் கோவிலைக் கடக்கும்போது தன்னை அறியாமல் வழக்கம் போலக் கையெடுத்துக் கும்பிட்டார்.

அடுத்த கணம் அவருக்குள் அடங்கியிருந்த ஆத்திரம், இயலாமை எல்லாம் அழுகையாகக் கொப்பளித்து வெளியே பொங்கியது.

'ஏண்டி செல்லாத்தா, இதுதான் நீ உன் மகனுக்குச் செய்யிற ஞாயமா? ஒரு தப்பும் செய்யாத என்னைய இப்படி முச்சந்தில அடி வாங்கி, சாக்கடைல விழுந்து பொறள வச்சிட்டீல்ல? வருசாவருசம் உனக்கு அவிசேகமும் அர்ச்சனையும் பண்ணேனே, அதுக்கு நீ கொடுக்குற வரம் இதுதானா?

நல்ல கைமாறு செஞ்சிட்டடி ஆத்தா. ஐம்பத்தேழு வயசுல இந்த வட்டாரத்துல நல்ல வாத்தியாருங்குற பேர தவிர வேறெதையும் சம்பாதிக்கல நானு. அதையும் இப்ப மண்ணோட மண்ணாக்கிட்டில்ல?

ஐயோ, நம்ம புருசன், தகப்பன் இப்படி ஒரு பொம்பள பொறுக்கியான்னு என் பொண்டாட்டி புள்ளைங்க உள்ளுக்குள்ள ஒடஞ்சி நொறுங்கிருப்பாங்களே? பாவி, பாவி. இதுக்கு என்னைய சாகடிச்சிருக்கலாமேடி' என்று தலையில் அடித்துக்கொண்டு, மண்ணில் புரண்டு கதறி அழுதார்.

அப்போது கோவில் முக்கில் இருந்த வேப்பமரத்தில் கட்டப்பட்டிருந்த பக்தர்களின் பிரார்த்தனை மணிகள் காற்றுக்கு அசைந்தன. 'டங்', 'டிங்', 'டொங்' என்று பலவிதமாக ஒலியெழுப்பிய மணிகளை அழுது வீங்கிய கண்களால் அண்ணாந்து பார்த்தார் முத்தையன். ஒரு வினாடி தலைதாழ்த்தி யோசித்துவிட்டு, பற்களால் உதடுகளைக் கடித்துக்கொண்டே வேகமாக எழுந்தார். வேப்பமரத்தடிக்கு நடந்து சென்று வேட்டியை அவிழ்த்து, தாழ்வாக இருந்த கிளையில் சுருக்கு போட்டார்.

பள்ளிக்கூடம் முடிந்ததும் வீங்கிய முகத்துடன் மைதானத்தின் மூலையில் இருந்த புளியமரத்தடியில் சுருண்டு உட்கார்ந்திருந்தான் சுகுமார். அந்த வழியாக வீட்டுக்குச் செல்ல சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்த பூங்கோதை நின்று சுகுமாரிடம் நலம் விசாரித்தாள்.

'ரொம்ப அடியாடா?'

'ஆமாண்டி. நடக்கவே முடியல. முட்டியும் முதுகும் வீங்கிருச்சு. எங்கயோ எலும்பு முறிஞ்சிருச்சுன்னு நெனக்கிறேன்.'

'அந்த வாத்தியார் கட்டைலதான் போவான். ஏண்டா, நீ ஆம்பளதானே? உனக்கு ரோசமே கிடையாதா? இப்படி அடி வாங்கியிருக்க?'

'நானெல்லாம் ஆம்பளதான். அந்தாளு மாட்டாமயா போயிருவான்? அப்ப பாத்துக்குறேன். ஆனா இப்ப வலி தாங்க முடியல. மருந்து எதாவது வச்சிருக்கியா?'

பூங்கோதை புத்தகப்பையைத் திறந்து ஒரு பாராசிடமால் மாத்திரையையும் தண்ணீர் பாட்டிலையும் எடுத்து சுகுமாரிடம் நீட்டினாள். அவன் அதை வாங்கி விழுங்கிவிட்டு மெல்ல மோட்டார் அறையை நோக்கி விந்திவிந்தி நடந்தான்.

'அங்கெங்கடா போற?'

'கொஞ்ச நேரம் படுத்துட்டுப் போறேன். வலி தாங்க முடியல.'

பரிதாபம் மேலிட பூங்கோதையும் அவனைத் தாங்கிப் பிடித்து மோட்டார் ரூமுக்குள் அழைத்துச் சென்றாள். சுகுமார் கதவைத் தாழிட்டான்.

●

ஆத்தா நா பாஸாயிட்டேன்

தொடர் 6

ஆண்டன் பெனி




# கூமாபட்டியும்... புத்தகத் திருவிழாவும்

புத்தகத் திருவிழா மூலமாக இலக்கியம் வளர்கிறது என்கிற ஒரு மாயை, சமீபகாலத்தில் எல்லோராலும் உண்மை என்றே நம்பப்பட்டு வருகிறது. வாசிக்கிற அயல்கிரகத்துவாசிகள் அய்யோ என்கிற வகையில் இருக்கிறது புத்தகத் திருவிழாக்கள்.

உண்மையில் இதை இலக்கியவாதிகளின் கெட் டூகெதர் நிகழ்வாகத்தான் பார்க்க முடிகிறது. இதில் மண் எழுத்தாளர்களை மதிக்கவில்லை, உள்ளூர் எழுத்தாளர்களுக்குப் பரிவட்டம் கட்டவில்லை என்கிற அக்கப்போர்கள் வேறு. எல்லா இலக்கியவாதிகளுக்கும் மேடை இலகுவாக அமைந்துவிடுவதில்லை. கட்டிக் குளிக்கிறதுக்கும் பயன்படாத ஒரு சால்வைக்காக கத்துற கத்து கூமாப்பட்டிக்கே கேட்டிருக்கும்.

மட்டுமில்லாமல் உள்ளூர் எழுத்தாளர்களுக்கு மேடையைப் பகிர வேண்டும் என்று கட்டாயப்படுத்தினால் மேடையின் டிசைனையே மாற்ற வேண்டியிருக்கும். அதாவது அரங்கம் முழுக்க மேடையைப் போட்டுவிட்டுப் பார்வையாளர்களை வீட்டிலேயே விட்டுவிட வேண்டும். வீட்டுக்கொரு இலக்கியவாதிகள் பெருகிவிட்ட இந்த நல்லதொரு ஆரோக்கியமான சூழ்நிலையில் உள்ளூர்ப் படைப்பாளிகள் அமைதியை விரும்புவது நல்லது.

'என்னோட புக் வாங்கிட்டீங்களா?' டோக்கன் கொடுக்கும் நுழைவு வாயிலில் நின்று கேட்கும் எழுத்தாளரிடம் 'போன வருசமே வாங்கிட்டேன்' என்ற என்னிடம், 'இந்த வருசம் அட்டைப்படம் மாத்தியிருக்கேன், வாங்குங்க நல்லாருக்கும்' என்றழைக்கும் அவரிடமிருந்து உயிர் பிழைப்பது மிகவும் கடினமாக இருந்தது. எழுதின ஆறு புக்கையும் வாங்குன பிறகு மொத்தத் தொகுதி போட்டு அதையும் வாங்கச் சொல்லும் வன்முறைக்கான தீர்வு இபிகோவின் எந்தப் பிரிவில் இருக்கிறது என்று தெரியவில்லை.

'நான் எம்மாம் பெரிய எழுத்தாளர், என்கிட்ட நுழைவுக் கட்டணம் கேட்பது முறையில்லை. மேற்கத்திய நாடுகளில் எழுத்தாளர்களைக் கொண்டாடிய காரணத்தால் மட்டுமே அந்த நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன' என்கிற பொருளாதாரப் புள்ளிவிபரங்கள் மலைக்க வைக்கின்றன.

எழுத்தாளர்களுக்கு நுழைவுக் கட்டணம் கூடாது என்றால்.. முப்பது கோடி சனத்தொகையில் இன்னமும் எழுத்தாளராகாத அந்த முன்னூறு பேரு பாவம். ஊரிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் செலவழித்து வந்தாச்சி, ஆனாலும் நுழைவுக் கட்டணம் பத்து ரூபாயில் வந்து நிற்கிறது ஒரு எழுத்தாளனின் ஈகோ.

'புத்தகத் திருவிழாவில் சினிமாக்காரர்களுக்கு என்ன வேலை?' என்கிற மாபெரும் கேள்வியும், அதனைத் தொடர்ந்து 'சினிமா

பற்றித் தெரியாத இலக்கியவாதிகள் சினிமா பற்றி விமர்சனம் செய்யும்போது... இலக்கியம் தெரியாத சினிமாக்காரர்கள் புத்தகம் பற்றிப் பேசினால் என்ன குறைந்துவிடப் போகிறது?' என்கிற எதிர்க் கேள்வியும் ரசிக்க வைக்கின்றது. எல்லாவற்றிற்கும் கூட்டம் கூட்டுவதே பிரதானமாகிப்போன பிறகு இதெல்லாம் தவறில்லை என்ற மனநிலைக்குப் பழகிவிட வேண்டும்.

இவர்களிடமிருந்து தப்பித்தால், பிறிதொரு சமூகம் இப்படியாக இருக்கிறது.. அதன் விபரம் வருமாறு;

'புக் பேருக்கு இன்னும் போகலயா? நான் பேமிலியோட போயிட்டு வந்துட்டேன். 'இரானியன் சாய்'னு ஒரு புது டீ வந்துருக்கு. பிள்ளைங்க ரொம்ப விரும்பிச் சாப்டாங்க' சொல்லி மகிழும், அந்தத் தாயையும் தகப்பனையும் நான் வணங்குகிறேன். அரங்கத்தின் 'வெண்ணிற இரவுகள் எழுபது ரூபா.. மசால் வடை எம்பது ரூபா' என்கிற சமன்பாடு எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

'திஸ் இயர் ஐ ஹேவ் பர்சேஸ்டு புக்ஸ் பார் டென் தவுசண்ட்' என்றவரிடம், 'லாஸ்ட் இயர், எவ்ளோ படிச்சீங்க?' என்ற கேள்வியைக் கேட்டபோது, 'புக் இஸ் எ இன்வெஸ்ட்மெண்ட்' என்றார். ஆனால் யாருக்கு என்றுதான் தெரியவில்லை.

'பொன்னியின் செல்வன் நல்லாருக்கும்னு சொன்னா.. மணிரத்னம்கூட படமா பண்ணியிருக்காளாமே.. அதான் இருக்கட்டுமேன்னு வாங்கினேன். வீட்ல எவ்வளவோ சும்மா கெடக்கு, இதுவும் இருந்துட்டுப் போகட்டுமே.'

'என்னது எதை எடுத்தாலும் நூறு ரூபாயா? இட்ஸ் ஓகே.. இதுல வேள்பாரி இருக்கா?'

'எங்க மாமா செக்ரடேரியட்ல பெரிய ஆபீஸரா இருக்காரு, இன்னும் பத்து பர்ஸண்ட் டிஸ்கவுண்ட் தரமுடியுமா?'

'டெல்லி அப்பளம் வர வர நல்லாவே இல்லை.. சைஸ் வேற குறைஞ்சிருச்சி.'

இலக்கியவாதிகளுக்கு இணையாக இப்படியான ஆர்ப்பாட்டங்களும் நடக்கின்றன.

'எவ்வளவு பிரச்னைகளுக்கு மத்தியிலும் ஒரு பூ பூக்கத்தானே செய்கிறது' என்ற பிரபஞ்சன் வரிகளை நினைவுபடுத்துகிற வகையில் சில வாசகர்களும் அமைதியாக வந்து திரும்பியிருக்கிறார்கள். அவர்களால் மட்டுமே ஆடி மாதத்திலும் மழை பெய்கிறது.

இமான் அண்ணாச்சியோட டேபிள்மேட்டுக்குப் பிறகு வீட்டுக்கு வீடு இருக்க வேண்டிய ஒன்று அரவிந்தசாமி அண்ணாச்சியின் பணம்சார் உளவியல் புத்தகம். புத்தகத் திருவிழாவிலிருந்து வெளியேறும் அனேகம் பேரின் கைகளில் இருந்தது. ஒரு அம்மணி கைக் குழந்தையை நடக்கச் சொல்லிட்டு, அதை வாசித்தபடியே போறாங்க.


முந்தைய காலங்களில் பொன்னியின் செல்வனுக்கு மட்டும் புத்தகத் திருவிழாக்கள் நடந்த மாதிரி இந்த வருசமே பணம்சார் உளவியல் புத்தகத்திற்கும் தனியே விழா நடந்தால் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

வீட்டில் தனியாக புத்தக ரேக் இருந்தால் சமூகத்தில், தன்னை ஒரு அறிவு ஜீவியாகக் காட்டிக்கொள்ளும் முனைப்பில் ஒரு கூட்டம். தவிரவும் கோவில் திருவிழா தவிர்த்துக் கூடுதலாக ஒரு திருவிழா கிடைத்திருக்கும் மகிழ்ச்சியில் ஒரு கூட்டம் என, சமூகம் தனது பொழுதுபோக்கு அம்சங்களில் புக்பேரையும் சேர்த்திருப்பது நகைமுரண்.

இத்தனைக்கும் மத்தியில்.. 'என்னைய புக்கு போடச் சொல்லி வற்புறுத்துறீங்க. எப்போ நாம நாலு பேரை அடிக்க ஆரம்பிச்சமோ அப்பவே நாம தேடப்படும் குற்றவாளிகள் பட்டியல்ல வந்திடுறோம். உங்களுடைய துன்புறுத்தலுக்குப் பயந்து நானும் புக்கு போட்டு.. புக்பேர் வாசல்ல டோக்கன் தர விரும்பல' என்று கூறிக்கொண்டு அமர்கிறேன். நன்றி வணக்கம்.

சிறுகதை

லக்ஷ்மி ஜயராமன்



# வண்டுவாஞ்சேரி வாணராயன்

ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

அமுதா மீது கோபம் கோபமாக வந்தது!

'பத்திரிகைக்காரங்க வந்தது என்னைப் பேட்டி எடுக்க.. இவளை யார் பேசச் சொன்னாங்க, முந்திரிக் கொட்டை மாதிரி? சே... அந்த ரிப்போர்ட்டர் என்னவெல்லாம் எழுதப் போறானோ?'

"முதற்பரிசு அதுவும் 'கேதகி' இதழின் கவிதைப் போட்டியில் முதற்பரிசு என்றால் இத்தனை தடபுடலும் உண்டு" என்பது தெரியாமல் இல்லை வல்லவனுக்கு.. ஆனால், இந்த வாயாடி இப்படி மானத்தை வாங்குவாள் என்று அந்தக் கவிஞன் எதிர்பார்க்கவில்லை!

நிருபர் வரப்போகிறார் என்பதைப் பக்கத்து வீட்டுக்காரியிடம் தம்பட்டம் அடித்திருக்கிறாள். "அடி லக்கி டி நீ.. வீடியோ எல்லாம் கூட எடுப்பாங்க" என்று உசுப்பிவிட்டாள் அந்தப் பொறாமைக்காரி. அவ்வளவுதான், எந்த நாளும் காலை 7:30க்கு முன் எழுந்திராத அமுதா அன்று அதிகாலையிலேயே எழுந்து நீராடிவிட்டு அகலக்கரை போட்ட பட்டுச்சேலையையும் மேட்சிங் ரவிக்கையையும் அணிந்துகொண்டு உதட்டுச் சாயத்துடன் ரெடியாகிவிட்டாள்.

ஷேவ் செய்தபடி இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த வல்லவனுக்கு வியப்பாக இருந்தது. கவிதையில் வடிக்கும் காட்சிகளை விட, நிஜ வாழ்க்கை நிகழ்ச்சிகள் சுவையாக இருக்கின்றனவே! பப்ளிசிட்டிக்கு இவ்வளவு ஆற்றலா!

இதுவரை அவள் தொட்டுக்கூடப் பார்த்திராத அவனது கவிதைத் தொகுப்புகள் இப்போது ஷோகேஸில் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. வெட்டிங் ஃபோட்டோ சுத்தமாகத் துடைக்கப்பட்டு 'என்னைப் பார்' என்றது.

ரேசர் கன்னத்தில் நகர்ந்தபோது பளிச்சிட்டது ஒரு பேருண்மை: "ஆ! என்னைக் கட்டிக்கிட்ட பெறவுதான் இவருக்கு யோகம்" என்று வருவோர் போவோரிடம் எல்லாம் அடிக்கடி சொல்லுவாளே, 'கேதகி' இதழில் இதை நிரூபிக்கத்தான் இந்த ஏற்பாடா?

சரசரவென்று வேலையை முடித்துவிட்டு பாத்ரூமுக்குள் நுழைந்தான். 'அடியே அமுதா, ஒன்னையா அப்பாவின்னான் ஒன் அப்பேன்!'

இதுநாள் வரை அலமாரியில் தூசு படிந்து கிடந்த ஆடியோ கேசட், இப்போது இசையைப் பரப்பிக்கொண்டிருந்தது. 'இது கவிஞன் இல்லம்' என்று புகைக் கீற்றுகளால் காற்றில் வரைந்துகொண்டிருந்தது அகர்பத்தி. தினமும் யாராவது ஒரு பத்திரிகை நிருபர் விஜயம் செய்தால் கூடத் தேவலை வீடாவது பார்க்க லட்சணமாக இருக்கும்.

நிருபரையும் புகைப்படக்காரரையும் முதலில் முகமன் கூறி வரவேற்றது அவள்தான். பின்னால் வந்த கணவன் அவர்களுடன் கைகுலுக்கிவிட்டு அமர்ந்தான். அமுதா ஓடியாடி உபசரித்தாள். 'இந்த வீட்டில் அம்மையார் ஆட்சிதான்' என்பதை ஊகித்துவிட்டது போல் எடுத்த எடுப்பிலேயே பரபரவென்று எதையோ குறித்துக்கொண்டார் நிருபர். புகைப்படக்காரர் அனுபவசாலி. அக்கவிஞன் இயல்பாக அவர் பக்கம் முகத்தை நிமிர்த்தியபோது ஸ்நாப் அடித்துவிட்டார். 'அட' என்று கிரீச்சிட்ட அமுதாவும் அந்தப் போஸில் கேமராவுக்குள் சிக்கிக்கொண்டாள். இருந்தாலும் உள்ளூர அவளுக்கு ஏமாற்றமே –வீடியோ கேமரா வரவில்லை என்பதில்...

"கல்யாணமான புதுசிலே தோசைக்குத் தொட்டுக்க கடப்பா வெச்சேன்... 'ஆஹா'ன்னாரு. அடுத்த நாளே ஒரு கவிதை ரெடி."

தான் விரலை அசைத்தால் கவிதை மழை பொழியும் அந்த வீட்டில் என்பதுதானே பொருள்! குறுகிய காலத்தில் மடமடவென்று தனது கவிதைகளை மேம்போக்காகப் படித்துவிட்டு இந்தப் போடு போடுகிறாள்! வல்லவன் திகைத்துப் போனான்.

முகத்தில் குறுநகை தவழ நிருபர் குறிப்பு எடுத்துக்கொண்டே போனார். 'அடப்பாவி, இது மதுரைதான்; சிதம்பரம் இல்லை, என்று எழுதுகிறானோ?' வண்டுவாஞ்சேரி வாணராயன் என்ற பெயர் ஒன்றே அந்த புருஷனைச் சேர்ந்தது என்று பத்திரிகையில் வந்துவிடுமோ?

"ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள்ம்பாங்க, நீங்க என்ன சொல்றீங்க?" பற்கள் தெரியச் சிரித்தபடி கேட்டார் நிருபர்; கண்களோ அமுதாவையே பார்த்துக்கொண்டிருந்தன. உட்கார்ந்த வாக்கிலேயே சோபாவுக்குப் பின்னால் சுவரைப் பார்த்து, "பின்னாலயா?" என்று கேட்டான் கிண்டலாக. திரும்பும்போது பேனா காகிதத்தில் சரசரவென்று எழுத்துக் கோலங்களைப் போட்டதைப் பார்த்தான். நேரடியாகப் பதில் சொல்லாமல் தான் காட்டிய இந்த 'அவிநயக் குறிப்பு', நிருபருக்கு வைத்த செக்கென்றும் அமுதாவின் கொட்டத்திற்கு வைத்த குட்டு என்றும் எண்ணித் தனக்குள் சிரித்துக்கொண்டான்.

"தேங்க்ஸ் சார்.. நன்றி மேடம்.."

அவர்களை வழியனுப்பிவிட்டு எரிச்சலுடன் திரும்பி வந்தான். 'மேடம்' அங்கே இருந்தால்தானே? பக்கத்து வீட்டு வனிதாவின் பொறாமையை விசிறிவிட ஓடிப்போயிருந்தாள்! சமையலறையில் திறந்து கிடந்த பாலை ருசி பார்க்கத் திருட்டுத்தனமாக நுழைந்திருந்த பூனை, அவனைக் கண்டதும் 'விசு'க்கென்று தாவி மறைந்தது.

ஏற்கெனவே தன்மீது ஆதிக்கம் செலுத்தி வரும் அமுதா அவளைப் பற்றி அச்சில் நாலு வார்த்தை வந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். தனக்குள்ள கொஞ்ச நஞ்ச மரியாதையும் போய்விடும். ஓர் உந்தல்.. மேட்டர் அச்சேறுவதற்குள் அந்த நிருபனைப் பார்த்துக் கொஞ்சம் பேசிவிட வேண்டும். வேகமாக ஸ்கூட்டரை நோக்கி நடந்தான்; சற்று நிதானித்தான் – 'சே! அசிங்கம்.. அவனிடம் என்ன சொல்வது? 'என் மனைவியை ரொம்பப் புகழ்ந்து எழுதிவிடாதீர்கள்' என்றா...? பைத்தியக்காரத்தனம்! ஏதாவது சொல்லப்போக பத்திரிகைக்கு 'பஞ்ச்' வேண்டுமென்ற குஷியில் காது மூக்கு வைத்து எதையாவது எக்கச்சக்கமாக எழுதிவிடுவான்; அது தனக்கே அவமானம்.. அந்த ஐடியாவை விட்டுவிட்டுத் திரும்பினான். இனிமேல்

இவளிடம் கொஞ்சம் கடுமையாகவே நடந்துகொள்ள வேண்டும்!

தொண்டைக் கமறலுடன் அலறிவிட்டு ரயில் ஸ்டேஷனில் இருந்து நகர்ந்தது. 'கேதகி'யில் வந்துள்ள பாராட்டுக் கட்டுரையை ஜன்னல் பக்கம் நகர்ந்து வல்லவன் படிக்கத் தொடங்கினான். 'கவிதை எழுதுவதை விட, கவிஞனைப் பற்றி எழுதுவதுதான் கடினம்' என்று பொடி வைத்து ஒரு மாதிரியாகத் தொடங்கியிருந்தார் நிருபர். 'ரேக்ளா ரங்கன்', 'மோரி மணக்குது', 'ஆளோடி ஆரோக்கியசாமி', 'தூதாண்டிக் கோல்', 'மாப்பிள்ளைத் திண்ணை', 'மோட்டுத் தெரு மோழை மாடு'.. இப்படி, பல தலைப்புகளில் தஞ்சை மாவட்டத்துக் கிராமிய மணம் கமழ, நூற்றுக்கணக்கில் கவிதைகளை யாத்திருக்கும் இக்கவிஞர், திருமணமாகியும் பிரம்மச்சாரி குறும்பை விடாதவர்! இப்போட்டிக்கு இவர் அனுப்பிய கவிதையைப் பாருங்கள்: 'நரிக்குடி நெல்சன்' –டக்கரான டைட்டில்! 'வண்டுவாஞ்சேரி வாணராயன்' அதிர்ஷ்டசாலி. அடக்கமே உருவான பெண்மணியைத் தம் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றுள்ளார்! இவர் இல்லத்தில் நடைபெற்ற பேட்டி முடியும் வரை அவ்வம்மையார் அமைதி காத்த அழகே அழகு! 'வல்லவன்' என்னும் இயற்பெயர் கொண்ட இக்கவிஞர் செயலிலும் வல்லமை படைத்தவர்தாம். நுட்பமான விஷயத்தை, தட்டிக் கழிப்பது போல் முதுகுப்புறம் எதையோ தேடினார். சொல், எழுத்து, செயல் அனைத்திலும் இவரது துணைவியாரின் அடக்கமே ஆதிக்கம் செலுத்திவருகிறதோ என்று தோன்றுகிறது! விசித்திரமான இத்தம்பதியருக்குக் 'கேதகி'யின் வாழ்த்துக்கள்.

கவிதையும் பாராட்டுக் கட்டுரையும் பிரசுரமான பிரதிகள் இரண்டு வீட்டில் இருந்தன; என்றாலும், டூரில் மீண்டும் படிக்க இரண்டு பிரதிகளைக் கடையில் வாங்கிக்கொண்டு போயிருந்தான். படிக்கப் படிக்கப் பூரிப்பு. ரயிலில் இருந்தபோதுதான் இந்தக் 'கருத்துப் பாய்ச்சல்' வெளிப்பட்டது: 'இனிமேல் அமுதாவின் போக்கு எப்படி இருக்கும்?'

ஊருக்குத் திரும்பியதும் ஒரு கடிதத்தை நீட்டினாள் அமுதா. வியப்புடன் வாங்கிப் படித்தான். 'செவ்வி' என்ற பத்திரிகையில் இருந்து 'திருமதி. அமுதா வல்லவன்' என்று அவள் பெயருக்கு வந்திருந்தது. கண்களை ஓட்டினான்; படிக்கப் படிக்கப் புருவங்கள் உயர்ந்தன; அவ்வப்போது நெரிந்தன. "'கேதகி'யில் பாராட்டப்படும் அளவுக்குக் கணவரை ஊக்குவித்து, பெரிய கவிஞராக உயர்த்தியிருக்கிறீர்கள். நீங்களும் கவிதை புனைவதில் வல்லவர் என்று ஊகிக்கிறோம். தேவையற்ற அடக்கத்தை விட்டு, வெளிச்சத்திற்கு வராத தங்களின் கவிதைகளைத் தயங்காமல் அனுப்புங்கள். பிரசுரிக்க நாங்கள் இருக்கிறோம்.." இதற்கு மேல் படிக்க விரும்பவில்லை. பார்வையைத் திருப்பியபோதுதான், 'பிரசுரத்திற்கு ஏற்றதாக இல்லை' என்று அவனுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட கவிதைகள் மேஜை மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டான். அவளைப் பார்த்தான்.

"இதையெல்லாம் என் கையெழுத்திலே மறுபடியும் எழுதி, என் பேரிலே இந்தச் 'செவ்வி'க்கு அனுப்பப் போறேன்!" திகைத்துப்போய் விட்டான் வண்டுவாஞ்சேரி வாணரையன் என்கிற வல்லவன். "ஆமாங்க, வனிதா சொல்லி இருக்கா 'எழுதினது திரும்பி வந்துட்டா, கவலைப்படக் கூடாது; அன்னிக்கு அவிங்க மூடு அப்டி.. அதையே வேற கவர்ல போட்டு வேற ஒரு பத்திரிகைக்கு அனுப்பிடணும், இல்லையா, கொஞ்ச நாள் கழிச்சு, திருப்பி அனுப்பின அந்தப் பத்திரிகைக்கே அனுப்பினா போட்டுடுவாங்க!'"

...???

"நிச்சயம் போட்டுடுவாங்க ஏன்னா இன்னொரு நாள் வேற மூடுல இருப்பாங்க!"

சமயம் பார்த்து அடுக்களையிலிருந்து வெளியேறிய பூனையை இருவருமே பார்க்கவில்லை!!!

•

# அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..

கடிதம் – 77

எழுதியவர் : சிற்றிதழாசிரியர் குன்றம் மு.இராமரத்நம்

23.5.96

அன்புக் கவிஞர் விக்ரமாதித்யன் அவர்களுக்கு,

அன்பும் வாழ்த்துக்களும்.

தங்கள் கடிதம் இணைப்புக்களுடன் வந்து இருந்தது. தங்கள் கவிதைகளில் ஒரு கவிதை ஜூன் இதழில் வெளியாகும். அடுத்த கவிதை ஜூலை இதழில்.

கவிதையோ – கட்டுரையோ, அவற்றை வெளியிடும்போது அவற்றின் இறுதியில் (சில சமயம் மட்டும்) 'ஜோக்' போல ஏதாவது குறும்பாக எழுதுவது என் வழக்கம். அது உங்கள் கவிதைக்குக் கீழே ஆசிரியர் குறும்பாகச் சில வரிகள் இடம்பெறுகிறது என்பதை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் நூலுக்கு நிதி கோரும் உங்கள் வேண்டுகோளை அப்படியே இதழில் வெளியிடவில்லை. அப்படியே சில இதழ்கள் வெளியிட்டிருப்பதையும் பார்த்தேன்.

'கவிஞர் விக்ரமாதித்யன் தேரோட்டம்' என்ற தலைப்பில் உங்களைப் பற்றிச் சில விவரங்களைக் கொடுத்து நானே வேண்டுகோள் விடுப்பது போல இதழில் வெளியிட அச்சுக்குக் கொடுத்துள்ளேன். அதை இதழிலேயே படியுங்கள்.

அநேகமாக நம் இதழ் ஜூன் முதல் வாரத்தில் வெளியாகும். அது வெளியாவதற்கு முன் என் சொந்தப் பொறுப்பில் ஒரு சிறு தொகை என் சிற்றுதவியாக அனுப்பிவைப்பேன்.

உங்கள் படைப்புக்களின் நுவல் பொருள் என் பார்வையில் சரியில்லாமல் இருக்கலாம். அதற்காக அத்தகைய படைப்புகள் புறமொதுக்கப்பட வேண்டியவை அல்ல. கருத்து முரண்களே புதுமை பூக்கும் மூலங்கள் என்பது என் எண்ணம்.

நேரங்கிடைக்கும்போது தாராமதிக்கும் நீங்கள் எழுதலாம். கூடுமானவரை வெளியிட முயற்சிப்போம்.

தாராமதி – 136 (மே இதழ்) தனியே தங்கள் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஜூன் இதழ் தொடரும்.

மிக்க அன்புடன்,

குன்றம் மு.இராமரத்நம்

ஆசிரியர், தாராமதி.

...

கடிதம் – 78

எழுதியவர் : சிற்றிதழாசிரியர் குன்றம் மு.இராமரத்நம்

25.6.96

அன்புள்ள கவிஞர் விக்ரமாதித்யன் அவர்களுக்கு,

அன்பும் வாழ்த்துக்களும்.


தங்கள் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி.

தாங்கள் தாராமதிக்குக் கவிதை அனுப்புவதாக எழுதியிருந்தீர்கள். நன்றி. உங்கள் வசதி போல அனுப்புங்கள். ஜூலை இதழில் தங்கள் 2வது கவிதை (பாதி இருட்டு பாதி வெளிச்சம்) பிரசுரமாகியுள்ளது.

சிற்றிதழ்களில் தாங்கள் வெளியிட்ட அறிக்கைக்கு 'Response' எப்படி இருக்கிறது? தங்கள் நூல் வெளியீட்டுச் செலவைத் தாங்கும் அளவு உதவிக்கரங்கள் நீண்டதா? நூலின் அச்சாக்கம் எந்த அளவில் உள்ளது.

– குன்றம் மு.இராமரத்நம்

...




*கடிதம் – 79*

*எழுதியவர் : சிற்றிதழாசிரியர் குன்றம் மு.இராமரத்நம்*

புலமைப் பண்ணை

கோவை–641007

03.08.1996

அன்புக் கவிஞர் விக்ரமாதித்யன் அவர்களுக்கு,

வாழ்த்துக்கள்.

செப்டம்பர் – 96 சிறப்பு இதழில் தாங்கள் பேசப்படுகிறீர்கள் என்பதை தாராமதி – 136 (ஆகஸ்டு) இதழ் வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

இதுவரை தங்களைப் பற்றி எவரிடமிருந்தும் கட்டுரை வரவில்லை. வராது. இது சோம்பேறித்தனம் எழுத்தாளர்களுக்கு என்று சொல்ல முடியாது. பல எழுத்தாளர் – கவிஞர் உறவுகளுக்கு சதா தன்னைப் பற்றித்தான் நினைப்பு – தன் படைப்புக்கள் பற்றித்தான் கவலையும் ஆவலும்.

சற்று நெம்பினால் எழுதுவார்கள். அதுவும் நிஜத்தை எழுத மாட்டார்கள், தடவுவார்கள் – பூச்சூட்டுவார்கள் – பொடி வைப்பார்கள் – எல்லாமே செய்வார்கள்.

ஏன் இப்படி இந்த இந்தத் தமிழ் எழுத்தாள – கவிஞர்கள்? சங்கடமாக இல்லை?

நானே வரைந்து தள்ளிவிடுவேன். ஆனால், இதழ்களில் வரும் ரெண்டொரு கவிதைகளைத் தவிர, நான் உங்கள் கவிதைகள் எதையும் படித்தவன் இல்லை – உங்கள் நூல்களைப் பார்த்தவன் இல்லை.

வேண்டாம். நம் இதழில் நாமே எழுதித் தள்ளுவதும் சரி இல்லை.

என்னைத் தெரியாது பலருக்கு. உங்களை அனைவருக்குமே தெரியும். இன்னும் தெரிய வேண்டும் என்பதுதான் என் அக்கறை. புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறார்களே!

ஒன்று செய்யுங்கள். உங்கள் அன்பு நண்பர்களுக்கு எழுதுங்கள். உங்களைத் தூற்றும் பகைமுக நண்பர்களுக்கும் எழுதுங்கள். உங்கள் அன்பை – உங்கள் தூற்றலை ஏற்று விளம்பரிக்க ஒரு இதழ் முன்வந்துள்ளது – கொட்டுங்கள் உங்கள் உள்ளத்தை என்று – இது பலருக்குச் சங்கடமாக இருக்கும் – உங்களுக்கும்தான். நம்மைப் பற்றி எழுதுமாறு நாமே எழுதுவதா என்று. ஆனால் அப்படித்தான் நடக்கிறது – உங்களுக்குத் தெரியாதா? எனக்குத் தெரியும்.

உங்களுக்குச் சங்கடமானால்.. எனக்கு அந்தப் பணியைத் தாருங்கள். நானே எழுதிக் கேட்கிறேன்.

1. உங்கள் உற்ற நண்பர் — எழுத்தாளர்கள் – வாசகர்கள்

2. உங்களை ஒருவிதமாகப் பார்க்கும் பகைமுகத்தார்

இருவர்கள் முகவரிகளையும் சேர்த்தே (தனித்தனியாக) எழுதி அனுப்புங்கள்.

உங்கள் படைப்புப் பற்றி – உங்கள் திறம் உரம் பற்றி வரும் செய்திகள்தான் தேர்ந்து தொகுக்கப்படும் – உங்கள் சொந்த வாழ்க்கை (எழுத்து வாழ்க்கை அல்ல), உங்கள் பழக்க வழக்க சுபாவச் சித்தரிப்புக்கள் எனக்குத் தேவை இல்லை, நல்ல கவிஞர் – கலைஞர் பற்றி – அவர்கள் வாழ்க்கை வரலாறு குறித்து அனுப்ப ஆசைப்படுவது சகஜம், அதற்கு இது போது அல்ல.

விலாசங்களை விரைவில் அனுப்ப வேண்டுகிறேன். மலர் அச்சில் உள்ளது. தொடர்ந்து மேட்டர் கிடைக்க வேண்டும்.

மீண்டும் வாழ்த்துக்களோடு,

கு.மு.இராமரத்நம்

உங்கள்
உலகத்திற்குள்
என்னை
திணித்துக்கொண்டே
இருப்பதை
விட்டுவிட்டு
என் உலகிற்கு
கொஞ்சம் வாருங்கள்
புத்தகங்கள்
எழுத்துக்கள்
கவிதைகள்
இசை
அவள்
அவ்வப்போது
கொஞ்சம்
மூச்சுக்காற்று
*
ஒரே ஒரு
வாழ்க்கைதானே
எனக்காக
வாழ்ந்துவிட்டு
போகிறேன்.
*
எல்லாவற்றையும் இழப்பதற்காகவாவது
ஒருமுறை
பெற்றுக்கொள்கிறேன்

- மு. ரகுபதி

## பிடிக்காதவர்கள்

அறுந்த செருப்புகளை
அவர் அமர்ந்துகொண்டிருக்கிற
சிறிய குடையைச் சுற்றி
அடையாளமாக
அடுக்கிவைத்திருக்கிறார்
நிழல் நகர நகர
நிழலுக்கு
நகர்ந்துகொள்வார்
இந்தச் சாயங்கால வேளையில்
நிழல் சாலையோரத்திற்கே
வந்துவிட்டது
எதை எதையோ
நினைத்துக்கொண்டு
சாலையிலிருந்து
அவரை நோக்கி
ஒன்றிரண்டு அடி வைத்து
வரத் தயங்கிய
கால்களுக்கு
இப்போது
தயங்க அவசியம் இருக்காது...

- ச.ஜெய்


படைப்பு
சமூகத்தின் இணைப்பு
சிறைவாசிகளுக்கு
புத்தக தானம் செய்வீர்...!
#ஒரு_நூல்_புரட்சி
“ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரிய எண்ணத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலை நூலகங்களுக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு நூல்களை சேகரித்துக் கொண்டிருக்கிறது
இலக்கிய படைப்பு குழுமம்.”
புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
இலக்கிய படைப்பு குழுமம்
#03, அஜந்தா டவர், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு, கோடம்பாக்கம், சென்னை-600 024.
Ph : +91 73388 97788
padaippu
www.padaippu.com
admin@padaippu.com